
# புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கள்



என். சிறிரஞ்சன்

குமரன் புத்தக இல்லம்

069
ர

# புலம் பெயர்ந்தவர்களின்
# பொருளாதாரப் பங்களிப்புக்கள்

# புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கள்

**என். சிறிரஞ்சன்**
B. Com. (Jaffna), MBA (Sri J.)

**குமரன் புத்தக இல்லம்**
**கொழும்பு - சென்னை**

வெளியட்டு எண் : 189

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
- 361-1/2, டாம் வீதி, கொழும்பு-12, தொ.பே. 2421388,
மின் அஞ்சல் : kumbh@sltnet.lk இணையம்: www.kumaranbookhouse.com
- 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி, சென்னை - 600 026

புலம்பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கள்
- என். சிறிரஞ்சன் எழுதியது

பதிப்புரிமை © 2005 என். சிறிரஞ்சன்

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது
- 361-1/2, டாம் வீதி, கொழும்பு - 12 .

அட்டை வடிவமைப்பு : கனவு நிலையம்

*Published by* **Kumaran Book House**
- 361-1/2, Dam Street, Colombo - 12, Tel. - 2421388,
E.mail : kumbh@sltnet.lk. Web: www.kumaranbookhouse.com

**Economic Contribution of the Diaspora**

By N. Sriranjan

Copyright © 2005 by N.Sriranjan

*Printed by* **Kumaran Press (Pvt) Ltd.**
- 361-1/2, Dam Street, Colombo -12

***Cover Designed by* Dream Station**

**ISBN: 955-9429-74-4**

All rights reserved. No part of this book may be reproduced, translated, stored in a retrieval system, or transmitted in any form or by means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without prior written permission from the Author or the Publisher.

# சமர்ப்பணம்

எனது ஆரம்பக் கல்வி ஆசிரியரும் தாய் மாமனும் ஆகிய

## அமரர் சி. தருமலிங்கம்

அவர்களுக்கு

# உள்ளடக்கம்


பக்கம்

அணிந்துரை

முன்னுரை

1. புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கள் — 1
2. தாயக மக்களும் வெளிநாட்டு பணமும் — 3
3. கனடாவில் சங்கானைச் சந்தை — 8
4. நாட்டிற்கு வந்து செல்லும் புலம் பெயர்ந்தவர்களும் சுற்றுலாப் பயணிகளும் — 14
5. அழிந்து போயுள்ள பொருளாதாரத்தினை மீள் கட்டி யெழுப்ப உதவும் புலம் பெயர்ந்தவர்களின் முதலீடுகள் — 19
6. புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புகள் தொடர்ந்தும் கிடைக்குமா? — 23
7. வெளிநாட்டுப் பணத்தினை பொறுப்பற்ற முறையில் செலவு செய்யும் சில தாயக உறவுகள் — 29
8. சொந்த தேவைகளையும் சுகங்களையும் சுருக்கிக்கொண்டு தாயக உறவுகளுக்கு உதவும் புலம் பெயர்ந்தவர்கள் — 34
9. கடந்த காலத்தினையும் பிறந்த நாட்டையும் மறந்த சில புலம் பெயர்ந்தவர்கள் — 39
10. வெளிநாட்டுப் பணத்தினால் தாயகத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் — 44
11. புலம் பெயர்ந்தவர்களின் அறிவுப் பங்களிப்புக்கள் — 49





12. சுனாமியினால் அல்லலுற்றவர்களை ஆதரிக்கும் புலம் பெயர்ந்தவர்கள் — 54
13. தாயகப் பொருட்களை வெளிநாட்டவர்களுக்கு அறிமுகப்படுத்துதல் — 58
14. தாயகப் பொருட்களின் கொள்வனவிற்கு முன்னுரிமை கொடுத்தல் — 63
15. உலகறிந்த உள்ளூர் உற்பத்திகளை வெளிநாட்டவர்களுக்கு சந்தைப்படுத்தல் — 68
16. தாயக மக்களின் தேவையறிந்து முதலிடல் — 74
17. தாயக அபிவிருத்தியில் பங்குபற்றுதல் — 79
18. தாயக உறவுகளிற்கு நிரந்தர வருமானத்தின் அவசியம் — 84
19. நிலைத்து நிற்குமா இந்த உறவுகள்? — 87
20. தாயகத்திற்கு வந்து செல்லல் — 92
21. உறவினை உறுதிப்படுத்தும் தொடர்பாடல் — 97
22. உறவினைப் பலப்படுத்தும் ஊடகங்கள் — 102
23. உறவினைக் கட்டிக் காக்கும் சமூக நிறுவனங்களும் நிகழ்வுகளும் — 107
24. தலைமுறை இடைவெளியினைக் குறைத்தல் — 112
25. உறவின் அடிப்படை தமிழ் — 117

# அணிந்துரை

திரு. என். சிறிரஞ்சன் அவர்கள், புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கள் என்ற தலைப்பில் நூலாக்கியுள்ள கட்டுரைகள் ஈழத்தமிழர்பொருளாதார வரலாற்றின் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பரிமாணத்துடன் தொடர்பு படுபவையாகும். ஈழத்தமிழர் ஆரம்ப கட்டத்திலிருந்து தமக்கு, முக்கியமாக கிறிஸ்தவ மிஷனரிகளின் பங்களிப்பு காரணமாக, கல்வி மேம்பாட்டுக்கு கிடைத்த வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்தித் தம்மை மனித மூலதனமாக மாற்றிக் கொண்டிருந்தனர். எனினும் மனித மூலதனத்தைப் பௌதீக மூலதனத்துடன் இணைத்து உற்பத்திப் பெருக்கமும் அபிவிருத்தியும் இடம் பெறக்கூடிய பொருளாதாரக் கொள்கைகளைத் தமிழரை அரசாட்சி செய்த அரசுகள் காலனித்துவ காலத்திலும் சரி அதற்குப் பின்பும் சரி வகுத்துக் கொண்டிராத காரணத்தினால், மனிதமூலதன வடிவிலான ஈழத்தமிழர் தமது தாயகப் பிரதேசங்களை விட்டகன்று ஏனைய பகுதிகளில் தொழில் வாய்ப்புக்களைத் தேடிக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப் பட்டிருந்தனர். 1833 ஆம் ஆண்டு கோல்புறூக் சீர்த்திருத்தங்களைத் தொடர்ந்து இவ்வாறான வாய்ப்புக்கள் அரச பணித்துறைப் பதவிகளாக இலங்கைத் தீவினுள்ளேயே அதன் தெற்குப் பகுதிகளிற் கிடைக்கப் பெற்றன. அதே சமயம் கூடிய வசதிகளும் ஆர்வமும் துணிவும் மிக்கவர்கள் மலாயா, சிங்கப்பூர் போன்ற அயல்நாடுகளில் தம்மை நிறுவிக்கொள்ள முற்பட்டனர். இதுவே ஈழத்தமிழர் புலம்பெயர் சமூகமொன்றாக மாறிய செயன்முறையின் முதற்கட்டமாகும்.

பகுநிலைப் பொருளாதாரக் கொள்கைத் தீர்மானங்களுக்குள் ஈழத்தமிழர் தாயக வளங்கள் அகப்படாதிருந்த எதிர்கணிய வளர்ச்சி, மேலும் விரிவு பெற்று அரசியற் பண்பாட்டுப் பராபட்சம், அடக்குமுறை என்பனவாகப் பரிணமித்தவிடத்தும் அதன் எதிர்த்தாக்குதலாக இளைஞர் தீவிரவாதம் என்பது ஈழத்தழிழர் மத்தியில் மேலோங்கிய போதும் புலம்பெயர் செய்முறையும் கூடிய இன்னொரு தீவிர கட்டத்தை அடைந்தது. இளைஞர் தீவிரவாதத்தை அடக்குவதற்கு அரசு மேற்கொண்ட அரசியற் பொருளாதார எதிர்ப்பு நடவடிக்கைகள் புலப்பெயர்வைத் தூண்டி வருவதில் ஒரு முக்கிய பங்கு வகித்தன. காலப்போக்கிற் புலம்பெயர்ந்த ஈழத்தமிழரே தமிழ் இளைஞர் தீவிரவாதத்தைத் தாங்கும் முக்கிய சக்தியாக மாறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஈழத்தமிழர் வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கும் போது அவர்களது இத்தகைய புலம்பெயர் பரிமாணத்துக்கு அதில் ஓர் உறுதியான இடமுண்டு.

அத்தகைய வரலாற்று அத்தியாயத்தின் எறியங்கள் சிலவற்றை சீறிரஞ்சனின் கட்டுரைகள் எம் கண்முன் நிறுத்துகின்றன. அவரது பொருளியல் அறிவு, அனுபவம் என்பன கட்டுரைகளை அணி செய்து அவற்றை மேலும் உயிர்த்துடிப்புடையவையாக்குகின்றன. யதார்த்த நிலையிலிருந்து ஊற்றெடுக்கும் அவரது படைப்பு ஈழத்தமிழர் அரசியற் பொருளாதாரத்தில் அக்கறையுடைய அனைவரது ஆர்வத்தையும் தூண்டி அவர்களுக்கு உரிய பயனளிக்கும் தன்மை வாய்ந்ததாக்கும். அவருக்கு எமது இனிய வாழ்த்துக்கள்.

**வி.நித்தியானந்தம்**
பொருளியற் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்
*10.11. 2005*

# முன்னுரை

நமது வரலாற்றில் புலம் பெயர்வு என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நம்மவர்களில் கிட்டத்தட்ட ஐந்தில் ஒருவர் பல நாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்கின்றனர். இன்று நமது அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், கலை, இலக்கியம், மொழி, வாழ்க்கை முறை, குடும்ப அமைப்பு போன்ற பல்தரப்பட்ட விடயங்களில் இந்தப் புலம் பெயர்வானது தாக்கங்களினை ஏற்படுத்தி வருகின்றது. தாக்கம் எனப் பார்க்கும் போது அவற்றில் நன்மைகளும் இருக்கின்றன தீமைகளும் இருக்கின்றன.

புலம் பெயர்வு என்பது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒன்றன்று. காலத்தின் கட்டாயத்தினால் ஏற்பட்டது. எவ்வாறாயினும் நாம் இன்று எமது எதிர்காலத்தைப்பற்றி சிந்திக்கும் போதும் திட்டமிடும் போதும் புலப் பெயர்வின் தாக்கங்கள் எவ்வாறு இருக்கின்றன என்பதனை தெரிந்து கொள்வதுடன் அவை எவ்வாறு இருத்தல் வேண்டும் என்ற தெளிவினையும் கொண்டிருத்தல் அவசியம். இந்த வகையில் புலப் பெயர்வு தொடர்பிலும் புலம் பெயர்ந்தவர்கள் தொடர்பிலும் புலம் பெயர்ந்தவர்களிற்கும் தாயகத்திற்கும் இடையிலான உறவுகள் தொடர்பிலும் பல்தரப்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகின்றது. குறிப்பாக புலம்பெயர்ந்தவர்களின் அடுத்த தலைமுறையினர்களிற்கும் தாயகத்திற்கும் இடையிலான உறவுகள் எதிர்காலத்தில் எவ்வாறு அமையும் என்பது பற்றி சிந்திப்பது மிகவும் அவசியமான தொன்றாகும்.

இந்த வகையில் புலம் பெயர்ந்தவர்களும் தாயகப் பொருளாதாரமும் என்ற இந்த நூல் புலம் பெயர்ந்தவர்களிற்கும் தாயகத்திற்கும் இடையிலான பொருளாதார் உறவுகள் பற்றியதாக அமைகின்றது.

பொது வாசகர்களை இலக்காகக் கொண்டே இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. இதில் உள்ள எல்லாக் கட்டுரைகளுமே புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கள் என்ற தலைப்பின் கீழ் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டவையாகும். எவ்வாறாயினும் தனியே ஒரு கட்டுரையினை வாசிக்கும் வாசகருக்குக் கூட ஒரு செய்தி சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் இன் நூலனது வடிவமைக்கப்பட்டுள்ளது.



இந்நூலில் அடங்கியுள்ள கட்டுரைகள் தினக்குரல் பத்திரிகையில் தொடராக வெளிவந்தவை. அவை சிறு திருத்தங்கள் மாற்றங்கள் புதிய விடயங்கள் என்பன உள்ளடக்கப்பட்டு நூலுருப் பெறுகின்றன.

புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கள் எதிர்காலத்தில் தற்போது உள்ளது போல் இருக்காது என்றதொரு எச்சரிக்கையினை விடுவது இந்நூலின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும்.

இந்நூலானது புலம் பெயர்ந்தவர்கள் மற்றும் தாயகத்தில் உள்ளவர்கள் ஆகிய இரு சாராரையும் பற்றியதொரு நூலாகும் என்பதுடன் இவ்விருசாராரையும் நோக்கி எழுதப்பட்டது. இந்த வகையில் இந்நூலினை வசிக்கும் நம்மவர்கள், அவர்கள் புலம்பெயர்ந்தவர்களாக இருந்தாலும் சரி தாயகத்தில் உள்ளவர்களாக இருந்தாலும் சரி ஏதோ ஒரு வகையில் அவர்களிற்கு பயனுள்ளதாக அமையும், அமைய வேண்டும் என்பது எனது எண்ணம்.

புலம் பெயர்ந்தவர்களும் தாயகப் பொருளாதாரமும் என்றதொரு பெரிய விடயம் தொடர்பில் நான் ஒரு தொடக்கப் புள்ளியினைத்தான் வைத்துள்ளேன். இது தொடர்பான மேலதிக ஆய்வுகள், சிந்தனைகள், புதிய தகவல்கள், மறுப்புக்கள், திருத்தங்கள், விமர்சனங்கள் போன்றவை எல்லோருக்கும் பயனுள்ள வகையில் தொடரவேண்டும் என்பது எனது அவா.

*"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே*
*யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"*
- தாயுமானவர்

**என். சிறிரஞ்சன்**
நூலாசிரியர்
கொழும்பு - 06
தொ.பே : *+94-11-2553341*
*மின் அஞ்சல* : siriranjan@sltnet.lk

# புலம்பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கள்

தாயகப் பொருளாதாரத்தில் புலம்பெயர்ந்தவர்களின் பங்கென்பது மிக முக்கியமானதும் இன்றியமையாததுமாகும். புலம் பெயர்ந்தவர்கள் அனுப்பும் பணத்தில்தான் நம்மக்களில் பலர் வாழ்கின்றனர். புலம்பெயர்ந்தவர்களின் பணம் வராவிட்டால் நம்மவர்கள் பலரது வாழ்வு கேள்விக்குறியாகிவிடும்.

இங்கு புலம்பெயர்ந்தவர்கள் என்பதில் வேலைதேடி பணிப்பெண்களாகவும், தொழிலாளர்களாகவும் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் சிங்கப்பூர், கொங்கொங் போன்ற நாடுகளிற்கு சென்றவர்களோ அல்லது உயர்கல்வி தகமையடிப்படியில் சுயகுடியேற்ற வாசிகளாக வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியுசிலாந்து, இங்கிலாந்து போன்ற நாடுகளிற்கு சென்றவர்களோ அல்லது பொருளாதார நலன்களிற்காக இத்தாலி, இங்கிலாந்து போன்ற அபிவிருத்தியடைந்த மேற்கு நாடுகளுக்கு சென்றவர்களோ அல்லது யுத்தம் காரணமாக நாட்டின் ஏனைய இடங்களுக்கும் இந்தியாவிற்கும் சென்றவர்களோ கருதப்படவில்லை.

மேலே குறிப்பிட்ட இந்த வெவ்வேறு சாரார்களினதும் பங்களிப்பு என்பது நாட்டுப் பொருளாதாரத்தில் முக்கியமானதும் பல வழிகளில் செல்வாக்கு செலுத்துபவை என்பதிலும் ஐயமில்லை.

எவ்வாறாயினும் இந்த நூலில் புலம் பெயர்ந்தவர்கள் என்பதன் மூலம் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக 1983ற்கு பின்னர் நாட்டை விட்டு வெளியேறி கனடா, ஜேர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், சுவிஸ்லாந்து, நெதர்லாந்து, (ஹொலண்ட்) நோர்வே, டென்மார்க், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் தஞ்சமடைந்து வாழும் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மட்டும் கருத்தில் கொள்ளப்படுகின்றனர். இவர்கள் மேலே சொல்லப்பட்ட வெவ்வேறு சாராருடன் ஒப்பிடும்

போது பல்வகையிலும் வேறுபட்டவர்கள். இவர்கள் தமக்கென தனியான அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார பின்னணியினைக் கொண்டவர்கள். இவர்கள் புலம்பெயர்ந்து சென்ற முறை மற்றும் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்துவரும் முறை என்பன கூட வேறுபட்டவை. அத்துடன் தாயகத்தின் பொருளாதாரத்திலும் அரசியலிலும் வாழ்க்கையிலும் இவர்களது பங்களிப்பு தனித்துவமானது. இந்த வகையில் புலம்பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கள் என்ற இந்நூலில் பின்வரும் விடயங்கள் ஆராயப்படுகின்றன:

1. புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் எமது பொருளாதாரத்தில் எத்தகைய பங்கினை வகிக்கின்றனர்.
2. புலம்பெயர்ந்தவர்களின் தாயகத்திற்கான பொருளாதார பங்களிப்புக்களின் முக்கியத்துவம் எத்தகையது?
3. புலம்பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு எவ்வாறு தாயகத்தில் உள்ளவர்களின் பொருளாதாரத்தையும் வாழ்க்கையினையும் பாதிக்கின்றது?
4. புலம் பெயர்ந்த நாடுகளில் தம்மையும் தமது பொருளாதாரத்தையும் மட்டும் கருத்தில் கொள்ளாமல் தாயகப் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்து வருவதென்பது புலம் பெயர்ந்தவர்களில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது?
5. தாயகப் பொருளாதாரத்திற்கு புலம் பெயர்ந்தவர்களின் பங்களிப்பானது தொடர்ந்தும் அதாவது எதிர்காலத்திலும் தொடருமா?
6. புலம் பெயர்ந்தவர்களது தாயகத்திற்கான பொருளாதாரப் பங்களிப்புக்கள் எதிர்காலத்தில் குறைவதனை எவ்வாறு தணித்துக் கொள்ள முடியும்?
7. புலம் பெயர்ந்தவர்களது தாயகத்திற்கான பொருளாதாரப் பங்களிப்புக்கள் எதிர்காலத்தில் குறைவடைவதனை எவ்வாறு எதிர்வு கொள்ளலாம்?

# தாயக மக்களும் வெளிநாட்டுப் பணமும்

வெளிநாட்டில் இருக்கும் தனிப்பட்டவர்கள் இலங்கைக்கு அனுப்பும் பணம் தான் நாட்டிற்கு அந்நிய செலாவணியினை உழைத்துத்தரும் முதலாவது மார்க்கமாக உள்ளது. 2004ம் ஆண்டில் இலங்கைக்கு தனிப்பட்டவர்கள் அனுப்பிய பணம் 15,379 கோடி ரூபாய்களாகும். ஆடை ஏற்றுமதி, தேயிலை ஏற்றுமதி மூலம் கிடைக்கும் அந்நிய செலாவணி வருமானத்திலும் பார்க்க இந்த தனிப்பட்டவர்கள் அனுப்பும் வெளிநாட்டு பணம் இலங்கையின் தேறிய அந்நிய செலாவணி உழைப்பில் முன்னிலை வகிக்கின்றது. தனிப்பட்டவர்கள் அனுப்பும் பணத்தில் 26% ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் 7% வட அமெரிக்க நாடுகளிடம் இருந்தும் வருகின்றது. அதாவது 4,000 கோடி ரூபாய் ஐரோப்பாவிலிருந்தும் 1,077 கோடி ரூபாய் அமெரிக்கா மற்றும் கனடாவில் இருந்தும் 2004ம் ஆண்டில் வந்துள்ளன. இவற்றில் பெரும்பகுதி புலம்பெயர்ந்த நம்மவர்களினால் அனுப்பப்பட்ட பணம் என்பதில் ஐயமில்லை. இந்த வகையில் இலங்கைளின் அந்நிய செலாவணி வருமானம் ஈட்டலில் புலம்பெயர்ந்தவர்கள் கணிசமானதொரு பங்கினை வகிப்பவர்களாக இருக்கின்றனர்.

இங்கு குறிப்பிட்ட இந்த தொகைகள் யாவும் வங்கிகள் மூலமும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்கள் மூலமும் நாட்டிற்குள் தனிப்பட்டவர்களால் அனுபப்பட்ட பணத்தினையே குறித்து நிற்கின்றது. இந்த கணிப்புகளில் புலம் பெயர்ந்தவர்கள் உண்டியல் மூலம் அனுப்பும் பணம் பெருமளவிற்கு உள்ளடக்கப்படவில்லை.

புலம் பெயர்ந்தவர்கள் தமது உடன்பிறப்புகளிற்கு பணம் அனுப்ப பயன்படுத்தும் பிரபல்யமான முறை “உண்டியல்” மூலம் பணம் அனுப்புதல் என்ற வகையில் இவ்வாறு இவர்களால்

உண்டியல் மூலம் அனுப்பப்படும் பணம் அவர்களால் வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களூடாக அனுப்படும் பணத்துடன் ஒப்பிடும் போது பலமடங்காகும். எனவே அதிலிருந்து புலம் பெயர்ந்தவர்கள் எவ்வளவு ஒரு பெரிய தொகைப் பணத்தினை தாயகத்தில் உள்ள தமது உறவினர்களுக்கு அனுப்புகின்றனர் என்பதனை ஊகித்துக் கொள்ளலாம்.

இரண்டு தசாப்பதங்களாக இடம்பெற்றுவந்த யுத்தம் வடக்கு கிழக்கு மக்களின் ஜீவனோபாய தொழில்கள் பலவற்றை அழித்தொழித்து விட்டது. அரச உத்தியோகத்தில் கூட முன்னர் போல் பெருமளவு தமிழர்கள் தற்போது இல்லை.

மறுபுறத்தில் வடக்குகிழக்கில் விவசாயமும் பெருமளவிற்கு இந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு விட்டது. முத்துகிருஷ்ண சர்வானந்தன் என்ற பொருளியலாளர் மேற்கொண்ட ஆய்வின் படி 1980ம் ஆண்டில் இலங்கையின் நெல் உற்பத்தியில் 11.6%த்தினை உற்பத்தி செய்த வடமாகாணத்தில் 1990ம் ஆண்டு அதன் பங்களிப்பு 5.4% மாகவும், 2003ம் ஆண்டில் வெறும் 3.0% மாகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தினையும் திருகோணமலை மாவட்டத்தினையும் எடுத்துக் கொண்டால் இலங்கையின் நெல் உற்பத்தியில் முறையே 4.4% மற்றும் 4.5% த்தினை 1980 இல் வகித்த இந்த மாவட்டங்களின் நெல் உற்பத்தி 2000ம் ஆண்டில் முறையே 2.0% மாகவும், 3.7% மாகவும் வீழ்ச்சியடைந்திருந்தன. இதே போல்தான் ஏனைய விவசாய உற்பத்திகளும் பாரிய வீழ்ச்சியினை அடைந்திருந்தன.

மீன்பிடி தொழிலுக்கு ஏற்பட்ட பாதிப்பு மிகவும் மோசமானது. முத்துகிருஷ்ண சர்வானந்தனின் ஆய்வின்படி 1980ம் ஆண்டில் இலங்கையின் மீன் உற்பத்தியில் 39.8%இனை வகித்த வட மாகாணத்தின் மீன் உற்பத்தி 2000ம் ஆண்டில் 3.1%மாக குறைவடைந்திருந்தது. கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை 1980இல் நாட்டின் மீன் உற்பத்தியில் 16.2% இனை வகித்த கிழக்கு மாகாணத்தின் மீன் உற்பத்தி 2000ம் ஆண்டில் 13.3% ஆக குறைவடைந்திருந்தது.

விவசாய உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, மீன்பிடி தொழிலில் ஏற்பட்ட பாதிப்பு என்பன ஒருபுறம் இருக்க, அவ்வாறு குறைந்து காணப்பட்ட விவசாயப் பொருட்கள் மற்றும் கடலுணவுகளைச் சந்தைப்படுத்துவதிலும் வடக்கு கிழக்கு மக்கள் பெரும் பிரச்சினையினை எதிர்நோக்க வேண்டியவர்களாக இருந்தனர்.



விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்படும் புகையிலை , வெங்காயம், செத்தல் மிளகாய், வாழைப்பழம், திராட்சைப்பழம், தானிய வகைகள் போன்ற பல விவசாய விளைபொருட்களும், மீன்பிடி பொருட்களும் பெருமளவிற்கு வடக்கு கிழக்கிற்கு வெளியே சந்தைப்படுத்தப் படுவனவாக இருந்தன. யுத்தம் காரணமாக வடக்கு கிழக்கின் பெரும்பகுதிகளிற்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குமிடையிலான போக்குவரத்து சீர்குலைந்து விட்டிருந்த படியால் அவற்றினை எடுத்து வந்து சந்தைப்படுத்துவதில் பல சிரமங்கள் காணப்பட்டன. இதுவும் விவசாய மற்றும் மீன்பிடியினை நம்பி வாழ்வோரின் வருமானத்தை மேலும் பாதிப்பதாக இருந்தது.

வடக்கு கிழக்கில் கைத்தொழில்களின் நிலையும் கடந்த இரு தசாப்த யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. பாரிய அரச தொழிற்சாலைகளான காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயன தொழிற்சாலை என்பன முற்று முழுதாக இயங்காமல் போயின. வாழைச்சேனை காகிதாலையின் செயற்பாடு கூட பெருமளவிற்கு குறைவடைந் திருக்கின்றது. ஏனைய கைத்தொழில் முயற்சிகள் பெருமளவிற்கு அழிந்திருந்தன அல்லது கைவிடப்பட் டிருந்தன. முத்துகிருஷ்ண சர்வானந்தனின் ஆய்வின்படி, 1983இல் வடக்கு கிழக்கில் 9700 பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் கூறுகள் இயங்கிவந்துள்ளன. இவை தவிர பதிவு செய்யப்படாத ஏராளமான கைத்தொழில்கள் வழக்கு கிழக்கில் காணப்பட்டிருக்க வேண்டும்.

யுத்தம் காரணமாக விவசாய உற்பத்தி, மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, கைத்தொழில் உற்பத்தி, போக்குவரத்து என்பன பாதிக்கப்பட்டிருந்தமையாலும் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் முடங்கியிருந்தமையாலும் வடகிழக்கில் வியாபாரமும் பாரியளவு பாதிப்படைந் திருந்தது. அத்துடன் அக்காலத்தில் வடக்கு கிழக்கு மீது விதிக்கப்படடிருந்த பொருளாதாரத் தடையும் வியாபார செயற்பாடுகளை பெருமளவு பாதிப்பிற்குள்ளாக்குவதாக இருந்தது.

அரச சேவையில் வடகிழக்கு தமிழர்களின் வீதாசாரம் குறைவடைந்து வந்தமையும் வடகிழக்கு மக்களிற்கு வருமானம் ஈட்டித்தரும் ஏனைய மார்க்கங்களாக இருந்த மீன்பிடி விவசாய, கைத்தொழில் மற்றும் வியாபாரம் என்பன மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலும் இம் மக்களின் வருமானம் ஈட்டல் என்பது மிகப் பெருமளவிற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

இவ்வாறு வருமான இழப்பினால் அல்லது வருமானக் குறைவினால் திண்டாடிய மக்களிற்கு ஒரு அபயக்கரமாக வந்துதவியது, இந்தப் புலம்பெயர்ந்தவர்கள் அனுப்பிய பணம் தான். இரண்டு தசாப்தகால யுத்தம் தனியே வடக்கு கிழக்கு மக்களின் வருமானத்தினை மட்டும் அறுத்தெறிந்ததுடன் நின்று விட்வில்லை. மறுபக்கத்தில் போக்குவரத்து சீர்குலைவு மற்றும் பொருளாதாரத் தடை என்பவற்றினால் அவர்களின் வாழ்க்கைச் செலவினையும் மிகமோசமாக அதிகரிக்கச் செய்திருந்தது.

இன்று பெற்றோலின் விலை 80 ரூபாவாக அதிகரித்துவிட்டது என்று கூச்சலிடுகின்றோம். ஒரு காலத்தில் வடக்கில் ஒருலீட்டர் பெற்றோல் 2500 ரூபாய்வரை விலையோனது. இதேபோல் தான் பல பொருட்களின் விலைகளும் காணப்பட்டன. சோப் 250 ரூபா, சீனி 200 ரூபா, மண்ணெண்ணெய் 250 ரூபா, டீசல் 1500 ரூபா, உரம் 5000 ரூபா என்று அடுக்கிக் கொண்டே போகலாம். ஒரு பக்கத்தில் பொருளாதார தடை, மறு பக்கத்தில் போக்குவரத்து சீர்குலைவு, இன்னொரு பக்கத்தில் பொருட்களை ஏற்றி வர வாகனங்கள் மற்றும் வாகன எரிபொருட்கள் இல்லாமை, மறுபக்கத்தில் உள்ளூர் உற்பத்தி வீழ்ச்சி என்று எல்லாமாக சேர்ந்து பொருட்களின் விலைகள் கற்பனை செய்து கூட பார்க்காதளவிற்கு உயர்வடைந்து காணப் பட்டன.

இவ்வாறானதொரு விலையேற்றத்தினையும் பொருட் தட்டுப்பாட்டினையும் வடக்கு கிழக்கு மக்கள் எவ்வாறு எதிர் கொண்டார்கள் என்று கேட்டால் புலம் பெயர்ந்த நம்மவர்கள் அனுப்பிய பணத்தினை கொண்டுதான் என்பது அதற்கும் பதிலாக அமைகின்றது.

யுத்தத்தின் காரணமாக வடக்கு கிழக்கு மக்களின் கணிச மானதொரு தொகையினர் வடக்கு கிழக்கிற்கு உள்ளேயும் வடக்கு கிழக்கிற்கு வெளியே கொழும்பு போன்ற இடங்களிற்கும் தென் இந்தியாவிற்கும் இடம் பெயர்ந்திருந்தனர். இவ்வாறு இவர்கள் இடம்பெயர்ந்தமையினால் இவர்கள் தாம் தம் சொந்த இடங்களில் ஆற்றி வந்த தொழிலினை இழந்து காணப்பட்டதுடன், அவர்களது வீடு, அசையும், அசையா சொத்துக்கள் என்று எல்லாவற்றையும் விட்டு அனாதரவாக வேறு இடங்களிற்கு சென்றிருந்தனர். இதனால் பெரும்பாலானவர்கள் தமது பாரம்பரிய தொழில்களையும், சொத்துக்களையும் இழந்தவர்களாகக் காணப்பட்டனர். இடம்



பெயர்ந்து வந்து இருந்த இடங்களில் இவர்களில் சிலர் கூலி வேலை செய்தல், சிறு வியாபாரம், விவசாயம் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் கூட உரிய வருமானம் பெற முடியாதவர்களாக இருந்தனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்து பொருளுமின்றி தொழிலுமின்றி அநாதரவாக நிற்பவர்களில் பலரை ஆதரித்து வாழவைப்பதும் இந்த புலம்பெயர்ந்த நம்மவர்கள் அனுப்பும் பணம் தான். தற்போது நாட்டின் வடக்கு கிழக்கு பகுதியில் மட்டும் 272,956 பேர் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். இதில் ஏனைய பகுதிகளில் வாழ்பவர்கள் மற்றும் இந்தியாவில் உள்ளவர்கள் உள்ளடக்கப் படவில்லை.

இன்று யுத்தமற்றதொரு நிலையில் பொருளாதாரத் தடை நீக்கப்பட்டமை, முன்னருடன் ஒப்பிடும் போது இலகுவான போக்குவரத்து என்று சில முன்னேற்றங்கள் காணப்பட்ட போதிலும் மக்களின் அன்றாட அடிப்படை பிரச்சினைகள் உரிய வகையில் இன்னும் தீராத நிலையில் இந்த புலம்பெயர்ந்தவர்கள் அனுப்பும் பணமென்பது வடக்கு கிழக்கு மக்கள் அவர்கள் வடக்கு கிழக்கில் வாழ்பவர்களாக இருந்தாலும் சரி வடக்கு கிழக்கிற்கு வெளியே வாழ்பவர்களாக இருந்தாலும் சரி மிக முக்கியமானதாகவே உள்ளது.

# கனடாவில் சங்கானைச் சந்தை

தாயகப் பொருளாதாரத்திற்கு புலம் பெயர்ந்த நம்மவர்களின் பங்கானது தாயகத்தில் உள்ள தமது உடன்பிறப்புகளிற்கு பணம் அனுப்பி வருவதுடன் நின்றுவிடவில்லை. இவர்கள் தாம் வாழும் நாடுகளில் தாயக உற்பத்திப் பொருட்களினை நுகர்வதன் மூலம் தாயகப் பொருளாதாரத்திற்கு உதவுபவர்களாக இருக்கின்றனர்.

புலம் பெயர்ந்த நம்மவர்கள் தாம் வாழும் நாடுகளில் தமக்குத் தேவையான உணவுப் பொருட்கள் மற்றும் தமது நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான பொருட்கள் என பலகோடி ரூபாய் பெறுமதியான தாயக உற்பத்தி பொருட்களை நுகருகின்றனர். இவர்களின் தேவைக்காக தாயகத்திலிருந்து நாளாந்தம் பல் தரப்பட்ட பொருட்கள் கொள்கலன்களில் அடைக்கப்பட்டு கப்பலிலும் விமானத்திலுமாக அனுப்பப்பட்டு கொண்டிருக்கின்றன. இதனால் தாயக உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தி பொருட்களிற்கு அதிகரித்து சந்தை ஒன்றினைப் பெற்று கொள்வதுடன் இலங்கைக்கும் அரிய அந்நியச் செலாவாணியை உழைத்துத்தரும் ஒரு மார்க்கமாக இது உள்ளது.

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி நம்மவர்கள் இந்த மேற்கு நாடுகளில் குடியேறுவதற்கு முன்னர் கூட பல இலங்கையர்கள் தொழில் நிமித்தமும் சுயகுடியேற்றவாசிகளாகவும் வேறு வழிகளிலும் மேற்கு நாடுகளிற்கும் ஏனைய நாடுகளிற்கும் சென்று வாழ்ந்து வரத்தான் செய்தார்கள். என்றாலும் கூட அவ்வாறு பல்வேறு நாடுகளிற்குச் சென்று வாழ்ந்தவர்கள் ஒப்பீட்டளவில் குறைந்த தொகையினராக இருந்ததுடன் பல்வேறு நாடுகளில் அந்நாடுகளில் உள்ள பல்வேறு இடங்களில் பரவிக்கிடந்தார்கள். இதனால் இவர்கள் தாம் வாழ்ந்த இடங்களில் தாயகப் பொருட்களிற்கு பாரிய கேள்வியொன்றினை தோற்றுவிக்க முடியாதவர்களாக இருந்தனர். இதனால் இவர்கள்



விரும்பியோ விரும்பாமலோ தாம் வாழ்ந்த இடங்களில் உள்ள வாழ்க்கை முறைக்கு தம்மை பழக்கப் படுத்திக்கொண்டு அந்த நாட்டு பொருட்களை நுகர வேண்டியவர்களாக இருந்தனர். இவர்கள் தமது பாரம்பரிய உணவுகள் மற்றும் ஏனைய பொருட்களைப் பெற்றுக் கொள்வதாயின் தாம் நாட்டிற்கு வந்து செல்லும்போது நம்மூர் பொருட்களை வாங்கிக் கொண்டு செல்லுதல், நாட்டிற்கு வந்து செல்லும் நண்பர் மற்றும் உறவினர்களிடம் சொல்லிவிட்டு பெற்றுக் கொள்ளுதல், இல்லாவிடில் இங்குள்ள தமது உறவினர்களிடம் சொல்லி அவற்றை தபால் மூலமான பார்சலாக பெற்று கொள்ள வேண்டியிருந்தது. தாம் செல்லும்போது விமானத்தில் கொண்டு போகக் கூடிய பொருட்களின் நிறை கட்டுப்படுத்தப்பட்டது என்ற வகையிலும், மேலதிகமாக எடுத்து செல்லும் பொருட்கள் தொடர்பில் உயர்கட்டணம் அறவிடப்பட்ட நிலையிலும் தபால் பார்சலில் பொருள் அனுப்புவது கூட மிகவும் செலவானது என்ற வகையிலும் இவர்கள் தாம் வாழும் நாடுகளில் இருந்து கொண்டு பெருமளவிற்கு நம்மூர் பொருட்களை நுகர முடியாததொரு நிலைகாணப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில் அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ தாம் வாழும் நாடுகளில் உள்ள உணவுப்பழக்கம், வாழ்க்கை முறை என்பவற்றிற்கு தம்மை பழக்கப்படுத்தி கொள்ளவேண்டியவர்களாக இருந்தனர். அது தவிர இந்திய மற்றும் சீன உணவுச்சாலைகளிற்கு சென்று உணவருந்துதல். இந்திய உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களை கொள்வனவு செய்தல் என்றும நம்மூர் பொருள் கிடைக்காத போது அதற்கு மாற்றீடாக வரக்கூடிய ஆசிய பொருட்களை நுகர்தல் என்று தம்மை திருப்திப் படுத்திக் கொள்ளவேண்டி இருந்தது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் இவர்களின் நுகர்வானது குறிப்பிடத்தக்களவிற்கு தாய் நாட்டிற்கு பிரயோசனமாக இருக்கவில்லை.

இன்னொரு புறத்தில் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பெருந்தொகையான இலங்கையர்கள் தொழிலின் நிமிர்த்தம் சென்று வாழ்ந்து வந்தாலும் கூட அவர்களாலும் குறிப்பிடத்தக்களவு உள்ளூர் பொருட்களிற்கான கேள்வியினை ஏற்படுத்த முடியாது உள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில ஏறக்குறைய ஐந்து இலட்சம் இலங்கையர்கள் தொழில் புரிகின்றார்கள். ஆனால் இவர்களின் நுகர்விற்காக பாரியளவில் நம்மூர் உற்பத்தி பொருட்கள் அந்நாடுகளிற்கு அனுப்பப்படுவதாக

தெரியவில்லை. அதற்கு முக்கிய காரணம் மத்திய கிழக்கு நாடுகளிலும் சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் தொழில் புரியும் இலங்கையர்களில் பெருபாலானவர்கள் பணிப்பெண்களாக வீடுகளில் பணிபுரிபவர்கள். இவர்களுக்குரிய உணவு மற்றும் ஏனைய வசதிகள் அந்நாட்டு எஜமானர்களினாலேயே வழங்கப்படுகின்றது. இவர்கள் விரும்பினால் கூட இவர்களால் வெளியில் சென்று எமது பொருட்களை நுகரவோ அல்லது வீட்டிற்கு எடுத்து சென்று நம்மூர் பொருட்களை சமைத்து உண்பதோ கடினமானதாகும். அது தவிர அவர்களிற்கு வழங்கப்படும் சிறிய சம்பளத்தில் பெரும் பகுதியோ அல்லது முழுவதனையுமோ இலங்கைக்கு அனுப்பவேண்டிய தேவையில் அவர்கள் உள்ளனர். இதனால் இவர்களினால் அந்நாடுகளில் கணிசமான ஒரு தொகையினை பொருள் கொள்வனவுக்கு செலவிட முடியாதுள்ளது.

மத்தியகிழக்கு நாடுகளில் ஏனைய தொழில் புரிபவர்கள் முக்கியமாக ஆண்கள் பெருமளவிற்கு தொகையாக சமைத்து உணவு பரிமாறப்படும் விடுதிகளில் தங்கியிருக்கின்றனர். ஏனையோர் தாமே சமைத்து உண்ண வேண்டியவர்களாக இருக்கின்றனர் என்றவகையில் அவர்களால் ஓரளவிற்கு நம்மூர் பொருட்கள் நுகரப்படுகின்றன. எனினும் அவர்கள் கூட எமது பொருட்களை சமைத்து சாப்பிடுவதிலும் பார்க்க இலகுவாக சமைக்கக் கூடிய பொதிகளில் அடைத்து வரும் உடனடி உணவுகளுக்கு முன்னுரிமை கொடுப்பவர்களாக இருக்கின்றனர். இது தவிர மத்திய கிழக்கில் இலங்கையருடன் ஒப்பிடும்போது பலமடங்கு அதிகமான இந்தியர்கள் வசிக்கின்றனர் என்ற வகையில் இந்திய பொருட்கள் அங்கு பெருமளவிற்கு கிடைக்கக் கூடியதாக உள்ளது. இதனால் அங்குள்ள இலங்கையருக்கும் கூடுதலாக இந்திய பொருட்களை கொள்வனவு செய்யும் நிலை காணப்படுகின்றது.

இந்த வகையில் சுய குடியேற்றவாசிகளாக மற்றும் வேறு வகைகளில் மேற்கு நாடுகளில் குடியேறியவர்களினாலும் தொழிலின் நிமிர்த்தம் மத்திய கிழக்கு நாடுகளில் வாழ்ந்து வருபவர்களாலும் பாரிய தொரு கேள்வியினை நமது உள்ளூர் பொருட்களிற்கு ஏற்படுத்த முடியவில்லை.

ஆனால் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக புலம் பெயர்ந்த நம்மவர்கள் பெருந்தொகையாக அபிவிருத்தியடைந்த மேற்கு நாடுகளில் குடியேறத் தொடங்கியபோது அவர்கள் தமது நுகர்விற்கு தேவையான பொருட்களிற்கு கணிசமான அளவு கேள்வியினை ஏற்படுத்த கூடியவர்களாக இருந்தனர். புலம் பெயர்ந்த



நம்மர்கள் பெரும் எண்ணிக்கையில் அந்நாடுகளில் குடியேறியமையும் அந்நாடுகளில் உள்ள குறிப்பிட்ட சில நகரங்களில் குவிந்து வாழ்ந்து வருகின்றமையும், அவர்கள் அந்நாடுகளில் வெறுமனே தொழில் செய்வதற்காக சென்றவர்களாக அன்றி அங்கேயே வாழ்வதற்காக சென்றவர்களாக இருப்பதும், அந்த வகையில் அவர்கள் அங்கு குடும்பமாக தங்களது கலாச்சார அடையாளத்துடனும் தனித்து வத்துடனும் வாழ முற்படுவதும் அந்நாடுகளில் தாயகப் பொருட் களிற்கு கணிசமானதொரு தொகைக் கேள்வியினை ஏற்படுத்துவதை வசதிப்படுத்துபவையாக அமைகின்றன.

தாம் எங்கு வாழ்ந்தாலும் தமது பொருள்களிற்கும் தமது உணவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து உலகின் பல நகரங்களில் தமது தனித்துவத்துடன் வாழும் பழக்கத்தை முதலில் அறிமுகப் படுத்தியவர்கள் சீனர்கள்தான். இதனால் தான் இன்றும் உலகின் பல நகரங்களில் சீன நகரம் (*China Town*) என்ற பெயருடன் பல இடங்கள் இருக்கின்றன.

சீனர்கள் அளவிற்கு இல்லாவிட்டாலும் இன்று நமது உணவுகளுக்கும் ஏனைய பொருட்களிற்கும் குறிப்பிடத்தக்கதொரு நுகர்வினை தாம் வாழும் நாடுகளில் ஏற்படுத்தி தமக்கென ஒரு தனித்துவ கலாச்சார அடையாளத்துடன் புலம்பெயர்ந்த நம்மவர்கள் இன்று உலகின் பலபகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். கனடா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிட்சலாந்து அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, நெதர்லாந்து (ஹொலண்ட்) நோர்வே, டென்மார்க், அமெரிக்கா போன்ற பல நாடுகளில் ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட நம்மவர்கள் புலம் பெயர்ந்தது வாழ்கின்றனர். அதிலும் இந்த நாடுகள் பலவற்றில் நம்மவர்கள் முக்கிய நகரங்களில் குவிந்து தொகையாக வாழ்கின்றனர். உதாரணமாக ரொரண்டோ, லண்டன், பாரீஸ், சிட்னி, மெல்போன் போன்ற நகரங்களில் கணிசமான எண்ணிக்கையான புலம் பெயர்ந்த நம்மவர்கள் வாழ்கின்றனர். அந்த நகரங்களில் கூட குறிப்பிட்ட சில இடங்களில் குவிந்து வாழும் தன்மை புலம் பெயர்ந்த நம்மவர்களிடம் உள்ளது. ரொரண்டோவில் ஸ்காபரோ, லண்டனில் ரூற்றிங், வெம்ப்லி, ஈஸ்ட்காம், மற்றும் சிட்னியில் ஹோம்புஷ் என்பவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். பாரிஸ் முழுவதும் நம்மவர்கள் பரந்து வாழ்ந்து வந்தாலும் லாச்சப்பல் என்ற இடத்தில் தமது வியாபார ஸ்தாபனங்களை அமைத்து பாரிசிலேயே புலம் பெயர்ந்து வாழும் நம்மவர்களின் தனித்துவமான அடையாளமாக அதனை மாற்றியுள்ளனர். லாச்சப்பலில் சிலவீதிகளில் எங்கு

பார்த்தாலுமே நம்மவர்களின் கடைகள், அலுவலகங்கள், தமிழ் பெயர் பலகைகள் என்று ஆக்கியிருக்கிறார்கள். லாச்சப்பலில் எங்கு திரும்பினாலும் நம்மவர்களைக் காணக் கூடியதாக இருக்கும்.

இவர்கள் இவ்வாறு குறிப்பிட்ட சில இடங்களில் குவிந்து வாழ்வதனை வசதிப்படுத்திய விடயம்: முதலில் அந்த நாடுகளிற்கு போனவர்கள் தமது சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள் என்று ஒவ்வொருவராக தாயகத்தில் இருந்து கூப்பிட்டு தம்முடன் சேர்ந்து வைத்திருந்து அவர்களுக்கு தாமே வேலை எடுத்து கொடுத்து ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து வாழ்ந்து வரும் பண்பாகும். எவ்வாறாயினும் ஜேர்மனி, சுவிற்சிலாந்து போன்ற நாடுகளிற்கு நம்மவர்கள் போய் தஞ்சமடைந்த போது அந்நாட்டு அரசுகள் அவர்களை ஒரே இடத்தில் இருக்க விடாமல் தம் நாட்டில் உள்ள வெவ்வேறு நகரங்களிற்கு அவர்களைப் பிரித்து அனுப்பியமையினால் இந்நாடுகளில் நம்மவர்கள் பரந்து வாழ்கின்றனர். இதனால் இந்நாடுகளில் ஒப்பீட்டு ரீதியில் நம்மவர்கள் குவிந்து வாழும் நிலை இல்லை. என்றாலும் கூட இந்நாடுகளில் அவற்றின் பிரதான நகரங்களில் நம்மவர்கள் தமது வியாபார ஸ்தாபனங்களை அமைத்து தாயகப் பொருட்களை அவர்களிற்கு விற்பனை செய்யும் வழக்கத்தைக் கொண்டுள்ளார்கள்.

புலம்பெயர்ந்த நம்மவர்கள் இவ்வாறு பல்வேறு நாடுகளில பெரும் எண்ணிக்கையில் குறிப்பிட்ட சில நகரங்களில் குவிந்து தமது கலாச்சார அடையாளத்துடன் வாழ முற்படும் அவர்களது உந்தலானது அந்த இடங்களில் நம்மூர் உற்பத்தி பொருட்களிற்கு கணிசமான தொரு கேள்வியினை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அரிசிமா, தூள், மரக்கறி, கீரை வகைகள், உரல், உலக்கை, புழுக்கொடியல், ஒடியல்மா, நொங்கு, தேய்காய், இளநீர், வாழையிலை, அறுகம்புல் என்று அடுக்கிக் கொண்டே போகும் அளவிற்கு நம்மூர் பொருட்கள் பல' தாயகத்திலிருந்தும் வேறு நாடுகளில் இருந்தும் அனுப்பப்படுகின்றன.

புலம்பெயர்ந்த நம்மவர்களின் நுகர்வு தேவை அந்த நாட்டில் இல்லாத மேற்குறிப்பிட்ட பொருட்கள் போன்ற பாரம்பரிய நம்மூர் பொருட்களுடன் நின்று விடவில்லை. தமக்கு தாயகத்தில் நன்கு பழக்கப்பட்ட திரளி மீன், விளைமீன் வெள்ளை நண்டு, அங்கர் பால்மா, மலிபன் பிஸ்கற், கன்டோஸ் சொக்லேற், மென்டிஸ் ஸ்பெசல் சாராயம் என்று இதற்கு ஒப்பான அல்லது சிறந்த



பொருட்கள் அந்நாடுகளில் கிடைக்கக் கூடியதாக இருப்பினும் தமக்கு பழக்கப்பட்ட பொருள் வர்க்கங்களை புலம் பெயர்ந்தவர்கள் விரும்பிக் கொள்வனவு செய்கின்றனர். இதனால் இவ்வாறான பொருட்களும் இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்தவர்கள் வாழும் நாடுகளிற்கு அனுப்பப்படுகின்றன இந்த வகையில் புலம் பெயர்ந்தவர்கள் தாயகப் பொருட்களிற்கு கணிசமானதொரு கேள்வியினை ஏற்படுத்தி வருகின்றனர். இதன்மூலம் நம்மூர் உற்பத்திப் பொருட்களிற்கு வளர்ச்சியடைந்த மேற்கு நாடுகளில் கணிசமானதொரு சந்தை தோன்றியுள்ளது என்பதுடன் இலங்கைக்கு அரிய அந்நிய செலாவணியின் பெற்றுத் தரும் மார்க்கமாகவும் இது விளங்குகின்றது.

புலம்பெயர்ந்த நம்வர்கள் நம்மூர் பொருட்களிற்கு ஏற்படுத்தும் கேள்வி தொடர்பில் முக்கியமான இன்னுமொரு விடயம் இந்த பொருட்களில் பெரும்பாலானவை நம்மூர் பாரம்பரிய பொருட்கள் என்ற வகையில் இவ்வாறு எற்படும் கேள்வியினால் அடையப்படும் வருமானத்தில் பெரும் பகுதி கிராம மட்டங்களிற்கும் சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்களுக்கும் செல்வதாகும்.

இவ்வாறு தாயகப் பொருட்களை விற்கும் கடைகள் மற்றும் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் இன்று உலகின் பல நாடுகளில் உள்ள பிரபல்யமான நகரங்களில் மட்டும் இன்றி பல சிறிய நகரங்களில் கூட காணப்படுகின்றன. இப்பொருட்களினை விற்கும் நம்மவர் களால் நடாத்தப்படும் கடைகள் நம்மூர் பெயர்களுடன் இயங்கி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. கனடாவில் உள்ள "சங்கானைச் சந்தை" என்ற சுப்பர் மாக்கட், "கிராமத்து விருந்து" என்ற நம்மூர் உணவகம், பிரான்சில் உள்ள "மக்கள் கடை" என்ற நம்மூர் பொருட்களை விற்கும் நிறுவனம் என்பவற்றை இதற்கு உதார ணமாக கூறலாம்.

நம்மூர் பொருட்களை விற்கும் ஸ்தாபனங்கள் மற்றும் உணவு சாலைகள் தனியே புலம் பெயர்ந்த தமிழர்கள் மட்டும் வாடிக்கை யாளர்களாக கொண்டவையாக அன்றி அந்த பிரதேசங்களில் வாழும் ஏனைய இலங்கையர்கள், இந்தியர்கள் மற்றும் சுதேசிகள் சிலரையும் கூட தமது வாடிக்கையாளர்களாக கொண்டுள்ளன. இந்த வகையில் புலம் பெயர்ந்தவர்களிற்கு பொருட்களை விற்க என தொடங்கப்பட்ட நம்மவர்களின் விற்பனை நிலையங்கள் தாயகப் பொருட்களை வெளிநாட்டவர்களுக்கு அறிமுகப்படுத்தும் மார்க்கங்களாகவும் அமைந்துள்ளன.

# நாட்டிற்கு வந்து செல்லும் புலம் பெயர்ந்தவர்களும் சுற்றுலாப் பயணிகளும்

தாயகப் பொருளாதாரத்திற்கு புலம்பெயர்ந்தவர்களின் பங்களிப்பு என்பது தாயகத்தில் உள்ள உறவினர்களிற்கு பணம் அனுப்புவதுடனும் தாயகத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நுகர்வதன் மூலம் இங்குள்ளவர்ளிற்கு வருமானம் பெற்றுத் தருவதுடனும் நின்று விடவில்லை. புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்து நாட்டிற்கு வந்து செல்வதன் மூலம் சுற்றுலாப்பயணி ஒருவர் நாட்டிற்கு வந்து செல்வதன் மூலம் பெறப்படும் பொருளாதார நன்மையிலும் பார்க்க கூடுதலான அளவு பொருளாதார நன்மை யினை நாட்டிற்கும் நாட்டு மக்களிற்கும் புலம் பெயர்ந்தவர்கள் பெற்றுத் தருகின்றனர்.

புலம்பெயர்ந்த நம்மவர்கள் நாட்டிற்கு வந்து போகும் போது அவர்கள் சுற்றுலாப் பயணிகளாகக் கருதப்படுவதில்லை. என்றாலும் கூட அவர்கள் இலங்கைக்கு வரும் சுற்றுலாப்பயணிகள் அளவிற்கு அல்லது அதிலும் பார்க்க கூடுதலான அளவிற்கு நாட்டிற்கு பயனுள்ளவர்களாக இருக்கின்றனர். சுற்றுலாப்பயணிகள் வருவது என்பது நாட்டிற்கு அந்நிய செலாவணியினை உழைத்துக் கொள்ளும் ஒருவழிவகையாகும். அத்துடன் சுற்றுலாத் தொழில் தொடர்பில் பல வேலைகள் நாட்டில் உருவாக்கப்படுகின்றன. சுற்றுலாப்பயணிகள் நுகர்விற்காக உள்ளூர்ப் பொருட்கள் பயன்படுத்தப்படல். விமான நிறுவனங்கள் வாடிக்கையாளர்களைப் பெற்று லாபம் அடைதல். விமான நிலையத்திற்கு வரிவருமானம் கிடைத்தல், சுற்றுலாப் பயண விடுதிகள் வருமானம் ஈட்டல் என்பது போன்ற பல்வேறு நன்மைகள் அடையப்படுகின்றன.



புலம்பெயர்ந்தவர்கள் நாட்டிற்கு வரும்போதுக் கூட இதே நன்மைகள் அல்லது அதனிலும் பார்க்க கூடுதலான நன்மைகள் அடையப்படத்தான் செய்கின்றது. சுற்றுலாப்பயணிகள் போல் அன்றி நம்மவர்கள் வரும் போது அவர்கள் ஆடம்பர ஹோட்டல்களில் பெருமளவிற்கு தங்குவதில்லை. இது தவிர இவர்களை அழைத்துச் செல்வதற்கு சுற்றுலா நடத்துனர்கள் (*Tour operaters*) மற்றும் வழிகாட்டிகள் (*Guide*) என்பவர்கள் தேவைப்படுவதில்லை. இவைத் தவிர மற்ற எல்லா விடயங்களும் சுற்றுலாப் பயணிகள்போல் புலம் பெயர்ந்தவர்கள் நாடுதிரும்புவது தொடர்பில் உண்மையாகும். இவர்களும் விமான சீட்டுக்கள் எடுக்கின்றார்கள் விமான நிலைய வரிசெலுத்துகின்றார்கள். போக்குவரத்திற்கு வாகனங்களை வாடைகைக்கு அமர்த்துகின்றார்கள். சிலர் உறவினர்கள் வீடுகளில் தங்கிவிட ஏனையோர் சுற்றுலாப் பயணிகள் போல் ஆடம்பர விடுதிகளில் இல்லாவிட்டாலும் சாதாரண விடுதிகளில் அல்லது லொட்ஜ்களில் அல்லது வாடகை வீடுகளில் தங்குகின்றார்கள். சுற்றுலாப்பயணிகள் போலவே இடங்கள் பார்க்க இவர்களும் போகின்றார்கள். சுற்றுலாப்பயணிகள் போகும் இடங்கள் வேறாகவும் இவர்கள் போகும் இடங்கள் வேறாக இருந்தாலும் கூட இவர்களது பயணங்களாலும் பல்வேறு நன்மைகள் நாட்டிற்கு கிடைக்கின்றன.

புலம்பெயர்ந்தவர்கள் நாட்டிற்கு வந்து செல்லும் போது சுற்றுலாப்பயணிகளிலும் பார்க்க கூடுதலான வேறுபல நன்மைகளும் நாட்டிற்கு கிடைக்கின்றன. அதில் முக்கியமானது அவர்கள் நாட்டிற்கு வரும் போது கொண்டுவரும் அந்நிய செலாவணி வருமானம் ஆகும். பொதுவாக சுற்றுலாப்பயணி ஒருவர் சராசரியாக இலங்கையில் செலவு செய்யும் பணத்திலும் பார்க்க கூடுதலானதொரு தொகை யினை புலம்பெயர்ந்தவர்கள் இங்கு வரும் போது கொண்டு வருகின்றனர். சுற்றுலாப் பயணிகள் தங்கும் ஹோட்டல் மற்றும் அவர்களது உல்லாச பிராயணம் என்பன ஆடம்பரமானவை உயர்வசதி கொண்டவை என்பதினால் அவர்கள் செலவு செய்யும் தொகை அதிகமானது என்ற வகையில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணி ஒருவர் நாட்டிற்கு வரும் போது அது தொடர்பில் கிடைக்கும் அந்நிய செலாவணி வருமானம் அதிகமானது என பலர் கருதக் கூடும். ஆனால் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பெரும்பாலும் சுற்றுலாப் பொதிகளின் (*Package Tour*) அடிப்படையில் தான் இங்குவந்து செல்கின்றனர். இந்த சுற்றுலாப் பொதிக்குரிய கட்டணத்தில் அவர்களது விடுதி செலவு, உணவு, போக்குவரத்து போன்ற வசதிகள் எல்லாமே உள்ளடக்கப்படுவதுண்டு. இது தவிர

ஏனைய பொருட்களின் உள்ளூர் நுகர்வு தொடர்பில் மேலும் சில வெளிநாட்டுப் பணத்தினை சுற்றுலாப் பயணிகள் செலவு செய்வர். இந்த வகையில் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணி ஒருவர் தொடர்பில் நாட்டிற்குக் கிடைக்கின்ற பெறுவனவானது சராசரியாக 62,338 ரூபாவாக உள்ளது. ஆனால் புலம்பெயர்ந்தவர்கள் இங்கு வரும்போது அவர்கள் இங்கு செலவிடும் தொகை சுற்றுலாப் பயணிகள் செலவு செய்யும் இந்த தொகையிலும் பார்க்க அதிகமானதாகும்.

புலம்பெயர்ந்தவர்கள் இங்குவரும் போது கணிசமானதொரு வெளிநாட்டு நாணயத்தினை கொண்டு வந்து அதனை அந்நிய செலாவணி மாற்றுனர்கள் (*Money chagers*) மற்றும் வங்கிகளின்ஊடாக மாற்றி செலவு செய்கின்றனர். இது தவிர தமது கடன் அட்டை களையும் (*Credit card*) பயன்படுத்தி கொள்வனவு செய்கின்றனர். இந்த இரண்டு வழிகளிலுமே அந்நிய செலாவணி நாட்டிற்கு வருகின்றது. இவர்கள் இவ்வாறு சுற்றுலாப் பயணிகளிலும் பார்க்க கூடுதலான அளவு வெளிநாட்டுப் பயணத்தினை நாட்டில் செலவு செய்வதற்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றில் சுற்றுலாப் பயணிகளுடன் ஒப்பிடும் போது இவர்கள் கூடுதலான நாட்கள் தங்குதல், கூடுதலான அளவு பொருட்களை கொள்வனவு செய்தல், இங்குள்ள நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு அன்பளிப்புகள் கொடுத்தல், பண உதவி செய்தல் என்பன முக்கியமானவையாகும்.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணி ஒருவர் சராசரியாக ஒன்பது இரவுகள் இலங்கையில் தங்கி செல்ல புலம் பெயர்ந்த நம்மவர்கள் மூன்றுக் கிழமைகள் தொடக்கம் இரண்டு மாதங்கள் வரை தங்கிச் செல்கின்றனர்.

சுற்றுலாப் பயணிகளுடன் ஒப்பிடும் போது புலம்பெயர்ந்த நம்மவர்கள், பொருட்கள் கொள்வனவு தொடர்பில் செலவு செய்யும் தொகை அதிகமானது. ஏனெனில் அவர்கள்.இலங்கையில் இருக்கும் போது அவர்களது பாவனைக்குத் தேவையான பொருட்களை மட்டும் நுகர்வதுடன் நின்று விடாது தமது உறவினர்களிற்கு அன்பளிப்புகள் கொடுப்பதற்கும் தாம் திரும்பி போகும் போது தாம் வாழும் நாடுகளிற்கு கொண்டுப் போவதற்கும் என பல்வேறுப் பொருட்களை கொள்வனவு செய்கின்றனர். இவர்களது இலங்கை பயணத் திட்டத்தில் பொருட் கொள்வனவிற்கு என ஒரு நாளையோ அல்லது சில நாட்களையோ ஒதுக்கிக்கொண்டு தான் வருகின்றார்கள். அதிலும் குறிப்பாக சிலர் குறிப்பிட்ட சில விற்பனை நிலையங்களிற்க



போகவேண்டும் என்பதனை தமது பிரயாணத் திட்டத்தில் திட்டமிட்டுக் கொள்கின்றனர். கொழும்பு மற்றும் வடக்கு, கிழக்கின் பல விற்பனை நிலையங்களில் பண்டிகைக் காலங்களில் உள்ளது போன்ற விற்பனை புலம் பெயர்ந்தவர்கள் அதிகமாக நாட்டிற்கு வரும் கோடை விடுமுறைக் காலங்களான ஆடி, ஆவணி, புரட்டாதி மாதங்களில் காணப்படுகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சுற்றுலாப் பயணிகளுடன் ஒப்பிடும் போது புலம்பெயர்ந்த நம்மவர்களின் நுகர்வு தொடர்பில் இன்னுமொரு முக்கிய விடயம் இவர்கள் பெருமளவு பாரம்பரிய உள்ளூர்ப் பொருட்களை நுகர்தல் ஆகும். இவர்களது வாழ்க்கை முறை, பாரம்பரிய பின்னணி, தாம் சிறிய வயதில் அனுபவித்தவற்றை மீண்டும் அனுபவித்து பார்ப்பதில் உள்ள ஆர்வம் போன்ற காரணங்களினால் பாரம்பரிய உள்ளூர் பொருட்களை அதிகமாக கொள்வனவு செய்பவர்களாக இருக் கின்றனர். இதனால் இவர்களின் கொள்வனவுத் தொடர்பிலான நன்மையானது பெருமளவிற்கு உள்நாட்டவர்களால் அனுபவிக்கப் படுகின்றது என்பதுடன் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் உள்ளவர்களையும் சென்றடைகின்றது.

சுற்றுலாப் பயணிகள் நாட்டின் எல்லாப் பாகத்திற்கும் போவதில்லை. அவர்கள் சுற்றுலாவிற்குரிய இடங்கள் என பெயர்பெற்ற இடங்களிற்கு மட்டுமே போகின்றார்கள். ஆனால் புலம்பெயர்ந்தவர்கள் நாட்டிற்கு வந்து செல்லும் போது அவர்கள் நாட்டின் பெரும்பாலான பகுதிகளிற்கு செல்பவர்களாக இருக் கின்றனர். குறிப்பாக சுற்றுலாப் பயணிகள் நாட்டின் வடக்குக் கிழக்கு பகுதிகளுக்கு (கிழக்கில் உள்ள அருகம்பே என்ற இடம் நீங்கலாக) செல்வதில்லை. இதனால் சுற்றுலாத்துறையின் நன்மைகள் இப்பகுதி மக்களுக்குக் கிடைப்பதில்லை. ஆனால் புலம் பெயர்ந்த நம்மவர்கள் நாட்டிற்கு வரும்போது கொழும்பு மற்றும் தெற்கில் உள்ள கதிர்காமம், கண்டி, நுவரெலியா, சிலாபம் (முன்னேஸ்வரம்) போன்ற இடங்களிற்கு செல்வது மட்டுமல்லாது வடக்கு கிழக்கிற்கு கட்டாயமாக செல்கின்றனர். அங்கு கூடதனியே தமது சொந்த ஊர்களிற்கு செல்வதுடன் நின்று விடாது அங்கேயும் பல கோயில்கள், பார்க்க வேண்டிய இடங்கள் என்று பல்வேறு இடங்களிற்கு சென்று வருகின்றார்கள். இதனால் இவர்களின் நுகர்வு தொடர்பில் இவர்களால் செலவு செய்யும் பணம் நாட்டின் பல பாகங்களிலும் உள்ளவர்களுக்கும் சமூகத்தின் பல மட்டங்களில் உள்ளவர்களிற்கும் சென்றடைவதாக உள்ளது.

புலம் பெயர்ந்தவர்கள் இங்கு வரும்போது இங்குள்ள உறவினர்கள், நண்பர்கள், ஊர்மக்கள் என்று பலருக்கும் அன்பளிப்பு பொருட்கள் வாங்கிக் கொடுப்பதுடன் பண உதவிகளும் செய்கின் றார்கள். இது தவிர கோயில்கள், தர்மஸ்தாபனங்கள், பாடசாலைகள், கிராம முன்னேற்ற சங்கங்கள் போன்ற பல்வேறுபட்ட பொது நிறுவனங்களிற்கு பொருள் உதவிகள் மற்றும் பணஉதவிகள் செய்கின்றனர். தாங்கள் கொண்டு வந்த பணம் முடிவடைந்து விட்டால் தாம் அணிந்திருக்கும் நகைகளைக் கூட கழட்டிக் கொடுத்து விட்டுச் செல்லும் வழக்கம் கொண்ட சில புலம் பெயர்ந்தவர்களும் இருக்கின்றனர்.

இவ்வாறு புலம்பெயர்ந்தவர்கள் நாட்டிற்கு வரும்போது அவர்கள் சுற்றுலா பயணிகள் வருவதன் மூலம் பெறப்படும் நன்மைகளிற்கு சமமான அல்லது அதிலும் பார்க்க பன்மடங்கு கூடுதலான பொருளாதார நன்மைகள், நாட்டிற்கும் நாட்டில் வாழும் வெவ்வேறுபட்ட மக்களிற்கும் கிடைக்கின்றன. ஆனால் இலங் கையில் சுற்றுலாப் பயணிகளுக்கு கொடுக்கப்படும் மதிப்பு, மரியாதை, வரவேற்பு ஏதும் இவர்களிற்கு வழங்கப்படுவதில்லை. அத்துடன் பல சந்தர்ப்பங்களில் பணம் பிடுங்குதல், உரிய மரியாதையுடன் நடத்தப்படாமை போன்ற இம்சைகளிற்கும் ஆளாகுபவர்களாக இவர்கள் உள்ளனர். அத்துடன் சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு வந்து போவதன்ன ஊக்குவித்து செய்யப்படும் ஊக்குவிப்புகளில் ஒரு சிறிதளவாவது புலம் பெயர்ந்தவர்களை இலக்காகக் கொண்டு செய்யப்படுவதில்லை என்பதும் கவலை யளிக்கும் விடயங்களாகும்.

# அழிந்து போயுள்ள பொருளாதாரத்தினை மீள்கட்டியெழுப்ப உதவும் புலம் பெயர்ந்தவர்களின் முதலீடுகள்

புலம்பெயர்ந்த நம்மவர்கள், நம்மூர் பொருளாதாரம் தொடர்பில் மேற்கொள்ளும் நான்காவது பங்களிப்பு உள்நாட்டில் அவர்களால் மேற்கொள்ளப்படும் நேரடியான மற்றும் மறைமுக முதலீடுகளாகும். நாடொன்றின் அல்லது சமுதாய மொன்றின் வளர்ச்சி தொடர்பில் மேற்கொள்ளக் கூடிய மிகமுக்கிய பங்களிப்புக்களில் முதடூடு செய்தல் முக்கியமானதாகும். முதலீடுகள் மூலம் உற்பத்தி, வேலை வாய்ப்பு, அந்நிய செலாவணி உள்வருகை என பல்வேறுபட்ட பொருளாதார நன்மைகள் அடையப்படுகின்றன.

புலம் பெயர்ந்தவர்கள் தொடர்பில் தாயகத்தில் உள்ளவர்களது பாரிய எதிர்பார்ப்பு யாதெனில் அவர்கள் தாயகத்தில் பாரிய முதலீடு களை மேற்கொண்டு அழிந்து போயிருக்கும் பொருளாதாரத்தையும் சமூகத்தையும் நாட்டையும் கட்டியெழுப்புவார்கள் என்ற நம்பிக்கையாகும். வெளிநாட்டு கடன் உதவிகள், நிதியுதவிகள் என்பவற்றிற்கும் மேலாக புலம் பெயர்ந்தவர்களின் முதலீடுகள் தாயகத்திற்கு வரும், வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு பொதுவாக தாயகத்தில் உள்ளவர்களிடையே காணப்படுவதொன்றாகும்.

எவ்வாறாயினும் தற்போது கூட இந்த புலம் பெயர்ந்தவர்களின் முதலீடுகள் தாயகத்திற்கு வரத்தான் செய்கின்றன. சில புலம் பெயர்ந்தவர்கள் தாமே தாயகத்திற்கு வந்து முதலீடுகளை ஆரம்பித்து அவற்றை தாமே நிர்வகித்து வரும் அதேவேளை வேறு சிலர் தமது உறவினர், நண்பர்களினூடாக தாயகத்தில் முதலீடுகளை ஆரம்பிக் கின்றனர். எவ்வாறாயினும், இந்த முதலீடுகள் பாரியளவில்

மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை. நிரந்தர சமாதானம் ஒன்று தோன்றாத நிலையில் அவர்கள் பாரிய முதலீடுகளை தாயகத்தில் மேற்கொள்ள தயங்குவது இதற்குக் காரணமாக இருக்கலாம்.

புலம்பெயர்ந்தவர்களால் இங்கு ஆரம்பிக்கப்படும் தொழில் முயற்சிகள் கூட பெருமளவிற்கு உற்பத்தி, கைத்தொழில் சார் தொழில் முயற்சிகளாக அன்றி வியாபார மற்றும் சேவை என்பவற்றிலான முதடுலீகளாகக் காணப்படுகின்றன. வேறு சிலர் விவசாயம் சார் முதடுலீகளையும் ஆரம்பித்திருக்கின்றார்கள்.

புலம்பெயர்ந்தவர்கள் தாமே நேரடியாகவும் இங்குள்ள உறவினர், நண்பர்கள் மூலமாகவும் மேற்கொள்ளும் முக்கிய முதலீட்டு நடவடிக்கை வியாபார ஸ்தாபனங்களை ஆரம்பித்து நடாத்தலாகும். நகைக் கடைகள், புடவைக்கடைகள் மற்றும் உணவு சாலைகள் போன்றவையே இவர்களால் பெருமளவிற்கு ஆரம்பிக் கப்பட்டுள்ள வியாபார முயற்சிகளாகும். இது தவிர வேறுசிலர் கொழும்பிலும் வடக்கு கிழக்கின் சில இடங்களிலும் தங்குமிட விடுதிகள், உணவுச்சாலைகள் என்பவற்றையும் ஆரம்பித்துள்ளனர்.

புலம்பெயர்ந்தவர்களது கவனம் பெருமளவிற்கு தொழில் முயற்சிகளில் முதலீடுகளை மேற்கொள்வதிலும் பார்க்க கொழும் பிலும் வடக்கு கிழக்கிலுமாக வீடுகள் மற்றும் ஆதனங்களை கொள்வனவு செய்வதிலேயே உள்ளது. வீடு அல்லது ஆதன கொள்வனவினை பொருளாதார ரீதியில் ஒரு முதலீடாக கொள்ள முடியாது. இது நீண்டகால சொத்துகளின் கொள்வன வேயாகும்.

பொதுவாக புலம் பெயர்ந்தவர்களினால் மேற்கொள்ளப்படும் இந்த வீட்டு அல்லது ஆதன கொள்வனவானது வருமானத்தினை பெற்றுக் கொள்ளும் நோக்கிலான தொரு முதலீடாவன்றி தமது உறவினர்களின் பாவனைக்காக அல்லது தாம் திரும்பி வரும்போது தமக்குரிய வாழ்விடமாக பாவிக்கும் நோக்கத்தினை கொண்டதாகும். என்றாலும் ஒரு சிலர் கொழும்பு போன்ற இடங்களில் தொடர்மாடி வீடுகள் மற்றும் வீடுகளை கொள்வனவு செய்து அவற்றினை நாளாந்த அடிப்படையிலோ அல்லது மாதாந்த அடிப்படையிலோ வாடகைக் குக் கொடுத்து வருமானம் ஈட்டும் வழக்கத்தை கொண்டவர்களாக இருக்கின்றனர்.

புலம் பெயரந்தவர்களினது இந்த ஆதன மற்றும் வீடுகளின் கொள்வனவானது நாட்டில் காணிகள் மற்றும் வீடுகளின் விலையில் பாரிய அதிகரிப்பொன்றினை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக கொழும்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களில் காணிகள் மற்றும் வீடுகளின் விலைகள் பெருமளவிற்கு கடந்த மூன்று வருடங்களாக தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன.



கொழும்பில் தொடர்மாடிகளை அமைப்பது என்பது மிகவும் பிரபல்யமானதும் இலாபகரமானதுமானதொரு தொழிலாக உருவெடுத்துள்ளது. அதற்கு முக்கிய காரணம் இந்த புலம் பெயர்ந்தவர்கள் இவ்வீடுகளை கொள்வனவு செய்வதில் காட்டி வரும் ஆர்வமாகும். இந்த வகையில் புலம் பெயர்ந்தவர்கள் இவ்வாறான தொடர்மாடி கட்டும் முதலீட்டு திட்டங்களிற்கு பின்னணியில் இருப்பவர்களாக உள்ளனர். இந்த தொடர்மாடி கட்டி விற்கும் வியாபாரத்தில் புலம் பெயர்ந்தவர்கள் பெருமளவிற்கு நேரடியாக முதலீடுகளை மேற்கொண்டு ஈடுபடாதபோதும் அவர்கள் இந்த தொடர்மாடி கட்டுபவர்களிடம் கட்டுமான ஆரம்பித்திலேயே ஒரு பகுதி பணத்தினை செலுத்தி பின்னர் குறிப்பிட்ட காலத்திற் கொருமுறை மிகுதி பணத்தினை பகுதி பகுதியாக செலுத்தி வருவதினால் இந்த தொடர்மாடி செயற்திட்டங்கள் இவர்களின் கணிசமானளவு பணத்தினாலேயே மேற்கொள்ளப் படுகின்றன. இந்த வகையில் இந்த தொடர்மாடி கட்டி விற்கும் தொழிலானது கொழும்பில் இவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்து இருப்பதற்கு அடிப்படை காரணமாக அமைபவர்கள் புலம் பெயர்ந்தவர்களே.

இது தவிர வடக்கு கிழக்கிலும், வடக்கு கிழக்கிற்கு வெளியேயும் வாழும் தமிழர்கள் மேற்கொள்ளும் முதலீடுகளில் புலம் பெயர்ந்தவர்களின் பங்கொன்று குறிப்பிடத்தக்களவு உள்ளது. தாயகத்தில் உள்ளவர்கள் சிலர் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கும் போது அதற்கு பல சந்தர்ப்பங்களில் புலம்பெயர்ந்து வாழும் உறவினர்களின் பண உதவி மற்றும் பொருள் உதவியினைப் பெற்றுக் கொள்கின்றனர்.

புலம் பெயரந்தவர்களில் சிலர் தாம் வாழும் நாடுகளை விட்டு இங்கே வாழ்வதற்கென திரும்பி வந்துள்ளனர். அந்நாடுகளில் நிரந்தர வதிவுடமை கிடைக்காதவர்கள் சிலர் தாமாக முன்வந்து நாட்டிற்குத் திரும்பியுள்ளனர். வேறு சிலர் அங்கு அவர்களது அரசியல் தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு பலாத்காரமாக அந்நாட்டு அரசுகளால் திருப்பி அனுப்பப் படுபவர்களாக காணப்படுகின்றனர். இன்னும் சிலர் தாம் வாழ்ந்த நாடுகளில் குடியுரிமை பெற்று பின்னர் இலங்கையிலும் குடியுரிமை பெற்று இரட்டை குடியுரிமையுடன் *(Dual Citizenship)* இங்கு வந்து வாழ்கின்றனர். இவ்வாறு நாட்டிற்கு திரும்பி வந்து வாழ்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஏதோ ஒரு

முதலீட்டினை மேற்கொண்டு வியாபாரமொன்றையோ தொழில் முயற்சிகளையோ நடாத்தி வருபவர்களாக இருக்கின்றனர். இந்த வகையில் புலம் பெயர்ந்தவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் நாட்டில் முதலீடுகளினை மேற்கொள்பவர்களாகவும், முதடூடுகள் மேற்கொள்ள உதவுபவர்களாகவும் இருக்கின்றனர். எவ்வாறாயினும் முதலீடுகள் தொடர்பில் புலம் பெயர்ந்தவர்களின் கூடுதலான பங்களிப்பு தாயக மக்களினால் எதிர்ப்பார்க்கப்படுவதாக இருக்கின்றது. குறிப்பாக வடக்கு கிழக்கில் அழிந்து போயிருக்கும் பொருளாதாரக் கட்டமைப்பை மீண்டும் தூக்கி நிறுத்துவதற்கு இவர்களின் அதிகரித்த பங்களிப்பு அவசியமாகும்.

முதலீடு என்பது ஒப்பீட்டு ரீதியில் பாரிய மூலதனத்தை வேண்டி நிற்பதொன்று, அத்துடன் முதலீடு ஒன்று மேற்கொள்ளப் படும்போது அந்த முதலீட்டினை மீளப் பெறுவதற்கு நீண்டகாலம் செல்லும். அது மாத்திரமின்றி முதலீடுகள் தொடர்பில் அவற்றின் உரிய நன்மையினை பெறமுடியாது போதல், முதலீட்டினை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இழக்க வேண்டிவருதல் போன்ற ஆபத்துகள் உள்ளன என்ற வகையில் நிரந்தர சமாதானம் தொடர்பில் நம்பிக்கை ஏற்படாத நிலையில் புலம்பெயர்ந்தவர்கள் பாரிய முதலீடுகளை இங்கு மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

நிரந்தர சமாதானம் தொடர்பில் நம்பிக்கை ஒன்று வரும்போது புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வாழ்வோரில் ஒரு தொகையினர் அந்த நாடுகளை விட்டு நிரந்தரமாக இங்குவந்து வாழ்வதற்கு சாத்தியம் உண்டு. அவர்கள் அவ்வாறு நாட்டை விட்டு வெளியேறும் போது அவர்கள் இவ்வளவு காலம் அந்த நாடுகளில் வேலை செய்தது தொடர்பில் அவர்களிற்கு உரித்தான அவர்கள் ஒய்வூதியம் பெறும் போது கொடுக்க என அவர்களது சம்பளத்தில் கழித்து வைத்திருக்கும் சேர்ந்த தொகையினை அவர்கள் பெற்று கொண்டு வரக் கூடியவர் களாக இருப்பர். அந்த வகையில், புலம்பெயர்ந்தவர்கள் இங்கு வரும் போது கணிசமானதொரு தொகைப் பணத்தினை தாயகத்திற்கு கொண்டு வருவார்கள். அவ்வாறு கொண்டு வரப்படும் தொகையில் பெருமளவானவை இங்கு முதலீடுகளாக மேற்கொள்ளப்படும் என்பதில் சந்தேகமில்லை. எனவே சமாதானம் தொடர்பில் நம்பிக்கையொன்று ஏற்படும் போது புலம் பெயர்ந்தவர்கள் பலர் பாரிய முதலீடுகளை தாயகத்திற்கு வந்து மேற்கொள்வர் என நம்பலாம்.

# புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புகள் தொடர்ந்தும் கிடைக்குமா?

புலம்பெயர்ந்தவர்களின் தாயகத்திற்கான பொருளாதார பங்களிப்புக்கள் இடைவிடாது தொடர்ச்சியாக எதிர்காலத்திலும் எமக்கு கிடைத்து வருமா? என்று கேட்டால் அதற்குரிய பதில் பெருமளவிற்கு இல்லை என்பதாகத்தான் இருக்கும்.

*1983* இனைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக புலம் பெயர்ந்து வெளிநாடுகளிற்கு சென்றவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்களாக இருந்தனர். அவர்கள் அந்த நாடுகளிற்கு சென்று குடியேறியபோது அவர்களில் பெரும் பாலானவர்களின் பிரதான நோக்கம் தாங்கள் அந்த நாடுகளிற்கு செல்வதற்காக வேண்டி பட்ட கடனை உழைத்து திரும்ப செலுத்துதல் என்பதாக இருந்தது. இதனால் அவர்கள் அங்கு போனவுடன் எவ்வளவிற்கு தங்களால் உழைக்க முடியுமோ அவ்வளவிற்கு உழைத்து அதனை தாயகத்திற்கு அனுப்புவர்களாகவே இருந்தனர்.

இவ்வாறு கடன்கள் அடைக்கப்பட்ட நிலையில் அல்லது கடன்கள் இருக்காதபோது அவர்களில் பெரும்பாலானவர்களின் பிரதான நோக்கம் தாங்கள் சென்ற நாடுகளில் இயலுமான வரை உழைத்து இங்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் தமது உறவினர் நண்பர்களுக்கு பணம் அனுப்ப வேண்டும் என்பதாகவும், முடியுமானால் தமது உறவினர் நண்பர்களில் ஒரு பகுதியினரை தாம் வாழும் நாட்டிற்கு அல்லது வேறு நாடுகளிற்கு கூப்பிட உதவ வேண்டும் என்பதாகவும் இருந்தது. இந்த வகையில் இவர்கள் இயந்திரத்தைப் போல் அந்நாடுகளில் உழைத்து இங்கு பணம்

அனுப்பிக் கொண்டே இருந்தார்கள். ஒரு சிறிய அறையில் நான்கைந்து பேர் வாழ்வது, ஒருவர் வேலைக்குப் போனபின் மற்றவர் அந்த கட்டிலில் படுத்து தூங்குவது என்று அவர்கள் தமது வருமானத்தில் பெரும்பகுதியினை தமக்கென செலவு செய்யாமல் தாயகத்தில் உள்ள தமது உடன் பிறப்புகளிற்கு அனுப்புவதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். இரண்டு வேலைகள் செய்தல், மூன்று வேலைகள் செய்தல், அதிகம் சம்பாதிக்கக் கூடிய கடினமான வேலைகள் செய்தல் என்று அவர்கள் அங்கு தமக்கென வாழாமல் தாயகத்தில் உள்ள தமது உடன் பிறப்புகளிற்காகவே வாழ்பவர் களாகவே பெருமளவிற்கு காணப்பட்டார்கள்.

கடன் அடைத்தல், உறவினர், நண்பர்கள் வெளிநாட்டுக்கு கூப்பிடுதல் என்பவற்றுடன் அவர்களது கடமைகள் முடிந்து விடவில்லை. சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைத்தல், சகோதர-சகோதரிகளைப் படிப்பித்தல் என்று அவை தொடர்ந்து கொண்டே போயின. இவ்வாறான இவர்களது ஆரம்பகால நோக்கங்களும் கடமைகளும் இங்கு பணம் அனுப்புதல் என்பதனால் பெருமளவிற்கு பூர்த்தி செய்யப்படுவதாக இருந்தது.

இது மாத்திரமின்றி தொழிலின்மை, வருமான வீழ்ச்சி பொருள் விலையேற்றம், இடம்பெயர்வு, பொருள் இழப்பு, உயிரிழப்பு என பலவகையில் யுத்தத்தினால் கஷ்டப்பட்ட உறவினர்களுக்கு பணம் அனுப்பிக் கொண்டிருக்க வேண்டிய தேவை புலம்பெயர்ந் தவர்களிற்கு இருந்தது. இதனால் இயன்றவரை அவர்கள் தங்களால் முடிந்த உதவிகளை செய்தவண்ணமே இருக்கின்றனர்.

எவ்வாறாயினும், ஒரு காலத்தில் தமது உழைப்பின் பெரும்பகுதியினை தாயகத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தவர்கள் இப்போது அதில் சிறிய தொரு பகுதியினையே இங்கு அனுப்புவர் களாக இருக்கின்றனர். எதிர்காலத்தில் இந்தத்தொகை தொடர்ச்சியாக குறைவடைந்து செல்வதற்கு சாத்தியமுண்டு. ஒரு காலத்தில் தமது அடிப்படைத் தேவைகளான உணவு, இருப்பதற்கு நண்பர்களுடன் சேர்ந்து ஒரு அறை, தமக்குத்தேவையான உடுபுடவைகள் என்ப வற்றுடன் தமது தேவைகளை மட்டுப்படுத்திவிட்டு மிகுதி பணத்தினை தாயகத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்த புலம் பெயர்ந்தவர்கள் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக தமக்கென சில வசதிகளை தாம் வாழும் நாடுகளில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. அத்துடன் பின்னர் அவர்களில் பெரும் பாலானவர்கள் திருமணம் செய்தபோது ஒரு அறையில் பலபேர்



வாழ்ந்த நிலையில் இருந்து விடுபட்டு தமக்கென தனியானவீடு, கார் என வசதிகளை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்கள். அதனால் அவர்களால இங்கு அனுப்பபப் படக்கூடியதாக இருந்த பணம் குறைவடையத் தொடங்கியது. பின்னர் அவர்களிற்கு பிள்ளைகள் எனவரும் போது அவர்களது தேவைகளும் செலவுகளும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.

இது தவிர புலம்பெயர் நாடுகளில் தற்போது கணிசமானளவு நம்மவர்கள் வாழ்வதனால் அவர்களிறகு பல்வேறு சமூக தேவைகளும் தோன்றியுள்ளன. பண்டிகைகள், திருவிழாக்கள், உறவினர்களது வைபங்கள், கலாச்சார நிகழ்வுகள் என அவர்களது தேவைகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. ஒரு காலத்தில் வெறும் உழைக்கும் இயந்திரங்களாக இருந்த புலம் பெயர்ந்த நம்மவர்களில் பலர் இப்போது குடும்பஸ்தவர்களாக தாம் வாழும் நாடுகளிலேயே பல்வேறு சமூக தேவைகளைக் கொண்டவர்களாக மாறிவிட்டனர். தாயகத்தில் உள்ள உறவினர்கள், நண்பர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதனை பிரதான நோக்கமாக கொண்டிருந்தவர்களிற்கு தற்போது தமது குடும்பத்தைப் பார்த்தல், பிள்ளைகளின் எதிர்காலம் சமூக அந்தஸ்து என்ற நோக்கங்களிற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய தேவை ஒன்று ஏற்பட்டுளளது. இந்த நிலையில் இவர்களால் தாயகத்தில் உள்ள தமது உறவினர்களிற்கு அனுப்பக் கூடிய பணத்தொகை குறைவாகவே உள்ளது. புலம் பெயர்ந்தவர் களில் சிலர்தாம் வாழும் நாடுகளில் தமது குடும்ப வாழ்க்கையினைக் கொண்டு செல்வதிலேயே பல பொருளாதார சிக்கல்களை எதிர்நோக்கும் நிலைகூட சில இடங்களில் உள்ளது.

ஒரு காலத்தில் தமது இளமைக் காலத்தில் இரண்டு, மூன்று வேலைகள் என்று செய்தவர்களால் இப்போது அவ்வாறு செய்ய முடியாத நிலை. இது தவிர தற்போது குடும்பப் பொறுப்பு, பிள்ளைகள் பராமரித்தல், வழிநடத்தல், சமூக நிகழ்வுகளில் பங்குபற்றல் என பல்வேறுபட்ட தேவைகள் இருக்கும் போது அவர்களால் இரண்டு மூன்று வேலைகள் என்று செய்ய முடியாமல் உள்ளது.

இது தவிர ஐரோப்பிய யூனியனில் முன்னாள் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சில தற்போது சேர்க்கப்பட்டுள்ளதால் நம்மவர்கள் வாழும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கிழக்கு ஐரோப்பியர்கள் வேலைக்கு வருவதால் முன்னர்போல் நல்ல வேலைகள் நல்ல சம்பளத்திற்கு பெறுவதில் கஷ்ரங்கள் உள்ளன.

வேலை கொள்வோர்கள் சராசரியாக மத்திர தர வயதில் இருக்கும் நம்மவர்களிலும் பார்க்க குறைந்த வயதுள்ள கிழக்கு ஐரோப்பியர் களுக்கு வேலை கொடுக்க விரும்புகின்றனர். இந்த வகையிலும் நம்மவர்களின் வருமானம் ஓரளவிற்கு பாதிக்கப்படுவதாக உள்ளது.

ஆரம்பகாலத்தில் குடும்பத்தில் ஒருவர், இருவர் என ஒருசிலரே புலம் பெயர்ந்து வாழ்ந்து வந்தனர். ஆனால் தற்போது சிலகுடும்பங் களில் குடும்ப அங்கத்தவர்கள் எல்லோருமே வெளிநாடுகளிற்கு சென்று விட்டார்கள். ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து தமது குடும்ப உறுப்பினர்களை தாம் வாழும் நாட்டிற்கோ அல்லது வேறு நாட்டிற்கோ அழைத்துக் கொண்டமை மற்றும் ஸ்பொன்சர் மூலம் குடும்ப அங்கத்தினர்களை அழைத்துச் கொண்டமை என்று சிலகுடும்பங்களில் தாய், தந்தை உட்பட எல்லா அங்கத்தவர்களுமே வெளிநாட்டிற்கு போய்விட்டார்கள். இதனால் இவர்களைப் பொறுத்தவரை தாயகத்தில் யாருக்கும் பெரியளவில பணம் அனுப்ப வேண்டிய தேவை இல்லாமல் போய் விட்டது.

இவ்வாறு பல்வேறுபட்ட காரணங்களினால் புலம்பெயர்ந்து வாழும் நம்மவர் ஒருவர் தாயகத்திற்கு அனுப்பும் பணம் தொடர்ச்சி யாக குறைவடைந்து கொண்டே வருகின்றது.

புலம் பெயர்ந்த முதலாவது தலைமுறையினரின் உழைக்கக் கூடிய வயதெல்லை முடிவடைந்து அவர்கள் ஓய்வு பெறும் போது என்ன நடக்கும்? ஓய்வு பெற்றவர்கள் தமது தேவைகளையும் பூர்த்தி செய்து கொண்டு இங்கும் பணம் அனுப்பக்கூடிய நிலை இருக்குமா? புலம் பெயர்ந்த நம்மவர்கள் ஓய்வு பெறும் காலத்தில் அவர்களது பிள்ளைகள் உழைக்கத் தொடங்கி விடுவார்க்ள தானே என்ற கேள்வி இந்நேரத்தில் எழக்கூடும். நிட்சயமாக அவர்கள் உழைக்க தொடங்கி விடுவார்கள் தான். பெற்றோர்கள் செய்த வேலையிலும் பார்க்க நல்லவேலை செய்து கூடுதலான சம்பளம உழைக்கக் கூடியவர்களாக கூட அவர்கள் இருப்பர். ஆனால் அவர்கள் தாயகத்திற்கு தமது பெற்றோர் அனுப்பி வந்தது போல பணம் அனுப்புவார்களா என்றால் இல்லை என்றே சொல்லலாம்.

அது மாத்திரமின்றி, அவர்கள் தமது பெற்றோரைப் போல பெருமளவு தாயகப் பொருட்களை கொள்வனவு செய்பவர்களாகவும் இருக்கமாட்டார்கள். அத்துடன் தாயகத்திறகு வந்து செல்லும் ஆவலும் அவர்களது பெற்றோர் அளவிற்கு பிள்ளைகட்கு இருக்காது. முதலீடுகள் தொடர்பிலும் அவர்கள் பெருமளவிற்கு தாயகத்திற்கு வந்து முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டுவார்கள் என்பதற்கில்லை.



சிறுவர்களாக வெளிநாடு சென்றவர்களைப் பொறுத்த வரையிலும் மற்றும் வெளிநாட்டில் பிறந்த பிள்ளைகளைப் பொறுத்த வரையிலும் அவர்களது சகோதரர்கள் மற்றும் பெற்றோர் வெளிநாடுகளிலேயே இருப்பர். அந்த வகையில் தாயகத்திற்கு பணம் அனுப்வேண்டிய தேவையொன்று அடிப்படையில் அவர்களிற்கு இருக்காது. உறவினர்கள் என்று வரும்போது கூட புலம்பெயர்ந்த இளைய தலைமுறையினருக்கும் தாயகத்தில் உள்ள அவர்களது உறவினர்களிற்கும் பெருமளவு நெருக்கமான உறவு இருப்பதற்கு சந்தர்ப்பமில்லை. அவர்கள் தமது தாயகத்தில் உள்ள உறவினர்களை ஒரு சில தடவைகள் மட்டும் பார்த்திருப்பர், அல்லது கதைத்திருப்பர். வேறு சிலரைப் பொறுத்தவரை அவர்களால் தாயகத்தில் உள்ள தமது உறவினர்களுடன் கதைக்கும் சந்தர்ப்பமே இருக்காது. ஏனெனில் அவர்களில் பலருக்கு தமிழ் தெரியாது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக வெளிநாட்டு சூழல் ஒன்றில் பெருமளவிற்கு வளர்ந்த பிள்ளைகளின் வாழ்க்கை முறை கூட பெருமளவிற்கு நமது வாழ்க்கை முறையில் நின்றும் வேறுபட்டதாக இருக்கும். இதனால் பெற்றோரைப் போல் கடுமையாக வேலை செய்ய அவர்கள் தயாராக இல்லாமல் இருக்கலாம். பெற்றோரைப் போல சேமிக்கும் பழக்கமோ சிக்கனமாக வாழும் பழக்கமோ அவர்களிடம் இருக்காது போகலாம். அவர்களது உணவுப்பழக்கம் கூட பெருமளவிற்கு அவர்கள் வாழும் நாட்டு உணவுகளாக இருக்கலாம். இதனால் இவர்கள் தாயகப் பொருட்களை அதிகம் கொள்வனவு செய்யமாட்டார்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக இந்த பிள்ளைகளில் சிலர் வெளி நாட்டவர்களை திருமணம் செய்பவர்களாக இருப்பர்.

இவ்வாறான தொரு நிலையில இந்த பிள்ளைகளைப் பொறுத்தவரையில் தாயகத்துடன் அவர்களது தொடர்பு என்பது அவர்களது பெற்றோர்கள் தற்போது கொண்டுள்ள தொடர்புடன் ஒப்பிடும் போது மிகவும் வரையறுக்கப்பட்டதாகவே இருக்கும்.

புலம் பெயர்வு பெருமளவிற்கு 1983-1995 காலப்பகுதி தான் இடம்பெற்றது. இக்காலப்பகுதியில் கூட அதன் முற்பகுதியில் தான் அதிகமானவர்கள் வெளிநாடு சென்றனர். 18 வயதிற்கு மேற்பட்டவர் களே பெருமளவிற்கு புலம் பெயர்ந்து சென்றனர். இந்த வகையில் பார்க்கும் போது புலம் பெயர்ந்த முதலாவது தலைமுறையினரின் தற்போதைய சராசரி வயது ஏறக்குறைய 45 வயதாகும். இந்த வகையில் இன்னும் 15 வருடங்கள் மட்டில் தான் அவர்கள் உழைக்க கூடியவர்களாக இருப்பர்.

இதனை தவிர தற்போது நாட்டில் யுத்தமற்ற சூழ்நிலை காணப்படுகின்ற நிலையில் அரசியல் தஞ்சம் கோரி அது நிராகரிக்கப் பட்ட புலம் பெயர்ந்தவர்கள் சிலர் திருப்பி அனுப்பப்படும் நிலைகூட காணப்படுகின்றது. இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளில் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு இருந்தவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை அங்குள்ள குடியேற்ற (*Immigration*) அலுவலகத்தில் அல்லது பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும் என்ற நியதி உள்ளது. அவ்வாறு கையொப்பமிடச் சென்றவர்கள் சிலர் வலுக்கட்டாயமாகப் பிடித்து நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படும் சம்பவங்களும் இடம் பெறுகின்றன.

இவையெல்லாவற்றையும் வைத்து நோக்கும் போது புலம் பெயர்ந்த நம்மவர்கள் தாயகப் பொருளாதாரம் தொடர்பில் ஆற்றும் பங்களிப்பானது குறைவடைந்து வரும் நிலையொன்று காணப் படுகின்றது. எதிர்காலத்தில் இந்த குறைவு மேலும் அதிகமாக இருக்கலாம். இவ்வாறு புலம் பெயர்ந்தவர்களின் தாயகத்திற்கான பொருளாதாரப் பங்களிப்புக்கள் குறைவடையும் போது அது பல்வேறு பிரச்சனைகளை தாயகப் பொருளாதாரத்திலும் மக்களின் வாழ்க்கையிலும் ஏற்படுத்துவதாக இருக்கும். இந்த வகையில் இதனை எதிர் கொள்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோமா? என்பது சிந்திக்க வேண்டியதொன்றாகும்.

# வெளிநாட்டுப் பணத்தினை பொறுப்பற்ற முறையில் செலவு செய்யும் தாயக உறவுகள்

புலம் பெயர்ந்தவர்கள் ஒருகாலத்தில் தமது உழைப்பின் பெரும் பகுதியினை தாயகத்தில் உள்ள உடன் பிறப்புகளிற்கு அனுப்பிக் கொண்டிருந்தனர். பின்னர் அவர்கள் திருமணம் செய்து குடும்பம், பிள்ளைகள் என வந்து அத்துடன் பல்வேறு பட்ட சமூக தேவைகள் அவர்களிற்கு வந்தபோது அவர்களால் இங்கு அனுப்பக் கூடியதாக இருக்கின்ற பணம் தொடர்ச்சியாகக் குறை வடைந்து வருவதாக உள்ளது. இவர்கள் ஓய்வுபெற்று அவர்களது பிள்ளைகள் உழைக்கும் காலத்தில் வெளிநாட்டில் இருந்துவரும் பணம் என்பது பெருமளவிற்கு நின்று விடும். ஆனால் நாம் இது பற்றி சிந்திப்பதாக தெரியவில்லை. அத்துடன் இது தொடர்பில் எமது எதிர்காலத்தினை பாதுகாத்துக் கொள்ளும் வகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுப்பதாகவும் தெரியவில்லை. மாறாக உழைப்பின் கஷ்ரம் தெரியாமல் ஊதாரித்தனமாக செலவு செய்து கொண்டிருக்கும் நிலையொன்று தான் தாயகத்தில் பெருளவிற்குக் காணப்படுகின்றது.

புலம் பெயர்ந்தவர்கள் தாயகத்திற்கு அனுப்பும் பணம் தொடர்பில் கவனிக்கத்தக்கதொரு விடயம் உழைப்பவர் ஒருவராக வும் செலவு செய்பவர் வேறு ஒருவராகவும் இருப்பதாகும். இங்கு உழைப்பவர்கள் ஒருபுறம் கஷ்டப்பட்டு உழைத்துக் கொண்டிருக்க தாயகத்தில் உள்ள பலர் உழைப்பின் கஷ்ரம் தெரியாமல் செலவு செய்து கொண்டிருக்கின்றார்கள்.

தாயகத்தில் உள்ளவர்களின் வாழ்க்கைச் செலவிற்கும் ஏனைய தேவைகளிற்குமாக வேண்டித்தான் புலம் பெயர்ந்தவர்கள் பணம் அனுப்புகின்றார்கள். இந்த வகையில் இவ்வாறு வரும் பணத்தில் பெரும்பகுதி செலவளிக்கப் படவேண்டியது தான். ஆனால்

தாயகத்திலுள்ள பிரச்சனை யாதெனில் அந்தப்பணமானது தேவையான விடயங்களிற்க மட்டும் உரிய முறையில் செலவு செய்யப்படுகின்றதா என்பதாகும்.

புலம் பெயர்ந்தவர்களிடம் இருந்து பணத்தினைப் பெறும் பலர் பல்வேறு தேவையற்ற விடயங்களிற்கு பணத்தினை வீண் விரயம் செய்கின்ற நிலையொன்று காணப்படுகின்றது. தேவையான பலவிடயங்களிற்குக் கூட சிக்கனமாக செலவு செய்யப்படாமல் அளவுக்கதிகமாக செலவு செய்யும் பழக்கம் நம்மவர்கள் பலரிடையே உள்ளது. புலம் பெயர்ந்த நாடுகளில் நம்மவர்கள் படும் கஷ்ரத்தில் ஓரளவு பங்கினையாவது தாயகத்தில் உள்ளவர்கள் பகிர்ந்து கொள்ளத் தவறிவிடும் நிலை காணப்படுகின்றது. பணம் வந்து கொண்டிருக்கின்றபடியால் உழைக்க வேண்டிய தேவையினையோ அல்லது வருமானத்தின் அளவினை அதிகரித்துக் கொள்ளவேண்டியதன் தேவையினையோ உணராமல் வாழுகின்ற தன்மை காணப்படுகின்றது. புலம் பெயர்ந்தவர்கள் அனுப்பும் பணத்தில் ஒரு பகுதியினை அன்றாட வாழ்க்கைத் தேவைக்குப் பயன்படுத்திவிட்டு மறு பகுதியினை எதிர்கால தேவைக்காக சேமித்து வைக்கவோ அல்லது வருமானம தரும் முதலீடுகளில் அவற்றினை முதலிட்டுக் கொள்ளவோ உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. புலம் பெயர்ந்தவர்கள் அனுப்பும் பணத்தில் ஒரு பகுதி இடைத்தரகர்களாலும், ஏனையோர்களாலும் சுரண்டப்படுகின்றது.

தேவையற்ற பல செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பலர் தேவையெதுவுமின்றி, நோக்கமெதுவுமின்றி கொழும்பில் இருக்கின்றனர். இவர்கள் தமது சொந்த இடங்களில் வாழ்வதனை போல் பலமடங்கு செலவில் தான் கொழும்பில் இருக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். அது மாத்திரமின்றி கொழும்பில் உள்ளவர்களில் சிலர் வாடகை வீடுகளில் அன்றி பல விடுதிகளிலும் லொட்ஜ்களிலும் பல வருடங்களாக இருக்கின்றனர். விடுதிகள் மற்றும் லொட்ஜ்கள் தற்காலிகமாக தங்குவதற்கு என அமைக்கப்பட்டவை என்ற வகையில் இவற்றிற்கு அறவிடப்படும் வாடகைப்பணம் வீடுகள் அல்லது அறைகளிற்கான வாடகைப் பணத்திலும் பார்க்க அதிகமானதாகும். அத்துடன் இந்த விடுதிகள் மற்றும் லொட்ஜ்களில் குடும்பமாக வாழ்வதற்குரிய வசதிகள் குறைவாகவே காணப்படுகின்றன. இன்று தமிழர்கள் அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கு மக்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் வாழ்க்கைச் செலவு அதிகமாக இருக்கின்றது. வடக்குக் கிழக்கில் நம்மால் கட்டுப்படுத்த முடியாத காரணிகளான பொருளாதாரத் தடை, அதிகரித்த போக்குவரத்துச் செலவு போன்ற காரணிகளால் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கிறது. இவை நம்மால் கட்டுப்படுத்த முடியாத காரணிகளாகும் ஆனால் தற்போது இந்த வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கு நம்மவர்களே பெருமளவிற்குக் காரணமாக உள்ளனர். வீட்டு வாடகை, பொருட்களின் விலை, முச்சக்கரவண்டிக் கட்டணம், இடைத்தரகர்களின் கட்டணம் என்று எதை எடுத்தாலும் அதிகரித்த செலவு காணப்படுகின்றது. உதாரணமாக வெள்ளவத்தையை எடுத்துக் கொண்டால் இலங்கையிலேயே வாழ்க்கைச் செலவு கூடிய இடம் வெள்ளவத்தை என்று சொல்லக் கூடிய அளவிற்கு அங்கு செலவுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. பொருட்களின் விலைகள் வெள்ளவத்தையில் ஒப்பீட்டு ரீதியில் அதிகமாக உள்ளன. உதாரணமாக மரக்கறிகளின் விலையினை எடுத்துக் கொண்டால் அவை புறக்கோட்டை சந்தை விலையிலும் பார்க்க இரண்டு தொடக்கம் மூன்று மடங்கு அதிகமாக உள்ளது. பல சூப்பர் மார்க்கட் விலைகளிலும் பார்க்க வெள்ளவத்தை சந்தையில் பொருட்களின் விலை அதிகம்.



இதற்கு வியாபாரிகளை குறை கூறுவதிலும் பார்க்க அவற்றை கொள்வனவு செய்யும் எம்மவர்களையே குறை கூறவேண்டும். நம்மில் பலர் பேரம்பேசி பொருட்கள் வாங்குவதில்லை. பொருட்கள் என்ன விலைக்கு உள்ளன என்பதைப் பற்றி பலர் அலட்டிக் கொள்வதுமில்லை. அவை ஏனைய இடங்களில் என்ன விலைக்கு உள்ளன என்பதனை ஒப்பிட்டுப் பார்ப்பதுமில்லை. வேலையேதுமின்றி பெரும்பாலும் சும்மா நேரத்தைப் போக்க வழிதெரியாது திண்டாடும பலர் சற்று தள்ளிச் சென்று புறக்கோட்டைச் சந்தையிலோ, கரகம் பிட்டிய சந்தையிலோ பொருட்களை வாங்குவது பற்றிச் சிந்திப்பதில்லை. உயர் விலையென்று பார்க்காமல் பொருட்களை வாங்குவதற்கு பலர் தயாராக உள்ள நிலையில் வியாபாரிகளும் விலையைக் கூட்டி விற்பவர்களாக இருக்கின்றனர். இதே போலத்தான் ஏனைய பல பொருட்கள் தொடர்பிலான கொள்வனவுகளிற்கும் கூடுதலான செலவு செய்யப்படும் நிலை காணப்படுகின்றது. முச்சக்கர வண்டிக் கட்டணம், வீட்டு வாடகை போன்றவை இவற்றிற்கு சில உதாரணங்களாகும்.

கொழும்பில் இலவசமாக செய்ய வேண்டிய பல செயல்களிற்கு கட்டணம் கொடுத்து செய்யும் வழக்கம் நம்மவர்களிடையே உள்ளது. வேறுசில விடயங்கள் தொடர்பில் உரிய கட்டணத்திலும் பார்க்க கூடுதலான கட்டணம் செலுத்தி இடைத்தரகர்களுடாக அவை மேற்கொள்ளப் படுகின்றன. குப்பை எடுப்பவர் தொடக்கம் நுளம்பு

மருந்து அடிப்பவர் என எவரை எடுத்துக் கொண்டாலும் இலவசமாக செய்யப்பட வேண்டிய சேவைகளிற்கு பணத்தினை எதிர்பார்ப்பவர் களாக இருக்கின்றனர் நம்மவர்களும் கொடுக்கத் தயங்குவதில்லை.

இதேபோன்று பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் எடுத்தல், அடையாள அட்டை எடுத்தல் என்று எந்தக் காரியமாக இருந்தாலும் அதற்குரிய கட்டணத்திலும் பார்க்க அதிக கட்டணத்துடன விரைவாக பெற்றுத்தருவதற்கு இடைத்தரகர்கள் இருக்கின்றார்கள். இந்த இடைத்தரகர்கள் பலர் நம்மவர்களை நம்பித்தான் வாழ் கின்றனர்.

நம்மவர்களில் பலர் வேலையின்றி சும்மா இருக்கின்றார்கள் அல்லது ஏதோ பொழுதைப் போக்க வேண்டும் என்பதற்காக எந்தவிதநோக்கமுமின்றி ஏதோ படிப்பதாகச் சொல்லிக் கொண்டு நேரத்தையும் பணத்தையும் வீணடிக்கின்றார்கள். வேலையற்றிருக்கும் போது பலருக்கு தேவையற்ற தேவைகள் பல எழுகின்றன. இந்த வகையிலும் கூட புலம் பெயர்ந்தவர்கள் அங்கு கஷ்ரப்புட்டு அனுப்பும் பணம் விரயமாக்கப்படுகின்றது.

இன்று நமது இளைஞர்கள் பலரிடம் கையடக்க தொலைபேசி, மோட்டார் சைக்கிள் என்பன சாதாரணமாகக் காணப்படுகின. அவற்கான தேவை உண்மையிலே அவர்களிற்கு உள்ளதா என்பது கேள்விக்குறிதான். இதேபோல பல்வேறு பொருட்கள், சேவைகள் அதற்கான உரிய தேவையொன்று இல்லாமலே வெளிநாட்டுப் பணம் வருகின்றது என்ற ஒரே காரணத்தினால் நுகரப்படுகின்றன.

வெளிநாட்டுப் பணம் பெருமளவிற்கு உண்டியல் மூலம் வருவதனால் வங்கியில் பணத்தினை வைப்பிலிடுதல் மற்றும் அதில் ஒரு பகுதியினை சேமித்தல் என்பவற்றிற்கு உரிய முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரியவில்லை.

இங்குள்ள நம்மவர்களில் பலர் பல்வேறுபட்ட கஷ்ரங்களை அனுபவிக்கின்றார்கள் என்பது உண்மை தான். ஆனால் வேறு சிலர் வெளிநாட்டுப் பணத்தில் தேவையற்ற பல செலவுகளை செய்பவர் களாக இருக்கின்றனர். அவ்வாறு அந்த தேவையற்ற செலவுகளை நிறுத்தி தேவையான விடயங்களை சிக்கனமாக செய்து புலம் பெயர்ந்தவர்கள் அனுப்பும் பணத்தில் ஒரு பகுதியினை சேமித்து, முடியுமானவர்கள் முதலீடுகளை மேற்கொண்டு தாமாக வருமானம் உழைக்க வேண்டிய தேவையொன்று உள்ளது.



மற்றவர்களைப் பார்த்து அவர்கள் செய்கின்றார்கள் என்பதற்காக பல்வேறுபட்ட தேவையற்ற செலவுகள் செய்வதனால் பெருமளவு பணம் வீணடிக்கப்படுகின்றது. பலர் அளவுக்கதிகமாக செலவு செய்வதனால் கடைக்காரர், முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள், இடைத்தரகர்கள், வீட்டுரிமையாளர்கள் என்று எவரை எடுத்தாலும் சாதாரண கட்டணத்திலும் பார்க்க கூடுதலானதொரு கட்டணத்தை எதிர்பார்க்கும் தன்மையொன்று காணப்படுகின்றது. இவர்களுக் கென்ன வெளிநாட்டில் இருந்து வேண்டுமென்றளவு பணம் வருகின்றது என்ற எண்ணம் பலரிடையே இருக்கின்றது.

வெளிநாட்டுப் பணம் என்பது நெடுக வந்து கொண்டிருக்காது என்பதனை மனதில் கொண்டும் புலம்பெயர்ந்தவர்களிற்கு வெளி நாடுகளில் பணம் சும்மா கிடைப்பதில்லை, அவர்கள் மிகவும் கஷ்ரப்பட்டு பல தியாகங்களில் மத்தியில் தான் பணம் அனுப்புகின்றார்கள் என்பதனையும் கருத்தில் கொண்டும் வீண் செலவுகளை விட்டு தேவையானவற்றை சிக்கனமாகச் செய்து எதிர்காலம் தொடர்பில் சேமிக்கவும் வருமானம் உழைத்துத் தரக் கூடிய முதலீடுகளை மேற்கொள்ளவும் முன்வரவேண்டும். வெளிநாட்டில் இருந்து பணம் வராவிட்டால் கூட சொந்த காலில் நிற்பதற்கான தயார்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

# சொந்தத் தேவைகளையும் சுகங்களையும் சுருக்கிக் கொண்டு தாயக உறவுகளிற்கு உதவும் புலம்பெயர்ந்தவர்கள்

உழைப்பின் கஷ்ரம தெரியாமல் புலம் பெயர்ந்த நம்மவர்கள் அனுப்பும் பணத்தை உல்லாசமாகவும் ஊதாரித்தனமாகவும் செலவு செய்து கொண்டிருக்கும் நம்மில் பலருக்கு பல்வேறு கஷ்ரங்கள், சிரமங்கள் மத்தியில் தான் அவர்கள் எமக்கு பணம் அனுப்பிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது தெரிவதில்லை. ஒப்பீட்டு ரீதியில் அவர்கள் வாழும் நாடுகளில் தொழில்வாய்ப்புகள் கிடைக்கின்றன என்பதும் அவர்களது தொழில் தொடர்பில் நியாயமான ஊதியம் ஒன்று வழங்கப்படுகின்றது என்பதும் உண்மைதான். ஆனால் அந்த ஊதியம் பெருமளவிற்கு அந்த நாடுகளில் அவர்கள் நியாய மானளவிற்கு நல்ல தொரு வாழ்க்கையினை கொண்டு செல்வதற்குத் தான் போதுமானது. புலம் பெயர்ந்த நம்மவர்கள் தாம் வாழும் நாடுகளில் அந்நாட்டு மக்களின் வாழ்க்கை முறையின் ஒத்த வாழ்க்கையொன்றை வாழ்வார்கள் எனில் அவர்களால் தமது வருமானத்தில் ஒரு பகுதியினை மிச்சம் பிடித்து இங்குள்ள தமது உறவினர்களுக்கு பணம் அனுப்ப முடியாது போய்விடும்.

இந்த வகையில் நம்மவர்கள் கஷ்ரப்பட்டு கூடுதலான நேரம் வேலை செய்து உழைப்பதனாலும் சிக்கமனாக செலவு செய்து வருமானத்தில் ஒரு தொகையினை மிச்சம் பிடிப்பதனாலுமே தமது வருமானத்தில் ஒரு பகுதியினை இங்குள்ளவர்களுக்கு அனுப்பக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

புலம் பெயர்ந்த நம்மவர்களில் பலர் தாம் வாழும் நாடுகளில் அந்த நாட்டு மக்களுடன் ஒப்பிடும்போது ஒரு எளிமையான



வாழ்க்கை முறையினையே கடைப்பிடிக்கின்றார்கள். பெரும்பாலான குடும்பங்களில் கணவன், மனைவி என இருவருமே வேலை செய்கின்றார்கள். சில சந்தர்ப்பங்களில் கணவன், மனைவி இருவரும் வெவ்வேறுபட்ட வேலை நேரங்களில் வேலை செய்யும் போது அவர்கள் இருவரும் ஒன்றாக சந்திக்கும நேரங்கள் குறைவாக இருக்கின்றன. அதே போல்தான் பிள்ளைகளுடன் அவர்கள் செலவு செய்யக் கிடைக்கக்கூடியதாக உள்ள நேரமும் குறைவாகவே உள்ளது. புலம் பெயர்ந்து வாழும் நம்மவர்களது பெரும்பாலான நாட்க ளானவை வேலை செய்யும் நேரம், வேலைக்குப் போய்வரும் நேரம் மற்றும் நித்திரை கொள்ளும் நேரம் என்பவற்றில் செலவு செய்யப்படுபவயாக இருக்கின்றன. அத்துடன் ஒருவர் ஒன்றிற்கு மேற்பட்ட வேலை செய்பவராகவும் அந்த வேலைகள் வெவ்வேறு இடங்களிலும் அமைந்து விடும் போது அவர்கள் நித்திரை கொள்ளும் நேரம் கூட பெருமளவிற்கு குறைந்து விடுவதாக இருக்கும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளிலுள்ள நிறுவனங்களில் ஊழியர் பயன்பாடு என்பது உச்சப்படுவதாக காணப்படுகின்றது. இதனால் அங்கு ஊழியர்கள் வேலை தொடங்கிய நேரத்தில் இருந்து வேலை முடியும் நேரம் வரை குறிப்பிட்ட வேலையில் முழுமையாக தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியவர்களாக இருப்பர். அத்துடன் அங்குள்ள நிறுவனங்களில் தேவைக்கு அதிகமான ஊழியர்களை நிறுவனத்தில வைத்திருக்க மாட்டார்கள் என்பதுடன் காலத்திற்குக் காலம் நிறுவன ஊழியர்களைக் குறைக்கும் (*Lay off*) வழக்கத் தினையும் கொண்டுள்ளன. இந்த வகையில் வெளிநாட்டில் வேலை நேரத்தில் ஊழியர்கள் மிகவும் விரைவாகவும் வினைத்திறனுடனும் வேலை செய்ய வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர். நம் நாட்டைப் போன்று தேவைக்கு அதிகமான ஊழியர்கள் இருத்தல், அலுவலகத்தில் ஓய்வெடுத்தல், அலுவலக நேரங்களில் தமது சொந்த வேலைகளைப் பார்த்தல், அக்கறையின்றி ஆறுதலாக வேலை செய்தல் போன்ற செயற்பாடுகள் புலம்பெயர் நாடுகளில் நினைத்துப் பார்க்க முடியாததாகும். அந்நாடுகளில் ஊழியர் தொடர்பில் பெருமளவிற்கு தேவை யேற்படும்போது வேலைக்குச் சேர்த்தல், வேலையில்லாத போது வேலையில் இருந்து நீக்குதல் (*Hire and Fire Policy*) என்ற கொள்கை பயன்படுத்தப்படுவதால் ஊழியர் ஒருவரின் பெறுபேறு திருப்திகரமாக இல்லை என்று கருதும் போது அவ்வூழியரை எந்த நேரத்திலும் வேலையில் இருந்து நீக்கக் கூடியதாக இருக்கும். எனவே அந்நாடுகளில் உள்ள புலம் பெயர்ந்த

நம்மவர்களும் தமது உழைப்பினை உரியமுறையில் செலுத்தியே ஊழியத்தினை உழைக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

கணவன், மனைவி இருவரும் வேலை செய்யும் குடும்பங்களில் பிள்ளைகளைப் பராமரிப்பது என்பது மிகவும் கஷ்ரமானதொன்றாகும். புலம் பெயர்ந்த நாடுகளில் நம்நாட்டைப் போன்று அவர்களது குடும்பத்தில் பெற்றோர், சகோதரர்கள் எனப்பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு பெருமளவிற்கு ஆட்கள் வீட்டில் இருப்பதில்லை. இதனால் பிள்ளைகளை பராமரிப்பு அகங்களில் *(Day Care Centers)* ஒப்படைத்து விட்டு வேலைக்குப்போக வேண்டிய நிலையில் பெற்றோர்கள் இருக்கின்றனர். அவ்வாறு பராமரிப்பு இடங்களில் பிள்ளைகளை விடுவது தொடர்பில் கட்டணம் ஒன்று செலுத்தப்படல் வேண்டும். இந்த வகையில் உழைப்பில் ஒரு பகுதி அதற்கு செலவிடப்படுவதாக இருக்கும்.

நன்றாகப் படித்து பல்கலைக்கழக பட்டத்தினை பெற்றபின் வெளிநாடுகளிற்கு சென்ற புலம்பெயர்ந்த இளைஞர்கள் சிலர் சாதாரண வேலைகளைச் செய்யும் நிலையிலேயே அங்கு தற்போதும் இருக்கின்றார்கள். இதற்குக் காரணம் அவர்கள் அந்த நாடுகளிற்குப் போய்ச் சேர்ந்தவுடன் அவர்கள் வெளிநாடு செல்ல பெற்ற கடனை அடைக்க வேண்டும், ஊரில் உள்ள தமது குடும்பத்தவர்களிற்கு பண உதவி செய்ய வேண்டும் என்று பல்வேறு தேவைகள் இருந்தன. இதனால் ஏதோ ஒரு வகையில் ஏதோ ஒரு தொழிலைச் செய்து பணம் உழைத்து ஊருக்கு அனுப்பவேண்டிய அவசியத்தேவை ஒன்று அவர்களிற்கு இருந்தது. இந்த நிலையில் அவர்கள் கிடைத்த ஒரு வேலையில் சேர்ந்து உழைக்க தொடங்கி விட்டனர். ஒரு வேலையில் உழைக்கும் பணம் போதுமானதாக இல்லாதுபோது இரண்டு வேலைகள் செய்தல் என வந்து அவர்கள் தமது தகுதிக்கேற்ற வேலையினை தேடவோ அல்லது அவ்வாறானதொரு தகுதிக்குகேற்ற வேலைகளிற்கு தங்களை தயார்படுத்திக் கொள்ளவோ நேரமற்றவர்களாக இருந்தனர். வெளிநாடுளில் ஒப்பீட்டுரீதியில் நல்ல வேலைகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் உரியமுறையில் விண்ணப்பங்கள் *(Resume)* தயாரித்து அனுப்புதல் வேண்டும். அதேபோல் நேர்முகப்பரீட்சைகளிலும் வெற்றி பெறல் வேண்டும். பொதுவாக இந்நாடுகளில் விண்ணப்பங்கள் தயாரித்தல், நேர்முகப் பரீட்சையினை எதிர்கொள்ளல் என்பது தொடர்பில் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படுவதுண்டு. இவ்வாறு பயிற்சி வகுப்புகளுக்குச் சென்று தம்மை தயார்படுத்தி நல்ல வேலைகளிற்கு செல்லக்கூடிய சூழ்நிலையில் அந்த நேரத்தில் புலம் பெயர்ந்த பல நம்மவர்கள்



இருக்கவில்லை. எப்படியாவது உழைத்து ஊருக்கு அனுப்ப வேண்டும் என்ற தேவை இருந்தமையால் அவர்கள் தமது தகுதிக்கேற்ற வேலைகளைப் பெற்று தம்மை நல்லதொரு முறையில் தொழில் அபிவிருத்தி *(Career Development)* செய்ய முடியாதவர்களாகிவிட்டனர்.

இதேபோன்று புலம்பெயர்ந்த நம்மவர்கள் பலர் தமது நேரத்தை பெருமளவிற்கு வேலையிலும் நித்திரையிலும் செலவு செய்து வருகின்ற நிலையில் அவர்கள் தமது சுய மேம்பாடு தொடர்பில் செலவு செய்யக்கூடிய நேரம் மிகக்குறைவாகவே உள்ளது. இந்த வகையில் புலம்பெயர்ந்தவர்களில் சிலர் தாம் வாழும் நாடுகளில் உள்ள மொழியினை கற்று தேர்ச்சி பெறக் கூட நேரம் அற்றவர்களாக இருக்கின்றனர். புலம் பெயர்ந்தவர்களில் பலர் அந்நாடுகளிற்குச் சென்று ஒரு தசாப்தத்திற்கு மேலாகியும் கூட உரிய மொழியறிவு இல்லாதவர்களாக உள்ளனர். உதாரணமாக ஆங்கில மொழி பேசும் இங்கிலாந்தில் பல வருடங்கள் வாழ்ந்து, இங்கிலாந்துக் குடியுரிமை பெற்று இங்கிலாந்து கடவுச்சீட்டு வைத்திருக்கும் புலம்பெயர்ந்த நம்மவர்களில் சிலருக்கு ஆங்கில அறிவு பெருமளவிற்கு இல்லை. ஏதோ சில ஆங்கிலச் சொற்களைப் பேசி தமது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் இவர்கள் இருக்கின்றார்களே தவிர உரியமுறையில் வசனங்களை அமைத்து ஆங்கிலத்தில் கதைக்கக்கூடிய நிலை அவர்களுக்கு இல்லை.

இதே போன்ற மொழியறிவு பிரச்சனை ஏனைய மொழிபேசும் மற்றைய நாடுகளில் வாழும் நம்மவர்கள் சிலருக்கும் உள்ளது. இதனால் இவர்கள் சரியாக மொழிப்பிரயோகத்துடன் மேற்கொள்ள வேண்டிய பல வேலைகள் தொடர்பில் வேறு ஆட்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியவர் களாயிருக்கின்றனர். இது தொடர்பில் ஓரளவு வளர்ந்த பாடசாலை செல்லும் பிள்ளைகள் உள்ள பெற்றோர் தமது பிள்ளைகளின் உதவியினால் தமது மொழிப்பிரச்சினையினை தீர்த்துக் கொள்கின்றனர். பிரான்ஸ் போன்ற நாடுகளில் அந்நாட்டு குடியுரிமை வழங்குவது தொடர்பில் திருப்திகரமான மொழியறிவு என்பது அவசியமானதாக உள்ளது. நம்மவர்களில் பலர் அந்நாடுகளில் நீண்ட காலம் வாழ்ந்து குடியுரிமை பெறுவது தொடர்பில் ஏனைய எல்லா தகுதிகளையும் பெற்றிருந்தும் கூட உரிய மொழியறிவு இல்லாமையினால் அந்நாட்டுக் குடியுரிமை பெறுவதில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். அந்நாடுகளில் மொழியினை கற்பிற்பதற்கு பல்வேறு இலவச நிலையங்கள் காணப்படுகின்ற போதும் கூட அவர்களிற்கு இருக்கின்ற அதிகரித்த

தேவைகள் காரணமாக உழைக்கும் நேரத்தைக் குறைத்து அல்லது இடைநிறுத்தி மொழியினை கற்கவோ ஏனைய வழிகளில் தம்மை மேம்படுத்திக்கொள்ளவோ முடியாத நிலையில் புலம்பெயர்ந்த நம்மவர்கள் சிலர் இப்போதும் இருக்கின்றனர்.

புலம் பெயர்ந்த நம்மவர்கள் அபிவிருத்தியடைந்த நாடுகளில் வாழ்கின்ற போதும் அவர்களில் சிலரது வாழ்க்கைத்தரம் (*Quality of Life*) சில சந்தர்ப்பங்களில் அவர்கள் முன்னர் தாயகத்தில் வாழ்ந்த போது இருந்த வாழ்க்கைத் தரத்திலும் பார்க்க குறைவானது என்றும் சொல்லக் கூடிய அளவிற்கு உள்ளது. அவர்கள் ஒப்பீட்டு ரீதியில் அதிக வருமானத்தை பெறுபவர்களாகவும் வளர்ச்சியடைந்த தொரு சூழலில் வாழ்பவர்களாக இருந்த போதும் கூட அவர்களது வாழ்க்கைமுறை, குடும்ப உறவு, குடும்பத்தவர்களுடன் செலவு செய்யும் நேரம், ஓய்வு நேரம், விளையாட்டு, சமூக நடவடிக்கைகள், சமூக அந்தஸ்து, சமூக அறிவு, பொது அறிவு, பொழுது போக்குகள் போன்ற பல்வேறுபட்ட காரணிகளின் அடிப்படையில் பார்க்கும் போது புலம்பெயர்ந்தவர்கள் சிலரது வாழ்க்கை முறையும், வாழ்க்கைத்தரமும் திருப்திகரமானதாக இல்லாமல் உள்ளது. வேலையிலும் நித்திரையிலும் இவர்களது பெரும்பாலான நேரம் போய்விடுகின்றது. இதனால் இவர்கள் தமக்குள்ள பல்வேறுபட்ட தனிப்பட்ட, குடும்ப மற்றும் சமூக செயற்பாடுகளினை மேற்கொண்டு தமது வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றிக் கொள்ள போதிய நேரமும் பணமும் இல்லாதவர்களாக இருக்கின்றனர். இந்த வகையில் புலம் பெயர்ந்த நம்மவர்களில் பலர் எளிமையான வாழ்வு, கடினமான உழைப்பு, சிக்கனமான செலவு, சிரமங்களுடனான குடும்பவாழ்க்கை, தகுதிக்கேற்ற வேலையின்மை, உரிய மொழியறி வின்மை, உரிய வாழ்க்கை தரமின்மை போன்ற பல்வேறு விட்டுக் கொடுப்புகளின் மத்தியில் தான் தாயகத்திலுள்ள தமது உறவினர் நண்பர்களிற்கு உதவி செய்கின்றாரகள் என்பதனை தெரியாதவர் களாகவும் உணராதவர்களாகவும் தாயகத்தில் உள்ள பலர் இருக்கின்றோம்.

# கடந்த காலத்தினையும் பிறந்த நாட்டையும் மறந்த சில புலம் பெயர்ந்தவர்கள்

புலம் பெயர்ந்தவர்கள் எல்லோருமே தமது தேவைகளையும் விருப்புகளையும் மட்டுப்படுத்திக் கொண்டு தாயகத்தில் உள்ள தமது உறவினர், நண்பர்களுக்கு உதவிக் கொண்டிருக்கின்றார்கள் என்று சொல்வதிற்கில்லை. இவர்களில ஒருசாரார் புலம்பெயர்ந்த நாடுகளில் சில வாய்ப்புகள், வசதிகளைக் கண்டவுடன் தமது கடந்த காலப் பின்னணியையும் தமக்கென இருக்கும் கடப்பாட்டினையும் மறந்தவர்களாக இருக்கின்றனர்.

இவர்களில் சிலர் தனியே தமது பிறந்த நாடு தொடர்பில் தமக்கிருக்கும் இணைப்பினையும் கடப்பாடுகளையும் மட்டும் மறந்தவர்களாகவன்றி புலம்பெயர்ந்து தாம் வாழும் நாடுகளின் சட்டத்தையும ஒழுங்கையும் மதிக்காதவர்களாகவும் இருக்கின்றனர். இதனால்தான் இவர்கள் கோஷ்டி மோதல்கள், கொலைகள், ஆள் கடத்தல்கள், கொள்ளைகள், மோசடிகள் என்பவற்றில் ஈடுபட்டு தமது இனத்திற்கே அவமதிப்பினைப் பெற்றுத் தருபவர்களாக இருக்கின்றனர். இவர்கள் தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த பிரதேசங்களில் வாழவே முடியாது அநாதரவாக ஓடிய போது பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள நாட்டில் அடைக்கலமும் ஆதரவும் கிடைத்தது. அவ்வாறு ஆதரித்து காத்த நாட்டிற்கு விசுவாசமற்றவர்களாகவும் அந்நாட்டு சட்டதிட்டங்களை மதிக்காதவர்களாகவும் இருப்பது வேதனைக்குரியது.

தாயகத்தில் ஒருயுத்தம் நிகழ்ந்ததினால் தான் தாம் இந்த வளர்ச்சியடைந்த வெளிநாடுகளுக்கு போகக்கூடியதாக இருந்தது. தாயகத்தில் நிலவிய அவலங்களை கருத்தில் கொண்டுதான் தமக்கு அந்நாட்டு அரசுகள் ஆதரவு அளித்து, உதவிசெய்து நாட்டுக்

குடியுரிமையும் அளித்தன என்பதனையும், இந்தவகையில் அல்லலுற்றிருக்கும் தமது பிறந்த நாட்டிற்கு ஏதோ ஒரு வகையில் உதவுவது தமது முக்கிய கடமைகளில் ஒன்று என்பதனையும் இவர்கள் எண்ணுவதில்லை.

இவர்களது அடாவடித்தனங்களும், மோசடித்தனங்களும் அவர்களது இனத்திற்கும், பிறந்த நாட்டிற்கும் கெட்ட பெயர் பெற்றுத் தருவதுடன் நின்று விடாது புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் எல்லா நம்மவர்களுக்கும் கூட பலவகையில் இடையூறு விளைவிப்பதாக உள்ளது. இவ்வாறான பொறுப்பற்ற ஒரு சிலர் செய்யும் செயற்பாடு களினால் புலம்பெயர்ந்தவர்கள் தொடர்பில் புதிய விதிமுறைகள், கட்டுப்பாடுகள் என்பவை அந்நாட்டு அரசுகளால் தோற்றுவிக்கப் படுவதாக இருக்கின்றன. ஒரு காலத்தில் புலம்பெயர்ந்த நம்மவர்களின் வாய்மொழிமூல கூற்றுக்களை ஏற்று கொண்டு செயற்பட்ட வங்கிகள் போன்ற பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்கள் தற்போது பல்வேறு பட்ட அத்தாட்சிகளை வேண்டி நிற்பதும் அவற்றை பல்வேறு வழிகளில் சரிபார்த்த பின்னரே ஏற்றுக் கொள்வதற்கும் புலம்பெயர்ந்த நம்மவர்கள் சிலர் செய்த மோசடிகளும் முக்கியதொரு காரணமாகும்.

இது தவிர புலம் பெயர்ந்தவர்கள் தொடர்பில் வெறுப்புக் கொண்ட வெளிநாட்டு, உள்நாட்டு ஊடகங்கள் மற்றும் நிறுவனங்கள் சில இந்த ஒரு சில புலம் பெயர்ந்தவர்கள் செய்யும் கொலைகள், கோஷ்டி மோதல்கள், மோசடிகள் என்பவற்றிற்கு தேவைக்கதிகமாக முக்கியத்துவம் கொடுத்து புலம் பெயர்ந்தவர்கள் எல்லோருமே மோசமானவர்கள் என்றறொரு தோற்றப்பாட்டை உருவாக்குவதற்கு முனைகின்றனர். பொறுப்பற்ற நம்மவர்கள் ஒரு சிலரின் நடவடிக் கைகள் இந்த நிலைமைக்குக் காரணமாகி விடுகின்றன.

பல்லாயிரம் மைல்களுக்கப்பால் போய் வாழும் புலம் பெயர்ந்தவர்களில் சிலர் அங்குபோய் ஊர்ச்சண்டை பிடிப்பது அபத்தமானது. ஊர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் கோஷ்டிகள், அந்தக் கோஷ்டிகளிற்கிடையே தொடர் மோதல்கள், பழிவாங்கல்கள் என்பவையெல்லாம் நகைப்பிற்குரியதும் வேதனைக்குரியதுமாகும். புலம் பெயர்ந்த நாடுகளில் புலம் பெயர்ந்த நம்மவர்கள் பெருமளவிற்கு ஆசியர்கள் என்றே அடையாளப் படுத்தப் படுகின்றனர். அவ்வாறானதொரு நிலையில் முன்னர் பக்கத்து பக்கத்து ஊர்களில் வாழ்ந்தவர்கள் பல்லாயிரம் மைல்களுக்கப்பால் உள்ள நாடுகளில் வாழும் போது ஒற்றுமையாக இருந்து புலம் பெயர்ந்து



வாழும் தம்மையும் போரினால் அநாதரவாக்கப்பட்டு நிற்கும் தமது தாய்நாட்டில் வாழும் உறவினர்களையும் முன்னேற்றவேண்டியவர்கள் இவ்வாறு மோதிக் கொள்வது வேதனைக்குரியதே.

புலம் பெயர்ந்து வாழும் பலலட்சம் நம்மவர்களில் இவ்வாறான குதர்க்க எண்ணங்கள் கொண்டவர்கள் மிகச் சிலராக இருந்தபோதும் அவர்கள் மேற்கொள்ளும் சமூகவிரோத செயல்கள் பெருமளவிற்கு ஊடகங்களில் வெளிவருவதனால் அதன் தாக்கம் புலம் பெயர்ந்து வாழும் எல்லோரையும் பாதிப்பதாக உள்ளது.

புலம் பெயர்ந்தவர்களில் பலர் அந்நாடுகளில் மிகச் சிறந்த பிரஜைகளாக வாழ்ந்து பல்வேறுபட்டதுறைகளில் பலசாதனை களைச் செய்து தாம் வாழும் நாடுகளிற்கும் தாம் பிறந்த நாட்டிற்கும், இனத்திற்கும் மதிப்பினைத் தேடித்தருபவர்களாக இருக்கின்றனர். இவ்வாறான அர்ப்பணிப்புகள், சாதனைகள் கூட பொறுப்பற்ற ஒரு சிலர் செய்யும் குற்றச் செயல்களினால் அவற்றின் உரிய முக்கியத்துவம் பெறப்பட முடியாமல் போகின்றது.

கனடாவில் உள்ள நம்மவர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டு பொலிஸ் வந்து தலையிடும் போது பொலிஸார் நம்மவர்களைப் பார்த்து "என்ன நீங்கள் இன்று சீட்டு நடத்தினீர்களா?" என்று கேட்பார்களாம் என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு. இதற்கு காரணம் அடிக்கடி சீட்டு கூறும் இடங்களில் சீட்டு தொடர்பில் நம்மவர்களுக்கிடையே வாக்கு வாதம் ஏற்பட்டு பின்னர் அது கைகலப்பில் முடிவதுண்டாம். இது தவிர கொழும்பு இரவு கேளிக்கை விடுதிகளில் *(Night Clubs)* இலங்கை அமைச்சர்களின் பிள்ளைகள் மோதிக் கொள்வது போன்று வெளிநாடுகளில் புலம் பெயர்ந்த நம்மவர்கள் அங்குள்ள இரவு கேளிக்கை விடுதிகளில் மோதிக் கொள்ளும் சம்பவங்களும் நிகழ்கின்றன. அண்மையில் இரவு கேளிக்கை விடுதியில் சந்தித்த பெண் ஒருவரை புலம் பெயர்ந்த நம்மவர் ஒருவர் கொலை செய்தது ஊடகங்கள் மற்றும் உறவினர்கள் மூலம் நம்மில் பலர் அறிந்ததொன்றே.

சமூக மற்றும் கலாசார விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு பின்னணியில் பிறந்து, பெற்றோர்களினதும் சமூகத்தினதும் நேரடிக் கண்காணிப்பிற்குள் வளர்ந்த நம்மவர்கள் சிலர் புலம் பெயர்ந்த நாடுகளில் காணப்படும் தனிமனித சுதந்திரம் என்பதனை அளவுக்கதிகமாகப் பயன்படுத்தி விடுகின்றார்கள் போல் தெரிகின்றது. இதனால் தானோ என்னவோ அவர்கள் மேற்கத்தைய கலாச்சாரத்தின் தனிமனித சுதந்திரம், அவர்களது உடையலங்கார

முறை என்பவற்றுடன் நின்று விடாமல் பச்சை குத்திக் கொள்வது உடம்பின் பல பாகங்களில் குத்தி தோடுகள், ஆபரணங்கள் அணிவது போன்ற விடயங்களில், ஆர்வமாக இருக்கின்றனர்.

மேலைத்தேயக் கலாச்சாரத்தில் இருந்து தனியே மேல் கூறிய விடயங்களை பின்பற்றுவதனை விட்டு அவர்களிடம் இருந்து பிரயோசனமான பல பண்புகளை நம்மவர்கள் கற்றுக் கொள்ளல் வேண்டும். வேலை நேரத்தில் வேலை செய்தல், ஓய்வு நேரத்தில் ஓய்வெடுத்தல் என்ற தன்மை, எதனையும் திட்டமிட்டு செய்தல், சரியான நேரத்திற்கு விடயங்களைச் செய்தல், தனித்து இயங்கும் பண்பு, மற்றவர்களை மதிக்கும் பண்பு, எதனையும் ஒரு பொருளாதார நன்மை பெறும் நோக்கில் அணுகும் பண்பு, தேசப்பற்று போன்ற பல்வேறுபட்ட எமது கலாச்சாரத்துடன் முரண்படாத தனிப்பட்ட மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு பயன்படக்கூடிய பண்புகளை கற்றுக் கொள்ள விளையவேண்டும்.

இது தவிரவும் நம்மவர்களுக்கிடையே வேறும் பல பிரி வினைகள் காணப்படுகின்றன. குடியுரிமை பெற்றவர்கள் - குடியுரிமை பெறாதவர்கள், அகதியாக வந்தவர்கள் - சுயகுடியேற்ற வாசிகளாக *(Skill Migration)* வந்தவர்கள், பல வருடங்களிற்கு முன்னர் வந்தவர்கள் - அண்மையில் வந்தவர்கள் என்று வெவ்வேறுபட்ட பிரிவினைகள் காணப்படுகின்றன. சிலர் தாங்கள் என்னவோ பரம்பரை பரம்பரையாக அந்நாடுகளில் தான் வசித்து வருகின்றவர்கள் போலவும் தமக்கு இலங்கை என்ற நாடு எங்கே உள்ளது என்று தெரியாது என்பது போலவும் காட்டிக் கொள்ளமுற்படுகின்றனர். இவர்கள் மேற்கத்தைய கலாச்சாரத்தின் அடையாளம் என்று சொல்லக் கூடிய சில விடயங்களிற்கு முன்னுரிமை கொடுத்துக் கொண்டு அந்நாட்டு மொழிவழக்கில் உள்ள சில கெட்டவார்த்தைகள் மற்றும் பிரதேச சொற்பிரயோகங்கள் என்பவற்றை தெரிந்து கொண்டு தேவைக்கு அதிகமாக அச் சொற்களைப் பயன்படுத்தி தம்மை அந்த நாட்டில் பிறந்து வளர்ந்தவர்கள் போல் காட்டிக் கொள்ள முற்படுகின்றனர். இவர்கள் புலம் பெயர்ந்து வாழும் நம்மவர்களுடன் சேர்ந்திருப்பதனை அதிகம் விரும்பாதவர்களாகவும் உள்நாட்ட வருடன் பெருமளவிற்கு உறவு வைத்து கொள்ளாதவர்களாகவும், எம்மவர்களுடன் உரையாடும் சந்தர்ப்பம் வரும் போது கூட தமிழில் அன்றி அந்நாட்டு மொழியில் பேசுபவர்களாகவும் உள்ளனர். வேறு நாடொன்றில் தொடர்ந்து வாழும்போது அந்நாட்டுக் கலாச்சாரங்கள் மற்றும் ஏனைய அம்சங்களின் செல்வாக்கு என்பது முழுமையாக



தவிர்க்கப்பட முடியாதது. ஆனால் இவர்கள் இயல்பாகவன்றி மிகவும் கஷ்ரப்பட்டு தம்மை எம்மவர்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதில் முனைப்பாக உள்ளனர்.

இவ்வாறு எமது கலாச்சாரத்தில் இருந்து விடுபடுவது தேவையற்ற பிரச்சனைகள், ஊர்ச்சண்டைகள், மோசடிகள், குற்ற செயல்களில் ஈடுபடுதல் என்பனவெல்லாம் புலம் பெயர்ந்தவர்களின் நற்பெயரையும், தனித்துவத்தினையும், முன்னேற்றத்தையும் தாயகத்துடன் உள்ள அவர்களின் உறவையும், தாயகத்தில் உள்ளவர்களுக்கு அவர்கள் செய்து வரும் பல்வேறு பொருளாதார உதவிகளையும் பாதிக்கும் விடயங்களாகும். எனவே, புலம் பெயர்ந்த நம்மவர்கள் தமது கடந்த காலத்தை மறக்காமலும் இருதசாப்த போரினால் அழிவுண்டு போயுள்ள தமது பிறந்த நாட்டையும் தாயகத்திலுள்ள தமது உடன் பிறப்புகளை மறக்காமலும் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் தம்மையும், தமது சமூகத்தையும் தமக்கு அடைக்கலம் தந்து ஆதரவளித்த நாட்டின் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு வாழ முற்படவேண்டும்.

# வெளிநாட்டுப் பணத்தினால் தாயகத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்

புலம் பெயர்ந்தவர்கள் இங்குள்ள தமது உறவினர், நண்பர்களிற்கு பணம் அனுப்பும் போது அதன் நன்மை அந்தப் பணத்தினை பெறும் உறவினர்கள், நண்பர்களிற்கு மாத்திரமல்லாது அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் ஓரளவு போய்ச் சேருகின்றது.

ஒருவருக்கு வெளிநாட்டில் இருந்து பணம் வரும்போது அவர் அதனை பல்வேறு தேவைகளுக்கு செலவு செய்கின்றார். இவ்வாறு செலவு செய்யும் போது அந்தப் பணத்தில் ஒரு பகுதி இலாபமாகவோ, வாடகையாகவோ அல்லது கூலியாகவோ சமூகத்தில் உள்ள மற்றவர்களிற்கு போய்ச் சேருகின்றது. வெளிநாட்டுப் பணத்தைக் கொண்டு ஒருவர் பொருள் வாங்கும் போது அந்தப் பொருளை விற்கும் வியாபாரி இலாபமடைகின்றார். அப்பணத்தினைக் கொண்டு வீட்டு வாடகை கட்டும் போது வீட்டு உரிமையாளர் வாடகை வருமானம் பெறுகின்றார். அதேபோல் பல்வேறு வேலைகள் தொடர்பில் ஆட்களை அமர்த்தும்போது அவ்வூழியர்கள் கூடிய வருமானம் பெறுகின்றனர். இவ்வாறு பல்வேறு பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் இந்த வெளிநாட்டுப் பணமானது செலவு செய்யப்படும்போது அக்குறிப்பிட்ட வெளிநாட்டுப் பணம் பெறுபவர் வாழும் சூழலில் உள்ள பலருக்குச் சென்றடைகின்றது.

இதேபோல் தான் புலம் பெயர்ந்தவர்கள் தாம் வாழும் நாடுகளில் தாயகப் பொருட்களை நுகரும் பொழுது அது தாயகத்தில் உள்ளூர் பொருட்களிற்கு அதிகரித்த கேள்வியினை ஏற்படுத்தி அப்பொருட்களை உற்பத்தி செய்வோர், அவ்வுற்பத்தி தொழிலில்



வேலையாற்றுவோர், வாங்கி விற்கும் வியாபாரிகள், ஏற்றுமதியாளர், சில்லறை விற்பனையாளர் எனப்பலர் நன்மையடைகின்றனர்.

புலம் பெயர்ந்தவர்கள் இங்கு வந்து செல்லும் போதும் கூட அவர்கள் இங்கு மேற்கொள்ளும் செலவுகள் தொடர்பில் உல்லாசப் பிரயாணிகள் நாட்டிற்கு வந்து செல்வதனால் அடையப்படும் நன்மைபோன்ற நன்மையொன்று அடையப்படுகின்றது. அவர்கள் முதலீடுகளை மேற்கொள்ளும் போது கூட அதன் நன்மை தனியே முதலீடுகளை மேற்கொள்ளும் அவர்கட்காகவன்றி பலருக்கும் சென்றடைவதாகவுள்ளது.

எவ்வாறாயினும் இந்த நன்மைகள் எல்லாம் சமூகத்திலுள்ள எல்லோரையும் சென்றடைவதில்லை. இந்த நன்மைகள் என்பது புலம் பெயர்ந்தவர்கள் தொடர்பிலான செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களிற்கு மட்டுமே கிடைக்கின்றன. அவ்வாறு தொடர்புடையவர்களிற்குக் கிடைக்கும் நன்மைகள்கூட அவர்கள் எல்லோரும் தமது வாழ்க்கையினை கொண்டு செல்ல அவசியமான தேவைகள் பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இருக்கும் என்பதுமல்ல.

இந்த வகையில் புலம் பெயர்ந்தவர்கள் அனுப்பும் பணம் என்பதும் அவர்கள் மூலம் கிடைக்கும் ஏனைய நன்மைகள் என்பதும் இங்குள்ள எல்லோருக்கும் கிடைப்பதுமில்லை. அவ்வாறு நன்மையடைபவர்கள் எல்லோரும் சமமான நன்மைகளைப் பெறுவதுமில்லை. இதனால் நமது சமூகத்தில் பொருளாதார ஏற்றத் தாழ்வு ஒன்று ஏற்பட்டுள்ளது.

சிலர் உழைப்பின் கஷ்ரம் தெரியாது வெளிநாட்டுப் பணத்தைக் கொண்டு உல்லாசமாகவும், ஊதாரித்தனமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் வேறுசிலர் எவ்வளவு கஷ்ரப்பட்டு உழைத்தாலும் அந்த உழைப்பின் மூலம் அவர்களால் ஈட்டப்படும் ஊதியம் அவர்களது தேவைகளை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. வேறுசிலரைப் பொறுத்தவரை அவர்களுக்கு உழைக்க வழியே இல்லை. அவர்கள் யுத்தத்தில் தமது உழைப்பு மார்க்கங்களையும், சொத்துக்களையும் குடும்பத்தில் உழைக்கும் நபர்களையும் இழந்து நிற்கின்றார்கள்.

இது ஒரு புறம் இருக்க மறுபுறத்தில் வெளிநாட்டுப் பணத்தினைப் பெற்று வரும் ஒருசாரார் ஒப்பீட்டுரீதியில் பெருந்தொகை பணத்துடன் பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளை மிக உயர்ந்த விலையில் நுகருவதற்கு தயாரான நிலையில்

உள்ளனர். இதனால் பல்வேறுபட்ட பொருட்கள், சேவைகளின் விலைகள் அதிகரித்து விட்டன. இந்நிலையில் வெளிநாட்டுப்பணம் பெறும் வசதியில்லாத உள்ளூரில் உழைத்து தமது வாழ்க்கையினைக் கொண்டு செல்ல வேண்டியுள்ள பலர் பாரிய பொருளாதார ஏற்றத்தாழ்வினை எதிர்நோக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

உதாரணமாக கொழும்பில் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் தொழிலாற்றும் சாதாரண உத்தியோகத்தர் ஒருவரை எடுத்துக் கொண்டால் அவரது சம்பளம் 4000-8000 ரூபாவாய உள்ளது. இந்த வருமானத்தைக் கொண்டு கொழும்பில் நல்ல சுற்றாடலில் சாதாரணமான வீட்டினை வாடகைக்குப் பெற்றுக் கொள்வதே கடினமான விடயமாகும். அதைத்தவிர வாழ்க்கைச் செலவும் மிக மோசமாக அதிகரித்துள்ளது.

நாட்டில் பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவரது சம்பளம் ஏறக்குறைய 10,000 ரூபாவாகும். இதனைக் கொண்டு நாட்டின் எந்தப் பகுதியிலும் வேறு எந்த வருமானமும் இன்றி வாழ்வதென்பது இன்றைய நிலையில் மிகவும் சவாலான தொன்றாகும்.

யுத்த நிறுத்தம் கைச்சாத்திடப்பட்டு யுத்தமற்ற நிலையொன்று தோன்றியவுடன் புலம் பெயர்ந்தவர்கள் பலர் கொழும்பிலும் வடக்கு கிழக்கிலும் காணிகளையும், வீடுகளையும் போட்டிபோட்டுக் கொண்டு வாங்கி வருகின்றனர். இதனால் காணிகள் மற்றும் வீடுகளின் விலைகள் பலமடங்கு அதிகரித்து விட்டது. இதனால் தம்மிடம் உள்ள மேலதிக காணிகளை பலர் விற்று பயனடைந்துள்ளனர் என்பது உண்மைதான், ஆனால் மறுபக்கத்தில் உள்நாட்டு உழைப்பில் மட்டும் தங்கியிருக்கும் சராசரி குடும்பத்தில் உள்ள ஒருவர் ஒரு காணியினையோ அல்லது வீட்டினையோ வாங்குவதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாதுள்ளது.

கொழும்பை எடுத்துக் கொண்டால் வெள்ளவத்தை போன்ற இடங்களில் காணியின் விலையானது கடந்து மூன்று வருடங்களில் ஏறக்குறைய ஆறு மடங்காக (600%) அதிகரித்துள்ளது. வடக்கு கிழக்கிலும் கூட பல இடங்களில் குறிப்பாக யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை போன்ற இடங்களில் காணிகளின் விலைகள் பல மடங்காக அதிகரித்துள்ளன. எவ்வாறாயினும் வடக்கு கிழக்கு பகுதிகளில் யுத்தம் நிலவிய காலப்பகுதிகளில் காணிகளின் விலைகள் பெருமளவிற்கு மலிந்து காணப்பட்டன என்ற வகையில் அந்த விலையுடன் தற்போதைய



விலைகளை ஒப்பிடுவது பொருத்தமற்றதொன்றாகும். எவ்வாறாயினும் வீடுகள் மற்றும் காணிகளின் விலைகள் வடக்கு கிழக்கு பகுதியிலும் கணிசமானளவு அதிகரித்தே காணப்படுகின்றன. இவ்வாறு அதிகரித்துள்ள நிலையில் உள்நாட்டு உழைப்பில் தங்கியிருக்கும் நாட்டில் உள்ள சாதாரண ஒருவரினால் வீடு ஒன்றையோ, காணி ஒன்றையோ கொள்வனவு செய்வது மிகவும் கடினமானதொன்றாகும்.

இந்த நிலையில் கடந்த இருபது வருட யுத்தத்தினால் தமது தொழில்களையும் சொத்துக்களையும் குடும்பத்தில் உழைக்கும் உறுப்பினர்களையும் இழந்து நிற்பவர்களது நிலை மிகவும் மோசமானதாகும்.

இவ்வாறு காணிகள் மற்றும் பொருட்களின் விலைகள் அதிகரித்து வாழ்க்கைச் செலவு அதிகரித்துக் காணப்படுவது ஒரு புறம் இருக்க இந்த புலம் பெயர்ந்வர்களின் பணத்தினை பெற்று ஊதாரித்தனமாக செலவு செய்யும் நம்மவர்கள் பலர் புதிய தேவைகள் பலவற்றையும் உருவாக்கியுள்ளனர். இவர்கள் தமது நாளாந்த வாழ்க்கை தொடர்பிலும், வைபவங்கள், பண்டிகைகள் தொடர்பிலும் தேவையற்ற புதிய பல செலவுகளைச் செய்கின்றார்கள்.

ஆனால் வேறுபலர் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யப்பட முடியாத நிலையில் உள்ளனர். இந்த நிலையில் சமுதாயத்தில் புதிய தொரு பொருளாதார ஏற்றத்தாழ்வு தோன்றுவதற்கு இந்தப் புலம் பெயர்ந்தவர்களும், புலம் பெர்ந்தவர்களின் பணத்தைக் கொண்டு கஷ்ரம் தெரியாமல் வாழ்பவர்களும் காரணமாகியுள்ளனர்.

புலம் பெயர்ந்தவர்கள் அனுப்பும் பணத்திலும் ஏற்பட்டுள்ள இன்னுமொரு பாதகவிளைவு யாதெனில் தாயகத்தில் உள்ள பலர் எந்தவித பொருளாதார அலுவல்களிலும் ஈடுபடாமல் சும்மா இருக்கும் நிலையினைத் தோற்றுவித்திருப்பதாகும். இங்கு பலர் வெளிநாட்டுப் பணம் வருகின்ற படியால் எந்த வித முயற்சியோ உழைப்போ எதுவுமின்றி சும்மா இருக்கின்றனர். இவர்கள் ஒரு காலத்தில் பல்வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு கணிசமான பொருளாதாரப் பங்களிப்பினைச் செய்தவர்கள் என்பதுடன் இந்த வெளிநாட்டு பணம் என்பது இல்லாவிட்டால் அவர்கள் ஏதோ ஒரு தொழில் முயற்சியில் தம்மை ஈடுபடுத்தி அதனூடே வருமானமொன்றை உழைப்பதற்கு வழி செய்வதுடன் பொருளாதாரத்திற்கும் ஏதோவொரு பங்களிப்பினை செய்வர்களாக இருந்திருப்பர். ஆனால்

இவ்வாறு உற்பத்தியில் ஈடுபட்டு பொருளாதாரப் பங்களிப்பு செய்யக் கூடியவர்கள் பலர் சும்மாயிருக்கின்றனர் என்பதுடன் அவர்களது உழைக்கும் ஆற்றல் திறமைகளும் பயன்படுத்தப்படாமல் விரயமாக்கப்படுகின்றது.

# புலம்பெயர்ந்தவர்களின் அறிவியல் பங்களிப்புகள்

நாட்டில் உள்ள உறவினர்களுக்குப் பணம் அனுப்பதல் நம்மூர் பொருட்களினை நுகருதல், நாட்டிற்கு வந்து போவதனால் கொண்டுவரும் அந்நிய செலாவணி உழைப்பு போன்ற பொருளாதார நன்மைகள், முதலீடுகளை மேற்கொள்ளல் என்பவையெல்லாம் புலம் பெயர்ந்தவர்கள் தாம் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் உழைக்கும் பணத்தின்னைக் கொண்டு நமக்கு செய்யும் பொருளாதார பங்களிப்பு களாகும்.

இவ்வாறான பணத்தினை அடிப்படையாகக் கொண்ட பங்களிப்புகளிற்கு மேலதிகமாக புலம்பெயர்ந்தவர்கள் தாயகப் பொருளாதாரம் தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய இன்னுமொரு பங்களிப்பு, புலம் பெயர்ந்தவர்கள் தாம் வாழும் வளர்ச்சியடைந்த நாடுகளில் பெற்ற அறிவு மற்றும் அனுபவங்களை தாயகத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு பயன்படுத்துவதாகும். இந்த அறிவியல் பங்களிப்பென்பது இரண்டு வழிகளில் மேற்கொள்ளப்பட முடியும். முதலாவது புலம் பெயர்ந்தவர்கள் தாம் நேரடியாக தாயகப் பொருளாதார நடவடிக்கைகளில் தமது அறிவியல் உள்ளீட்டினை மேற்கொள்வதனூடாக செய்யும் பங்களிப்பாகும். இரண்டாவது புலம் பெயர்ந்தவர்கள் தமது அறிவு மற்றும் அனுபவங்களை தாயகத்தில் உள்ளவர்களுடன் பகிர்ந்து கொள்வதன்மூலம் மேற்கொள்ளும் பங்களிப்பாகும்.

மைக்கல் போட்டர் என்ற முகாமைத்துவ அறிஞர் "ஒரு நாட்டின் செல்வமானது பரம்பரை வழியாக வந்ததாக இன்றி அந்நாட்டு மக்களால் உழைக்கப்பட்டதாகும்" என்கின்றார். அத்துடன் தேசமொன்றின் செல்வத்தை கட்டியெழுப்புவதற்கு உயர்தகுதியும், சிறப்புத்தேர்ச்சியும் பெற்ற மனிதவளம் அவசியமானதென்றும் கூறுகின்றனர்.

இந்த வகையில் இரண்டு தசாப்த யுத்தத்தினால் பொருளாதாரக் கட்டமைப்புகள் பெருமளவிற்கு சீர்குலைந்துள்ள பின்னணியினைக் கொண்ட தாயகப் பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவது தொடர்பில் புலம் பெயர்ந்தவர்களின் பணபலத்தினை மட்டும் பயன்படுத்துவதுடன் நின்றுவிடாது அவர்களின் அறிவியல் உள்ளீட்டினையும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளல் அவசியமாகும்.

போட்டியடிப்படையிலமைந்த உலகமயமாக்கப்பட்ட இன்றைய உலகில் அறிவு என்பதே போட்டியிடக்கூடிய வல்லமையைப் பெற்றுத்தரும் முக்கிய காரணியாக அமைகின்றது. மூலதனம், இயற்கை வளங்கள், ஊழியர்படை என்பன பொருளாதாரமொன்றின் அடிப்படை வளங்களாக இருந்த காலம் போய் தற்போது அறிவு என்பதே அடிப்படை பொருளாதார வளமாக மாறி வருகின்றது.

அறிவினை உருவாக்குதல், பகிர்ந்து கொள்ளல் மற்றும் பயன்படுத்துதல் என்பதே இன்று பொருளாதார வளர்ச்சியினை அதிகரிக்கும் முக்கிய ஊக்கியாக விளங்குகின்றது. அதிக இயற்கை வளங்களைக் கொண்ட பல ஆபிரிக்க நாடுகள் மற்றும் அதிக மனித வளங்களைக் கொண்ட ஆசிய நாடுகள் பலவற்றிலும் பார்க்க மேற்குலக நாடுகள் பல வளர்ச்சியடைந்து காணப்படுவதற்கு அவர்கள் அறிவினை பொருளாதார வளர்ச்சிக்கு உரிய முறையில் பயன்படுத்தி வருதலும் முக்கியமானதொரு காரணமாகும்.

இந்த வளர்ச்சியடைந்த நாடுகள் அறிவுடைய ஒரு சமுதாயத்தினை தமது நாடுகளில் திட்டமிட்டு உருவாக்குவது மாத்திரமன்றி உலகின் ஏனைய நாடுகளில் உள்ள பொருளாதாரப் பயன்பாடுடைய அறிவியலாளர்களை தம் நாட்டிற்குள்ளே கவரும் செயற்பாட்டையும் செய்து வருகின்றனர். திறமை அடிப்படையிலான சுயகுடியேற்றத்தினை அனுமதித்தல், தமது நாடுகளில் உயர்கல்வி கற்ற வெளிநாட்டவர்களை அங்கு தொடர்ந்தும் இருந்து வேலை செய்ய அனுமதித்தல் போன்ற செயற்பாடுகள் எல்லாம் இந்த அடிப்படையில் தான் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வகையில் உலகின் மூளைசாலிகளில் ஒரு தொகையினர் இந்த நாடுகளிற்கு போய்ச் சேருவதும் அந்நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு முக்கியமானதொரு காரணமாகும்.

எனவே பொருளாதாரம் ஒன்றினை வெற்றிகரமாக முகாமை செய்வதில் இந்த "அறிவு" என்பதன் பங்களிப்பு மிகவும் அவசியமானதாகிறது. இதனடிப்படையில்தான் இன்று பொருளாதார, வர்த்தக வெற்றி தொடர்பில் அறிவுசார் சமூகம் (*Knowledge Society*), அறிவுசார் தொழிலாளர்கள் (*Knowledge Worker*), கற்கும் நிறுவனங்கள் (*Learning Organization*) போன்ற சொற்பதங்கள் முன்னிலை வகிக்கின்றன. இந்த வகையில் புலம்பெயர்ந்தவர்களின் அறிவியல் பங்களிப்பு என்பது நமது பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவதில் முக்கிய பங்கு வகிப்பதாக இருக்கும்.



புலம்பெயர்ந்த நம்மவர்கள் வளர்ச்சியடைந்த, பொருளாதாரத்தில் முன்னணியில் நிற்கின்ற நாடுகளில் கணிசமானளவு காலம் வாழ்ந்து வருகின்றனர். இந்த வகையில் இவர்களில் பெரும்பாலானோர் அங்கு கற்ற கல்வி, மேற்கொண்டு வரும் தொழில் மற்றும் பொருளாதாரத்தில் வளர்ச்சிடைந்த சூழலில் வாழ்ந்து வருவதல் என்பவற்றின் காரணமாக பல்தரப்பட்ட விடயங்களைக் கற்று, அறிந்து அனுபவப்பட்டு, விளங்கிக் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

இவர்கள் தமது இந்த அறிவியல் பின்னணியினைப் பயன்படுத்தி நேரடியாக தாயக பொருளாதார கட்டியெழுப்பலில் பங்குபற்றலாம். அத்துடன் தமது அனுபவங்களைக் கொண்டு தொழில் முயற்சிகளை தாயகத்தில் ஆரம்பிக்கலாம் என்பதுடன் பொருளாதாரக் கொள்கை, திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவும் முடியும். இவ்வாறான நேரடியான பங்களிப்புகளை புலம்பெயர்ந்தவர்கள் கட்டாயம் இங்கு வந்து இருந்துதான் செய்ய வேண்டும் என்பதில்லை. இன்றைய வளர்ச்சியடைந்த தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி தாம் வாழும் நாடுகளில் இருந்தபடியேகூட தமது பங்களிப்புகளைச் செய்ய முடியும். நேரடியாக முதலீடுகளை ஈடுபடுத்தி தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க முடியாதவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமாக உள்ள முதலீட்டாளர்களுடன் இணைந்து தமது விடய அறிவினைப் பயன்படுத்தி தொழில் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

புலம் பெயர்ந்தவர்கள் தமது அறிவு மற்றும் அனுபவங்களை நாட்டில் உள்ளவர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலமும் நமது பொருளாதார வளர்ச்சிக்கு பங்காற்றமுடியும். இந்த அறிவுப் பகிர்வானது புலம் பெயர்ந்தவர்களிற்கும் இங்குள்ளவர்களுக்கும் இடையிலான தொடர்புகளை அதிகரிப்பதனூடே உரிய முறையில் அடையப்படக் கூடியதாக இருக்கும். புலம் பெயர்ந்தவர்கள் நாட்டிற்கு வந்து போகும் போது அச்சந்தர்ப்பங்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளல், திட்டமிட்ட முறையில் அவர்களை அழைத்து இங்கு கருத்தரங்குகள், பயிற்சித் திட்டங்கள், அதிதி விரிவுரைகள், செய்முறைப் பயிற்சிகள் போன்ற அறிவுப் பகிர்வு செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும். அத்துடன் இங்கிருந்து

ஒரு தொகையினரை புலம் பெயர்ந்தவர்கள் வாழும் நாடுகளுக்கு அனுப்பி அங்கு வாழும் புலம் பெயர்ந்தவர்களைக் கொண்டும், வெளிநாட்டவர்களைக் கொண்டும் பயிற்சி அபிவிருத்தி செயற்பாடு களில் பங்குபற்றச் செய்தல் வேண்டும். இவற்றினைத் தவிர தகவல் தொழில்நுட்பத்தின் உதவியுடனான தொடர்பாடல் முறைகள் மூலம் தாயகத்தில் உள்ளவர்களுடன் அறிவுப் பகிர்வினை மேற்கொள்ள முடியும்.

இந்த அறிவுப் பகிர்வானது ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு புலம் பெயர்ந்தவர்கள் மற்றும் தாயகத்தில் உள்ளவர்களை இணைத்து குழுக்கள் மற்றும் அமைப்புகள் உருவாக்கப்படலாம். விவசாய முன்னேற்றக் குழுக்கள், கைத்தொழில் முன்னேற்றக் குழுக்கள் என்ற வகையில் பல்வேறு விடயம் சார் குழுக்கள் அமைக்கப்பட முடியும் என்பதுடன் பாடசாலை பழைய மாணவர் சங்கங்கள், பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் என்பனவும் இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட முடியும்.

புலம் பெயர்ந்தவர்கள் வாழும் நாடுகளில் பயன்படுத்தப்படும் நுட்பங்கள், கோட்பாடுகள் மற்றும் வாழ்க்கை முறைகள் சில வேளைகளில் எமது உள்ளூர் நிலமைகளுக்கு பொருந் தாதவை யாகவும் அப்படியே பிரயோகிக்க முடியாதவையாகவும் இருக்கலாம். இந்த சந்தர்ப்பங்களில் அவை எமது நிலமைகளிற்கேற்ப மறுவடிவம் செய்யப்படவோ, சரிப்படுத்தல்கள் செய்யவோ வேண்டிய தேவை ஏற்படலாம். இந்த வகையில் இந்த வெளிநாட்டு அறிவியல்சார் விடயங்களின் பிரயோகிக்கக்கூடிய தன்மை பரீட்சிக்கப்பட்டு அமுல்படுத்துதல் தொடர்பில் உரிய ஒழுங்கமைப்புக்கள் மேற் கொள்ளப்பட வேண்டும். இது புலம்பெயர்ந்தவர்களும் நம்மவர்களும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய செயற்பாடாகும்.

இந்த அறிவுசார் பங்களிப்பு மற்றும் அறிவு பகிர்வு என்பது தனியே துறைசார் நிபுணத்துவம் கொண்ட புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் உள்ளூர் நிபுணர்களிடையே மட்டும் இடம்பெறுவதொன்றாக வன்றி சமூகத்தின் எல்லா மட்டங்களிற்கும் சென்றடைவதாக இருத்தல் வேண்டும். குறிப்பாக குறிப்பிட்ட தொழில்களில் ஈடுபடுபவர்களிற்கு சென்றடைவதாக இருத்தல் வேண்டும்.

எனவே புலம்பெயர்ந்தவர்களிடம் இருந்து எவ்வாறான பணரீதியான பங்களிப்புகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று பார்ப்பதுடன் நின்றுவிடாது எவ்வாறான அறிவியல் பங்களிப்புகளை



அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். புலம்பெயர்ந்தவர்களும் அவர்களால் வழங்கக் கூடிய அறிவியல் பங்களிப்புகளை தாமாக முன்வந்து வழங்கல் வேண்டும்.

# சுனாமியினால் அல்லலுற்றவர்களை ஆதரிக்கும் புலம்பெயர்ந்தவர்கள்

சுனாமி பேரனர்த்தத்திற்குள்ளாகி பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் இன்னல் துடைப்பது தொடர்பில் புலம் பெயர்ந்தவர்களின் பங்களிப்பு அளப்பரியது. புலம் பெயர்ந்தவர்களின் இந்த பங்களிப்பு என்பது இரண்டு வகைப்பட்டது. ஒன்று அவர்கள் நேரடியாக மேற்கொள்ளும் உதவிகள். மற்றையது அவர்களினது செல்வாக்கின் காரணமாக வருகின்ற உதவிகள்.

சுனாமி அனர்த்தம் பற்றிக் கேள்விப்பட்டவுடனேயே புலம் பெயர்ந்தவர்களின் துயர் துடைப்புப்பணி தொடங்கிவிட்டது. புலம் பெயர்ந்தவர்கள் வாழும் ஒவ்வொரு நாடுகளிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு பணம் சேகரித்தல், உடுபுடவைகள் மருந்துகள் உட்பட நிவாரணப் பணிக்குத் தேவையான பொருட்கள் சேகரித்தல் என்று பாரியதொரு பணி தொடங்கப்பட்டு மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

சுனாமி அனர்த்த உதவி சேகரிப்பு நிலையங்கள் புலம் பெயர்ந்தவர்கள் வாழும் நாடுகளில் பல இடங்களில் தொடங் கப்பட்டன. புலம் பெயர்ந்த நம்மவர்கள் இவ்விடங்களுக்கு வந்து பாரிய பொருளுதவி மற்றும் பண உதவியினை வழங்கினார்கள். சில இடங்களில் புலம் பெயர்ந்தவர்கள் வரிசையில் நின்று தமது உதவிகளை வழங்குமளவிற்கு உதவி செய்வோர் தொகை காணப் பட்டது.

புலம் பெயர்ந்தவர்கள் வாழும் நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட இந்த சுனாமி அனர்த்த உதவி சேகரிப்பு முயற்சியில் பலதரப்பட்ட புலம் பெயர்ந்தவர்களும் ஈடுபட்டிருந்தனர். நம்மவர்களால் நடாத்தப்படும் புலம்பெயர் நாடுகளில் உள்ள நிறுவனங்கள் எல்லாமே அவை பொது அமைப்புக்களாக இருந்தாலும் சரி தனிப்பட்டவர் களால் கொண்டு நடாத்தப்படும் நிறுவனங்களாக இருந்தாலும் சரி



ஏதோ ஒரு வகையில் தாயகத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய தவறவில்லை. புலம் பெயர்ந்தவர்களின் பிள்ளைகள் படிக்கின்ற கல்வி நிறுவனங்கள் பலவற்றில் அவர்களுடன் சேர்ந்து அந்நாட்டு மாணவர்களும் இந்த சுனாமி அனர்த்த உதவி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர். அத்துடன் பல வெளிநாட்டவர்களும் முன்வந்து இந்த புலம் பெயர்ந்தவர்களின் நிதி மற்றும் பொருள் சேகரிப்பிற்கு கணிசமான அளவு உதவிகளை வழங்கியிருந்தனர்.

இருபது வருட யுத்தத்தில் தமது வாழ்வாதாரங்களை இழந்து நிற்கின்ற மக்களிற்கு யுத்த நிறுத்தமும் அதனைத் தொடர்ந்து வந்த யுத்தமும் இல்லை, சமாதானமும் இல்லை என்ற காலப்பகுதி ஓரளவு ஆறுதலைத் தந்திருந்தது என்பது உண்மைதான். எனினும் அவர்களது அடிப்படைப் பிரச்சனைகள் தீர்ந்தபாடில்லாத நிலையொன்றே தொடர்ந்து வருகின்றது. இந்த நிலையில் மீண்டும் யுத்தம் வெடித்து விடுமோ என்ற பீதியில் இருந்த மக்களிற்கு பேரிடியாக வந்தது சுனாமி அனர்த்தம். கிட்டத்தட்ட பத்து வருடகால யுத்தத்தில் இறந்த மக்களிற்குச் சமமான தொகை மக்கள் வெறும் பத்து நிமிடத்தில் சுனாமி அனர்த்தத்தினால் கொல்லப்பட்டு விட்டனர்.

சுனாமி அனர்த்தம் வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேல் மாகாணத்தின் சில பகுதிகள் என்று இன, மத, பிரதேச வேறுபாடின்றி இடம்பெற்றிருந்தது. இதில் வடக்கு கிழக்கு பகுதிகளிலேயே அழிவு அதிகமாகும். எனினும் உதவிகள் மற்றும் ஊடகங்களின் கவனம் பெருமளவிற்கு தெற்கில் ஏற்பட்ட அழிவுகளை நோக்கியவையாகவே காணப்படும் போக்கு ஒன்று காணப்பட்டது.

இந்த நிலையில் வடக்கு மற்றும் கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்கள் உரிய உதவிகள் மற்றும் ஊடகக் கவனிப்பு பெறுவதற்கும் புலம்பெயர்ந்தவர்களின் பங்கு முக்கியமானதாகும். தெற்கில் இருந்து வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு சரியாக உதவிகள் போய் சேருவதற்கு முன்னர் பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இருந்து புலம் பெயர்ந்தவர் களின் பண மற்றும் பொருளுதவிகள் வந்து சேரத் தொடங்கியிருந்தன.

சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களிற்கு புலம் பெயர்ந்தவர் கள் தனியே பண உதவி மற்றும் பொருளுதவி செய்வதுடன் நின்றுவிடவில்லை. புலம் பெயர்ந்தவர்கள் பலர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிற்கு நேரடியாக வந்து பாதிக்கப்பட்ட மக்களிற்கு பல்வேறு வகையான உதவிகளை செய்து வருகின்றனர்.

புலம் பெயர்ந்தவர்கள் வாழும் நாடுகளில் புலம்பெயர்ந்த நம்மவர்களினால் நடாத்தப்படும் தொலைக்காட்சி நிலையங்கள்,

வானொலி நிலையங்கள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் என்பன தாயகத்தில் சுனாமி ஏற்படுத்திய அழிவுகளையும் அவலங்களையும் உலகெங்கும் விபரமாக வெளியிடத் தொடங்கின. இதனால் இலங்கையில் உள்ளவர்களிலும் பார்க்க விபரமாகவும் விளக்க மாகவும் இந்த சுனாமி அழிவுகளைப் பற்றி புலம் பெயர்ந்தவர்கள் அறிந்து தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

சுனாமி அனர்த்தத்தினைத் தொடர்ந்து உலகெங்கும் உள்ள நூற்றுக் கணக்கான செய்தித் தாபனங்கள் மற்றும் ஏனைய ஊடகங்களின் நிருபர்களும் தொழில்நுட்பவியலாளர்களும் படையெடுத்து இலங்கைக்கு வந்திருந்தனர். இவர்கள் இலங்கையில் ஏற்பட்ட அழிவுகளுக்கு முக்கியமாக வடக்கு கிழக்கில் ஏற்பட்ட அழிவுகளுக்கு முக்கியத்தும் கொடுக்கின்ற செய்திகளை வெளியிடு வதற்கும் புலம் பெயர்ந்தவர்கள் ஒரு காரணமாகும். ஏனெனில் இன்று உலகின் பல பாகங்களில் புலம்பெயர்ந்தவர்கள் வாழ்கின்றனர் என்ற வகையில் அவர்கள் இந்த செய்தி ஊடகங்கள் மற்றும் செய்தி ஸ்தாபனங்களைப் பொறுத்தவரை குறிப்பிடத்தக்கதொரு நேயர் குழாமாக அல்லது சந்தைப் பிரிவாக காணப்படுகின்றனர்.

அத்துடன் சர்வதேச ஊடகங்கள் பலவற்றினை புலம் பெயர்ந்தவர்கள் அணுகி வடக்கு கிழக்குப் பிரதேசங்களிற்கு உரிய உதவிகள் கிடைக்கவில்லை மற்றும் ஊடக கவனம் செலுத்தப்பட வில்லை என்று சுட்டிக்காட்டினர். இதனடிப்படையில் இந்த சர்வதேச ஊடகங்கள் சில இலங்கையின் உயர்ஸ்தானிகர் போன்ற அரச பிரதிநிதிகளைத் தொடர்பு கொண்டு பேட்டி கண்டு இந்தக்குற்றச் சாட்டுகள் தொடர்பில் கேள்வியெழுப்பியதனையும் காணக்கூடியதாக இருந்தது.

அது மாத்திரமன்றி இன்று பல வெளிநாட்டு அரசுகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் ஏனைய வெளிநாட்டு ஸ்தாபனங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் சுனாமியி னால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களிற்கு பேரளவானதொரு உதவியினைச் செய்ய முன்வந்திருப்பதற்கு நமது புலம் பெயர்ந்தவர் களும் ஒரு காரணமாக விளங்குகின்றனர். அவர்கள் இன்று உலகின் முக்கிய நகரங்களில் கணிசமானளவில் வாழ்வதும், அவர்களின் செல்வாக்கு மற்றும் பிரச்சாரமும் இவ்வளவு உதவிகள் கிடைப்பதற்கு ஒரு காரணம் என்பதனை மறுப்பதற்கில்லை.

எவ்வாறாயினும் இவ்வாறு கிடைக்கும் பேரளவான உதவிகள் சுனாமியினால் அதிகம் பாதிக்கப்பட்ட மக்களிற்கு உரிய அளவில் சென்றடைகின்றதா? பாரபட்சமின்றி அழிவடைந்த பகுதிகள்



எல்லாம் மீள் கட்டியெழுப்பப்படுகின்றதா? என்பது தொடர்பில் சந்தேகங்களும் அதிருப்தியும் பல்வேறு மட்டங்களில் எழுப்பப்பட்டு வருகின்றது. இவ்வாறானதொரு நிலையில் யாரும் உதவி செய்யா விடினும் கூட புலம்பெயர்ந்த தமது உடன்பிறப்புகளின் ஆதரவுடன் தம்மால் மீண்டும் எழுந்து சொந்தக்காலில் நிற்கமுடியும் என்ற நம்பிக்கை சுனாமியினால் பாதிக்கப்பட்ட நம் மக்கள் மனதில் தோன்றியுள்ளது. அவ்வாறானதொரு நம்பிக்கையினை ஊட்டக்கூடிய வகையில் புலம்பெயர்ந்தவர்களது உதவிகள் அமைந்துள்ளன.

சுனாமி அழிவுகளில் இருந்து மக்களையும் பொருளாதாரத் தையும் மீட்டெடுப்பது என்பது ஒரு நீண்ட காலச் செயற்பாடு என்ற வகையில் அது தொடர்பில் புலம்பெயர்ந்தவர்களின் பங்களிப்புகள் தற்போது உள்ளது போல் எதிர்காலத்திலும் தொடரும் என்று நம்பலாம்.

# தாயகப் பொருட்களை வெளிநாட்டவர்களிற்கு அறிமுகப்படுத்துதல்

புலம்பெயர்ந்தவர்கள் நமது பொருளாதார வளர்ச்சி தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய இன்னுமொரு முக்கிய பங்களிப்பு நமது பாரம்பரிய உற்பத்திப் பொருட்களை தாம் வாழும் நாடுகளில் உள்ள மக்களிற்கு அறிமுகப்படுத்தி வெளிநாட்டுச் சந்தையொன்றை நமது பொருட்களிற்கு உருவாக்குவதாகும்.

நமது பாரம்பரிய பொருட்களை விற்கும் கடைகள் இன்று புலம்பெயர்ந்தவர்கள் வாழும் நாடுகளில் பெருமளவிற்குளவிற்கு காணப்படுகின்றன. இது தொடர்பில் கோடிக்கணக்கான பெறுமதி யான நமது பொருட்கள் பல தாயகத்தில் இருந்து கப்பலிலும் விமானத்திலுமாக ஏற்றுமதி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த பொருட்களானவை வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த நம்மவர்களின் நுகர்விற்காகவே அவ்வாறு அனுப்பப்படுகின்றன.

இந்த வகையில் நம்மூர் பொருட்களை தனியே புலம் பெயர்ந்த நம்மவர்களிற்கு மட்டும் சந்தைப்படுத்துவடன் நின்றுவிடாது அந்த நாட்டில் உள்ள ஏனைய மக்களிற்கும் குறிப்பாக அந்தநாட்டு சுதேசிகளுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் தாயகத்தில் அந்தப் பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பிற்கு வழிவகுத்து பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவலாம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எமது பொருட்களை வெளிநாட்டவர் நுகர்வார்களா? அவற்றினை வெற்றிகரமாக அவர்களிற்கு சந்தைப் படுத்தல் சாத்தியமா? முழுக்க முழுக்க வேறுபட்ட கலாச்சாரத்தையும், வாழ்க்கை முறையினையும், உணவுப்பழக்க வழக்கத்தையும் கொண்ட மக்கள் முற்றிலும் வித்தியாசமான எமது பொருட்களையும் உணவுகளையும் எவ்வாறு ஏற்றுக் கொள்வர்? போன்ற பலவிதமான



கேள்விகள் எம்மிடையே எழக்கூடும். நிட்சயமாக எடுத்தவுடன் வெளிநாட்டவர்களிற்கிடையில் பாரிய சந்தையொன்றை நமது பொருட்களிற்கு ஏற்படுத்த முடியாது என்பது உண்மைதான். எவ்வாறாயினும் முறையான சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களுடன் கூடிய படிப்படியான அறிமுகத்தினூடே வெளிநாட்டவர்களைக் கவர முடியும்.

இன்று உலகமயப்படுத்தப்பட்ட சந்தைப் பொருளாதார சூழலிலே மக்கள் வெவ்வேறு விதமான விடயங்களையும் பொருட்களையும் அறிந்து நுகர்ந்து அனுபவித்து பார்ப்பதற்கு ஆர்வமாக உள்ளனர். தற்கால நுகர்வோர் பொருளொன்றினை நுகரும்போது தனியே அந்தப் பொருளின் நேரடிப்பயனை மட்டும் வேண்டி நிற்பவர்களாகவன்றி அந்தப் பொருட்களுடன் இணைந்த கலாச்சாரம், வாழ்க்கை முறை என்பவற்றையும் அனுபவித்துப் பார்க்க விரும்புபவர்களாக இருக்கின்றனர். உதாரணமாக இன்று நாம் மேலை நாட்டு உணவகம் ஒன்றிற்கு செல்லும் போது தனியே அந்த உணவை ருசி பார்ப்பதுடன் நின்றுவிடாது அந்த மேலை நாட்டு கலாச்சாரம், பழக்கவழக்கம், உணவு உண்ணும் முறை போன்ற அதனுடன் தொடர்புபட்ட விடயங்கள் பலவற்றினை கற்று அனுபவித்து உணர்ந்து பார்ப்பதற்கு விழைகின்றோம். இதே போலத்தான் மேலை நாட்டு சுற்றுலா பயணிகள் தங்கும் விடுதிகள் சில உல்லாசப் பிரயாணிகளை கவரும் நோக்கில் தமது உணவுச் சாலைகளில் கிடுகுகளால் மேய்ந்து, மண்ணினால் அடுப்புக்கள் செய்து, மண்பானை மற்றும் சட்டிகளில் உணவுகளை வைத்து, கிராமியப்பாணியில் உடை உடுத்திய விடுதி ஊழியர்களினால் தேங்காய் சிரட்டையினால் செய்யப்பட்ட அகப்பைகளினால் உணவினை பரிமாறுகின்றனர். வெளிநாட்டு உல்லாச பிரயாணிகள் நமது பாரம்பரிய கிராம விருந்துண்ணல் முறையினை அனுபவித்துப் பார்க்க விரும்புகின்றனர் என்ற அடிப்படையில் இது மேற்கொள்ளப் படுகின்றது. இந்த வகையில் நம்மூர்ப் பொருட்கள் மற்றும் உணவுகள் உரிய முறையில் மேலைநாட்டவர்களிற்கு அறிமுகப்படுத்தும்போது அது நோக்கி ஓரளவிற்கு வெளிநாட்டவர்கள் கவரப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை.

இது தவிர இன்று வளர்ச்சியடைந்த மேலைநாடுகளிலே இரசாயனப்பொருட்கள் கலந்த செயற்கை முறையில் தயாரிக்கப் பட்ட பொருட்களிலிருந்து விடுபட்டு இயற்கையான பொருட்களை நுகரும் தன்மையொன்று படிப்படியாகத் தோன்றி வருகின்றது. தமது உடல் உள நலனில் அக்கறை கொண்ட இம்மக்கள் இந்த இயற்கையான பொருட்களிற்கு அதிக விலை கொடுத்து வாங்குவதற்கு

தயாராக இருக்கின்றனர். இவர்கள் பெருந்தொகையில் பாரிய தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களிலும் பார்க்க இயற்கையான முறையில் சிறியளவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் தன்மையொன்றும் அறிமுகமாகி வருகின்றது. இந்த வகையில் இரசாயன உள்ளீடுகள், கிருமி நாசினிகள், விரைவாக வளர்ச்சியடையச் செய்யும் ஊக்கிகள், அதிக விளைவினை பெற்றுத்தர பயன்படுத்தும் ஊக்கிகள் போன்ற பல செயற்கை முறையிலமைந்த விவசாய பண்ணை வெளியீடுகளில் இருந்து சற்று விடுபட்டு இயற்கையாக விளைவிக்கப்பட்ட பொருட்களை நோக்கி தமது கவனத்தை மேலை நாட்டவர்கள் திருப்புவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் வளர்ச்சியடைந்த மேலை நாட்டவர்களில் சிலர் கீழைத்தேயப் பொருட்கள், வாழ்க்கை முறைகள் என்பன பெருமளவிற்கு இயற்கையுடன் கூடியவை என்றவகையில் அவற்றின் மீது நாட்டம் கொள்ளும் தன்மையொன்று தோன்றி வருகின்றது. இவ்வாறானதொரு நிலை உண்மையில் எமது பாரம்பரிய பொருட்களை வெளிநாட்டவர்களிற்கு சந்தைப் படுத்துவதற்கானதொரு வாய்ப்பாகும். நம்மில்பலர் இன்று எமது கலாச்சாரப் பாரம்பரிய வாழ்க்கை முறையில் இருந்து விடுபட்டு மேலைத்தேய கலாச்சார விழுமியங்களிற்கு தம்மை ஆட்படுத்திக் கொள்வதில் முனைப்பாக இருக்கின்றார்கள். ஆனால் மேலை நாட்டவர்கள் சிலர் எமது கலாச்சாரப் பாரம்பரிய முறைகளில் உள்ளடங்கியுள்ள பல உன்னதமான தன்மைகளை அறிந்து, தெரிந்து விளங்கி அவற்றில் தமது கவனத்தை திருப்புபவர்களாக இருக் கின்றனர். இந்தவகையில் இந்த வாய்ப்பினை உரிய முறையில் விளங்கி பயன்படுத்திக் கொள்வதினூடே சிறிது சிறிதாக எமது பொருட்களை மேலை நாட்டவர்களிற்கு அறிமுகப்படுத்த முடியும். குறிப்பாக எமது உணவு வகைகள் பன்னப்பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள், பழவகைகள், மதுபானங்கள் போன்ற பல்வேறு பொருட்கள் மேலைநாட்டவர்களிற்கு அறிமுகப்படுத்தப்பட முடியும்.

இன்று சீன மற்றும் இந்திய உணவகங்கள் உலகின் முக்கிய நகரங்கள் பலவற்றில் காணப்படுகின்றன. இவற்றில் பெரும் பாலானவை அந்த நகரங்களில் வாழும் சீனர்கள் மற்றும் இந்தியர்களை இலக்கு வைத்தவையாகவன்றி மேலைநாட்டு மக்களையே தமது பிரதான வாடிக்கையாளர்களாகக் கொண்டு இயங்கி வருகின்றன. இவ்வாறானதொரு பாதையினைப் பின்பற்றி நம்மூர் உணவு வகைகள் மற்றும் பாரம்பரிய பொருட்களை



மேலைநாட்டவர்களிற்கு சந்தைப்படுத்த நம்மவர்களும் முயற்சிக்க வேண்டும்.

இது தொடர்பில் புலம்பெயர்ந்த நம்மவர்களிற்கு இருக்கும் முக்கிய அனுகூலம் யாதெனில் அவர்கள் இன்று உலகின் முக்கிய நகரங்கள் பலவற்றில் நிரந்தரமாக வாழ்ந்து வருவதாகும். இவ்வாறு வாழ்ந்து எமது பாரம்பரியப் பொருட்களை நுகர்பவர்களாகவும அவற்றினை புலம் பெயர்ந்த நம்மவர்களிற்கு சந்தைப்படுத்து பவர்களாகவும் இருக்கின்றனர் என்ற வகையில் சிறியதொரு அதிகரித்த முதலீட்டுடன் தமது சந்தைப்படுத்தல் முயற்சிகளை தனியே புலம்பெயர்ந்த நம்மவர்களை நோக்கியதாக மட்டுமின்றி புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள உள்நாட்டு மக்களையும் கவரும் விதத்தில் விரிவுபடுத்திக் கொள்ள முடியும்.

இது தொடர்பில் பொருட்களிலும் அவை பொதிசெய்யப்படும் விதத்திலும் அவை விநியோகிக்கப்படும் முறைகளிலும் சந்தைப் படுத்தல் உத்திகளிலும் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டியேற்படலாம். எவ்வாறாயினும் அந்த நாடுகளில் வாழ்ந்து அந்த நாட்டு மக்களின் விருப்பு வெறுப்புக்கள், உணர்வுகள், வாழ்க்கை முறை என்பவற்றை பெருமளவிற்கு புரிந்து வைத்திருக்கும் நமது புலம் பெயர்ந்தவர்கள் இது தொடர்பில் உரிய அக்கறையும் முயற்சியும் எடுப்பார்களேயானால் நிட்சயமாக அதில் வெற்றி பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறு எமது பாரம்பரிய பொருட்கள் வெளிநாட்டவர் களிற்கு படிப்படியாக அறிமுகப்படுத்தி புலம் பெயர்ந்தவர்கள் வாழும் நாடுகளில் அவற்றிற்கு அதிகரித்த சந்தை வாய்ப்பு ஒன்று தோற்றுவிக்கப்படும்போது அது தாயகத்தில் அப்பொருட்களின் அதிகரித்த உற்பத்தி மற்றும் ஏற்றுமதி என்பவற்றிற்கு வழிவகுத்து தாயக மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதாக இருக்கும்.

தனியே புலம்பெயர்ந்த நம்மவர்களை மட்டும் இலக்காகக் கொண்டு நம்மூர் பொருட்களை சந்தைப்படுத்தும்போது நீண்டதொரு காலப்பகுதிக்கு அதன் பொருளாதார நன்மைகள் எமக்கு கிடைக்குமென்பதில்லை. ஏனெனில் புலம் பெயர்ந்தவர்களில் அடுத்த தலைமுறையினர் தற்போது உள்ளது போன்றதொரு கேள்வியினையும் நுகர்வினையும் நம்மூர் பொருட்கள் தொடர்பில் கொண்டிப்பர் என்று சொல்லுவதற்கில்லை. இந்த வகையில் வெளிநாடுகளில் நீண்டு நிலைத்திருக்கும் கேள்வியினையும் நுகர்வினையும் நம்மூர் பொருட்களிற்கு ஏற்படுத்துவது தொடர்பில் அவற்றினை வெளி நாட்டவகள் மத்தியிலும் சந்தைப்படுத்துவது அவசியமாகும்.

வெளிநாட்டவர்கள் மத்தியில் நம்மூர் பாரம்பரியப் பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அவற்றில் சில வெளிநாட்டவர்களுக்கிடையே பிரபலம் பெறத்தொடங்கும்போது அது நம்மூர் பொருட்களிற்கு வழங்கப்பட்ட ஓர் அங்கீகாரமாக கருதப்படுவதற்கு இடமுண்டு. இதனால் அவற்றின் நன்மைகளும் முக்கியத்துவமும் அவற்றின் பயன்களை தற்போது நன்கறிந்திராத அல்லது அவற்றில் அக்கறை கொண்டிராத புலம்பெயர்ந்த நம்மவர்கள் மத்தியிலும் குறிப்பாக இளைய தலைமுறையினர் மத்தியிலும் இப்பொருட்கள் பிரபல்யம் பெறுவதற்கும் சாத்தியம் உண்டு.

இந்த வகையில் நம்மூர் பொருட்களை வெளிநாடுகளில் தனியே புலம்பெயர்ந்த நம்மவர்களிற்கு மாத்திரம் சந்தைப் படுத்தப் படுவதுடன் நின்றுவிடாது வெளிநாட்டவர்களிற்கும் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப் படும்போது அவற்றிற்கான கேள்வி மற்றும் நுகர்வு என்பது குறிப்பிட்ட சில காலத்திற்கு மட்டும் உள்ளதாகவன்றி நீண்ட காலத்திற்கு பொருளாதார நன்மைகளை தாயகப் பொருளாதாரத் திற்குப் பெற்றுத் தருவதாக இருக்கும்.

# தாயகப் பொருட்களின் கொள்வனவிற்கு முன்னுரிமை கொடுத்தல்

புலம்பெயர்ந்தவர்கள் நமது பொருளாதாரம் தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய இன்னுமொரு பங்களிப்பு தமது நுகர்விற்கு முடிந்தவரை தாயகப் பொருட்களினைப் பயன்படுத்துவதாகும். தற்போது நமது பாரம்பரியப் பொருட்களில் பல புலம்பெயர்ந்தவர் களின் நுகர்விற்காக தாயகத்திலிருந்து அனுப்பப்படுகின்றன. எனினும் புலம்பெயர்ந்தவர்கள் வாழும் நாடுகளிற்கும் எமது நாட்டிற்கும் இடையிலான அதிக புவியியல் தூரம் காரணமாக பல பொருட்கள் வேறு நாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்படுகின்றன.

புலம் பெயர்ந்த நம்மவர்கள் பயன்படுத்தும் வாழைப்பழம், மாம்பழம், தேங்காய், கத்தரிக்காய், முருங்கைக்காய், புளி, அரிசி போன்ற பலவகைப் பொருட்கள் பெருமளவிற்கு தாயத்திலிருந்தன்றி வடஅமெரிக்க நாடுகள், ஆபிரிக்க நாடுகள், பிஜி தீவு, தாய்லாந்து, டொமினிக்கன் குடியரசு போன்ற புலம்பெயர்ந்தவர்கள் வாழும் நாடுகளிற்கு அண்மித்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படு வனவையாக இருக்கின்றன. இப்பொருட்களில் ஒரு பகுதி தாயகத்திலிருந்து தருவிக்கப்படுகின்றன என்றபோதும் அப்பொருட் களிற்கு அந்நாடுகளிலிருக்கும் கேள்விகளுடன் ஒப்பிடும்போது அவ்வாறு தாயகத்திலிருந்து ஏற்றுமதியாகும் அளவு மிகச் சிறியதாகும்.

புலம்பெயர்ந்த நம்மவர்கள் விரும்பிப் பயன்படுத்தும் இவ்வாறான பொருட்கள் இங்கிருந்து கொள்வனவு செய்யப்படாமல் அவர்களிற்கு அண்மித்த வேறுநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்படுவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. முதலாவது இப் பொருட்களை இங்கிருந்து கொள்வனவு செய்து புலம்பெயர்ந்தவர்கள் வாழும் நாடுகளிற்கு அனுப்புவதற்கு ஏற்படும் அதிகரித்த செலவாகும். அதிக தூரம் காரணமாக அதிக செலவு ஏற்படுகின்றது. அத்துடன் இவ்வாறு தூரப்பிரதேசங்களுக்கு தாயகத்திலிருந்து பொருட்கள் அனுப்பப்பட்டு புலம்பெயர்

நாடுகளுக்கு போயச் சேர பல நாட்கள் அல்லது ஒரு சில மாதங்கள் செல்லும். இதனால் இப்பொருட்கள் புலம்பெயர்ந்த நாடுகளிற்கு போய்ச் சேர்வதற்குள் பழுதடைந்து விடக்கூடும். கப்பலில் அனுப்பாமல் விமானத்தில் அனுப்பப்படும்போது அவை ஒப்பீட்டளவில் விரைவாகப் போய்ச் சேரும் என்றபோதும் அதற்குரிய செலவு கப்பல் கட்டணத்திலும் பார்க்க பல மடங்கு அதிகமானதாகும்.

உதாரணமாக வட அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வாழைப்பழம் கிலோ ஒன்று ஏறக்குறைய 47 கனேடிய சதங்களாக கனடாவில் விற்கப்படுகின்றது. அதேவேளை இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கப்பல் வாழைப்பழம் ஏறக்குறைய மூன்று கனேடிய டொலர்களுக்கு விற்கப்படுகின்றது. இந்த விலை வேறுபாடு கிட்டத்தட்ட ஆறு மடங்காகும். எல்லாப்பொருட்கள் தொடர்பிலும் இவ்வாறு பாரிய விலை வேறுபாடு இருப்பதில்லை. குறிப்பாக அரிசியினை எடுத்துக் கொண்டால் அது இலங்கையில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றது. இவற்றிற்கிடையேயுள்ள விலை வேறுபாடு மிகச் சிறியதொன்றாகும்.

புலம்பெயர்ந்தவர்கள் தமது தாயத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களை நுகரும்போது அது தொடர்பில் ஒரு பொருளாதார நன்மை தாயகத்தில் உள்ளவர்களிற்கு கிடைக்கும் என்பதனை மனதில் நிறுத்தி தமது கொள்வனவு தெரிவினை மேற்கொள்ள வேண்டும். எந்தவொரு நுகர்வோரைப் பொறுத்த வரையும் கொள்வனவு செய்யப்படும் பொருளினது விலை என்பது கொள்வனவு தீர்மானத்தில் செல்வாக்கு செலுத்தும் முக்கிய காரணியாகும். இந்த வகையில் பொருள் கொள்வனவு என்பது தனியே ஒரு கொள்வனவு நடவடிக்கையாகவன்றி தாயகத்திலுள்ள தமது உடன் பிறப்புகளிற்கு ஆற்றும் ஒரு பொருளாதார உதவி என்பதனையும் சுட்டிக்காட்டும் விதத்தில் தாயகப் பொருட்களை புலம்பெயர்ந்த நாடுகளில் சந்தைப்படுத்தப்படலாம். இச் சந்தர்ப்பத்தில் போட்டி அடிப்படையில் அமைந்த இன்றைய சந்தை பொருளாதார சூழலில் இவ்வாறான சந்தைப்பபடுத்தல் யுத்தியானது எவ்வளவு தூரம் வெற்றியடையும் என்ற கேள்வி எழக்கூடும். ஐரோப்பிய யூனியன் தோற்றுவிக்கப்பட்ட காலத்தில் "ஐரோப்பிய பொருட்களை வாங்குங்கள்" (*Buy Europian*) என்ற வாசகம் பயன்படுத்தப்பட்டதனை இச்சந்தர்ப்பத்தில் கவனத்தில் கொள்ளலாம். இது தவிர பொருளொன்று கொள்வனவு செய்யப்படும்போது தனியே அதன் விலைமட்டும் கொள்வனவினைத் தீர்மானிக்கும்



காரணியாக இன்றி அதன் தரமும், பொருள் தொடர்பிலான பரீட்சியமும் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

இந்த வகையில் தரத்தினையும் பரீட்சயத்தினையும் வசதிப்படுத்த வியாபார குறியீடு (*Brand Name*) பயன்படுத்தப் படுகின்றது. அத்துடன் பொருள் உற்பத்தி செய்யப்படும் இடமும் தரம் தொடர்பில் முடிவு ஒன்றினை எடுப்பது தொடர்பில் முக்கியமானதாகும். சிலோன் தேயிலை (*Ceylon Tea*) ஸ்கொச் விஸ்கி (*Scotch Wiskey*) கொனியாக் (*Gognac*) ஷம்பெயின் (*Champaigne*) போன்றவை இதற்கு சிறந்த உதாரணங்களாகும். இங்கு கொனியாக், சம்பெயின் என்பன பொருட்களின் பெயர்களாக மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்தாலும் அவை அந்த மதுபானங்கள் உற்பத்தி செய்யப்படும், குறிப்பாக அவற்றின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் திராட்சை மரங்கள் வளர்க்கப்படும், இடங்களின் பெயர்களாகும். இவ்வாறு குறிப்பிட்ட இடங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் நல்ல தரமுடையவை என்ற வகையில் மக்கள் அவற்றிற்கு பதிலீடாக கிடைக்கக் கூடிய பொருட்களிலும் பார்க்க கூடிய விலையில் அவற்றினை கொள்வனவு செய்ய முன் வருகின்றனர்.

இந்த வகையில் தாயகப் பொருட்களான பூநகரி மொட்டைக் கறுப்பன் அரிசி, மட்டுவில் கத்தரிக்காய், சாவகச்சேரி பிலாப்பழம், யாழ்ப்பாண மாம்பழம், மன்னார் கருவாடு, மட்டக்களப்பு தயிர், தோலைகட்டி நெல்லி ரசம் போன்ற பிரதேசங்களுடன் தொடர்பு பட்டு பிரபல்யமான பொருட்கள் உரிய முறையில் வியாபாரக் குறியீடு இடப்பட்டு விளம்பரப்படுத்தி விற்கப்படலாம் அத்துடன் இப்பெயர்கள் பிரத்தியேக வியாபார பொருட்பெயர்களாக பதியப்படல் வேண்டும். பிரபல்யமான பொருட்களினை உற்பத்தி செய்வதற்கு பெயர்போன இடங்களின் பெயர்கள் புவியியல் சுட்டிக் காட்டிகளாக (*Geographical Iindications - GI*) பதிவு செய்யப்பட முடியும். உலக வர்த்தக நிறுவனத்தின் (*WTO*) வியாபாரம் தொடர்பிலான புலமைச் சொத்து முறமைக்குள் (*TRIPS*) இவ்வாறான புவியியல் சுட்டிக் காட்டிகளை பிரத்தியேக வியாபாரப் பெயர்களாக பதிவு செய்வதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது. இலங்கை தேயிலை உற்பத்திக்கு பெயர்போன இடங்களான நுவரெலியா, டிம்புல, உடப்புசலாவை போன்ற இடங்களின் பெயர்கள் தனித்துவமான புவியியல் சுட்டிக் காட்டிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளமை இங்கு ஞாபகத்தில் கொள்ளத்தக்கது. அதுமாத்திரமன்றி தாயத்தில் உற்பத்தியாகும் பொருட்கள் சந்தைப்படுத்தப்படும் போது "தாயக உற்பத்தி" போன்ற வாசகங்கள் பயன்படுத்தப்படலாம் என்பதிலும்

தாயத்திலுள்ள ஏற்றுமதியாளர்கள் இணைந்து "தாயக உற்பத்திகளை கொள்வனவு செய்வோம்" போன்ற வாசகங்களை விளம்பரப்படுத்தி புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் தாயக உற்பத்திப் பொருட்களிற்கு முன்னுரிமை கொடுக்கும் வழக்கத்தினை ஏற்படுத்தலாம்.

தாயகப் பொருட்களை புலம்பெயர்ந்தவர்களுக்கு சந்தைப் படுத்துவது தொடர்பில் உள்ள இன்னுமொரு பிரச்சனை யாதெனில் அவை ஏற்றுமதி செய்யக்கூடிய தரத்திலும் அளவிலும் எல்லாக் காலப்பகுதியிலும் தாயகப் பிரதேசங்களில் கிடைப்பதில்லை என்பதாகும். உதாரணமாக யாழ்ப்பாண மாம்பழத்திற்கு நல்ல சந்தை வாய்ப்பு புலம்பெயர்ந்தவர்களிடையே காணப்படுகின்றது. ஆனால் அவை எல்லாக் காலப்பகுதியிலும் ஏற்றுமதிக்கு தேவையானளவு தொகையில் கிடைப்பதில்லை. அத்துடன் பருவ காலங்களில் சந்தைக்கு வரும் மாம்பழங்கள் கூட ஏற்றுமதித் தரத்தில் இருப்பதில்லை. ஏற்றுமதி நோக்கத்திற்கு அவை உரிய பதத்தில் பறிக்கப்பட்டவையாக இருப்பதுடன் உரிய அளவு (*Size*), சுவை என்பவற்றைக் கொண்டிருப்பதுடன் நோய்த் தாக்கங்களிற்குட் படாதவையாகவும், உரிய முறையில் பறிக்கப்பட்டு பொதி செய்யப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும். மாமரம் உரிய முறையில் வர்த்தக நோக்கில் அன்றி தனிப்பட்டவர்களால் வீடுகளில் வளர்க்கப்படும் ஒரு மரப்பயிர் என்ற வகையில் இவ்வாறான ஏற்றுமதிக்குரிய தரத்தில் அவற்றினைப் பெற்றுக் கொள்வதில் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. மாம்பழம் மட்டுமல்லாது ஏற்றுமதி சந்தை வாய்ப்பினைக் கொண்ட பல பொருட்களது நிலமையும் தாயகத்தில் இவ்வாறாகத்தான் உள்ளது.

அண்மையில் இலங்கை வாழைப்பழம் ஜப்பானிய சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக வேண்டி விசேட பண்ணைகளில் விஞ்ஞான ரீதியாக வாழைப்பழங்கள் விவசாய நிபுணர்களின் ஆலோசனை மற்றும் மேற்பார்வைகளுடன் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவ்வாறு விசேடமாக உற்பத்தி செய்யப்படும் வாழைப்பழங்கள் உரிய பதத்தில் அறுவடை செய்யப்பட்டு பொதியிடப்பட்டு ஜப்பானுக்கு அனுப்பப்படுகின்றன. இந்தப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் வாழைப்பழங்கள் அவை மரத்திலிருந்து வெட்டப்பட்ட நாளிலிருந்து 25 தொடக்கம் 30 நாட்களிற்கு உரிய வெப்ப நிலையில் பேணப்படும் போது பழுதடையாமல் இருக்கக்கூடியவாறு உள்ளன. இதனால் இவ்வளவு காலமும் ஜப்பானிற்கு விமானத்தில் அனுப்பப்பட்ட வாழைப் பழங்களை குறைந்த செலவில் கப்பலில் அனுப்பக்கூடிய நிலமை தோன்றியுள்ளது.



இந்த வகையில் புலம்பெயர்ந்தவர்கள் வாழும் நாடுகளிற்கு தாயகப் பொருட்களை ஏற்றுமதி செய்வது தொடர்பிலும் இவ்வாறான விஞ்ஞான பூர்வமான உற்பத்தி, அறுவடை மற்றும் பொதியிடல் என்பன அவசியமாகும். எனவே இவ்வாறான விஞ்ஞானபூர்வமான விவசாயப் பண்ணைகளில் ஏற்றுமதிப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். அத்துடன் தனிப்பட்ட விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களும் ஏற்றுமதிக்கு உகந்தவகையில் தமது விளை பொருட்களை தயார் செய்யும் வகையில் உரிய பயிற்சிகள் அறிவுறுத்தல்கள் என்பன மேற்கொள்ளப் படல் வேண்டும்.

முக்கியமாக பழவகைகள் மரக்கறி வகைகள் மற்றும் கீரை வகைகளை பொதி செய்வது தொடர்பில் உரிய ஆராய்ச்சி அபிவிருத்திகள் அவசியமாகும். ஏனெனில் அவை பழுதடையாமல் இருக்குமாறும் தூரத்திலுள்ள சந்தைகளிற்கு வெவ்வேறுபட்ட போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்தி கொண்டுசெல்லக் கூடிய வகையிலும் பொதியிடலானது அமைய வேண்டும். நெதர்லாந்து நாடு பூக்கள் மற்றும் அழகு தாவர இலைகளை ஏற்றுமதி செய்வதில் உலகில் முக்கிய இடம் வகிக்கின்றது. இந்தத் துறையில் அவர்கள் முன்னணி வகிப்பது தொடர்பில் அவை அந்நாட்டில் சிறப்பாக உற்பத்தியா கின்றன என்பதிலும் பார்க்க அவை பொதி செய்யப்படுவது தொடர்பிலும் உரிய முறையில் குறிப்பிட்ட சந்தைகளிற்கு அவற்றினை அனுப்புவது தொடர்பிலும் அந்நாட்டிற்கு உள்ள நிபுணத்துவமே அடிப்படை வெற்றிக் காரணியாக அமைகின்றது என்று சொல்லப்படுகின்றது.

இந்த வகையில் புலம்பெயர்ந்தவர்கள் தாயக உற்பத்திப் பொருட்களை அதிகளவில் நுகர்வது தொடர்பில் புலம்பெயர்ந்தவர் களது நுகர்வுப் பழக்கத்தில் மாற்றம் ஏற்படல் வேண்டும் என்பதுடன் தாயகத்தில் அவை உற்பத்தி செய்யும் முறை, அறுவடை செய்யும் முறை, பொதியிடல் முறை, ஏற்றுமதி மற்றும் புலம்பெயர்ந்த நாடுகளில் அவற்றினை சந்தைப்படுத்தும் முறை என்பதிலும் மாற்றம் கொண்டுவரல் வேண்டும். இது நுகர்வோர், சந்தைப்படுத்துவோர், ஏற்றுமதியாளர்கள், இடைத்தரகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் எல்லோரும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய செயற்பாடாகும். இவ்வாறான இணைந்த வெற்றிகரமான செயற்பாடு தாயகப் பொருட்களை அதிகளவில் புலம்பெயர்ந்தவர்கள் கொள்வனவு செய்வதனை வசதிப்படுத்துவதுடன் அவற்றினை வெளிநாட்டவர் களிற்கும் அறிமுகப்படுத்தி பாரிய ஏற்றுமதிச் சந்தை ஒன்றை எதிர்காலத்தில் தோற்றுவிக்க உதவும்.

# உலகறிந்த உள்ளூர் உற்பத்திகளை வெளிநாட்டவர்களிற்கு சந்தைப்படுத்தல்

புலம்பெயர்ந்தவர்கள் தாயகப் பொருளாதாரம் தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய இன்னுமொரு பங்களிப்பு அவர்கள் வாழும் நாடுகளில் வெளிநாட்டவர்களுக்கு ஏற்கனவே பழக்கப்படுத்தப்பட்ட இலங்கை உற்பத்திப் பொருட்களான இலங்கைத் தேயிலை மற்றும் தைத்த ஆடைகளை அந்நாடுகளில் சந்தைப்படுத்தலாகும்.

இலங்கைத் தேயிலை புலம்பெயர்ந்தவர்கள் வாழும் நாடுகள் உட்பட உலகின் பல பாகங்களிலும் பிரபல்யமானதாகும். உலகிற்கு மிக அதிகளவு தேயிலையினை ஏற்றுமதி நாடாக இலங்கை விளங்குகின்றது. (ஒரு சில வருடங்களில் கென்யா இலங்கையினை முந்திவிடுவதுண்டு.) இவ்வாறு இலங்கையிலிருந்து அனுப்பப்படும் தேயிலை வெவ்வேறு நாடுகளில் உள்ள தேயிலை சந்தைப்படுத்தல் நிறுவனங்களினால் கொள்வனவு செய்யப்பட்டு அவர்களிற்கு சொந்தமான வியாபாரப் பெயருடன் விற்பனையாகின்றன. இலங்கைத் தேயிலையானது அதன் உயர் தரத்திற்கு பெயர்போனது என்ற வகையில் "தூய்மையான இலங்கைத் தேயிலை" (*Pure Ceylon Tea*) என்ற வாசகத்துடனேயே அது வெளிநாடுகளில் சந்தைப் படுத்தப்படுகின்றது.

இலங்கையின் தேயிலை அளவிற்கு இல்லாவிட்டாலும் இலங்கையில் தயாரிக்கப்படும் தைத்த ஆடைகளும் பிரபல்யமான வையாகும். இவை புலம் பெயர்ந்தவர்கள் பெருமளவிற்கு வாழும் வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிற்கே ஏற்றுமதி செய்யப்பட்டு விற்பனையாகின்றன. இந்த தைத்த ஆடைகள் உலகளாவிய ரீதியிலும், அந்தந்த நாடுகளிலும் பிரபல்யமான ஆடைச் சந்தைப்படுத்தல் நிறுவனங்களின் வியாபாரப் பெயருடன் இந்த நாடுகளில் சந்தைப்படுத்தப்படுகின்றன. இவற்றில் "இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டது." (*Made in Sri Lanka*) என்ற வாசகம்



பொதிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்படுவதனால் அங்குள்ள நுகர்வோர் மத்தியில் இலங்கையின் தைத்த ஆடைகள் தொடர்பில் பரீட்சியம் ஒன்று உள்ளது.

இந்த இரண்டு துறைகளுமே இலங்கைக்கு அந்நிய செலாவணி வருமானத்தினை உழைத்து தருவதில் முன்னணியில் காணப்படுகின்ற போதும் அவற்றின் உரிய பயன் நாட்டிற்கு கிடைக்காததொரு நிலை காணப்படுகின்றது. அதாவது இவ்விரண்டு உற்பத்தி பொருட்கள் தொடர்பிலும் அவற்றினை கொள்வனவு செய்யும் நுகர்வோர் செலுத்தும் விலையில் சிறியதொரு பகுதியே இலங்கைக்கு கிடைப்பதாக உள்ளது. உதாரணமாக ஐரோப்பிய சந்தையில் தேயிலைக்கு நுகர்வோர் செலுத்தும் விலையில் ஏறக்குறைய 14% மட்டுமே இலங்கைக்கு கிடைப்பதாக உள்ளது. இந்த 14% இனைத்தான் தேயிலை தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பல்வேறுதரப்பட்ட சாரார் பகிர்ந்து கொள்ள வேண்டியதாக இருக்கின்றது. இவ்வாறு பகிரப்படக்கூடிய தொகை குறைவாக இருப்பதும் பகிர்வானது உரிய முறையில் மேற்கொள்ளப் படாமையுமே இந்த தேயிலைத் தொழிலில் ஈடுபடும் சில சாரார் உரிய வருமானத்தை பெறமுடியாது அல்லலுறுவதற்கு காரணமாக வுள்ளது. இந்த வகையில் மலையக மக்களின் சம்பளப்பிரச்சனைக்கு தீர்வு காண்பது என்பது தொடர்பில் இந்த 14% என்பதனை அதிகரித்துக் கொள்வது முக்கியதொரு தேவையாகவுள்ளது.

இவ்வாறு இந்த 14% மட்டும் இலங்கைக்கு கிடைக்க மிகுதி 86% நாட்டிற்கு வெளியே உள்ளவர்களிற்கு கிடைப்பதற்கு அடிப்படைக்காரணம் வெளிநாடுகளில் விற்கப்படும் இலங்கைத் தேயிலையின் வியாபரக் குறியீடு (*Brand Name*) வெளிநாட்டு நிறுவனங்களிற்கு சொந்தமாக இருப்பதனால் ஆகும். இதனால் இந்த வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கைத் தேயிலையினை தொகையான தேயிலைகளாக (*Bulk tea*) மிகச் சிறியதொரு விலைக்கு வாங்கி அதனைத் துப்பரவு செய்து விற்பனைக்கு தகுந்தவாறு பொதியிட்டு, வியாபாரக் குறியிட்டு, நுகர்வோர் தேவையறிந்து உயர்சந்தைப் படுத்தல் நுட்பங்களுடன் சந்தைப்படுத்துகின்றனர். இலங்கையிலுள்ள தேயிலை ஏற்றுமதி நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு குறைந்த விலையில் தேயிலையினை இவ் நிறுவனங்களிற்கு வழங்கத்தயாராக இருக்கின்றன. உதாரணமாக குறிப்பிட்ட ஒரு ரக தேயிலையினை குறிப்பிட்ட ஒரு நிறுவனம் குறித்ததொரு விலைக்கு வழங்கத் தயாராக இருக்கும்போது வேறு ஒரு நிறுவனம் அதிலும் பார்க்க குறைந்த விலைக்கு அதே ரக தேயிலையினை வழங்க

முன்வரும். இந்நிலையில் நிறுவனங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டிபோட்டுக்கொண்டு விலைக்குறைப்பினை மேற்கொள்வதுண்டு. தேயிலை ஏற்றுமதியாளர்கள் மற்றும் தேயிலை உற்பத்தியாளர்கள் இலங்கையில் வெவ்வேறு சாரார்களாக இருக்கின்றமையினால் குறைந்த விலைக்கு தேயிலையினை வெளிநாட்டு நிறுவனங்களிற்கு விற்பது தொடர்பில் குறைந்த இலாபத்தினை அல்லது நட்டத்தினை எதிர்நோக்கும் சாராராக தேயிலை ஏற்றுமதியாளர்களன்றி தேயிலை உற்பத்தியாளர்களே காணப்படுகின்றனர். ஆனால் மறுபுறத்தில் வெளிநாட்டு தேயிலை சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் ஒப்பீட்டு ரீதியில் அதிக லாபம் அடையக்கூடியனவாக உள்ளன.

இவ்வாறான ஒரு பின்னணியில் புலம்பெயர்ந்தவர்கள் இலங்கைத் தேயிலையினைக் கொள்வனவு செய்து அவற்றிற்கு தமது சொந்த வியாபாரப் பெயரினை இட்டு உரிய சந்தைப்படுத்தல் யுத்திகளுடன் தாம் வாழும் நாடுகளிலும் வெற்றிகரமாக சந்தைப் படுத்தினால் அவர்கள் நல்லதொரு இலாபத்தினை அடையலாம் என்பதுடன் அதிலொரு பகுதி தாயகத்திற்கு வந்து சேருவதாக இருக்கும். இதற்காக வேண்டி வெளிநாட்டுச் சந்தைத் தேவைகளிற் கேற்ப தேயிலையினைக் கலந்து (*Blending*) பொதிசெய்து பெற்றுக் கொள்வது தொடர்பில் இலங்கையிலுள்ள தேயிலை ஏற்றுமதி நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளலாம்.

இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் தைத்த ஆடைகளை எடுத்துக்கொண்டாலும் அவற்றிலும் வெளிநாட்டு ஆடைச் சந்தைப்படுத்தல் நிறுவனங்களே முக்கிய பங்கினை வகிக்கின்றன. பெருமளவிற்கு இந்த ஆடைச் சந்தைப்படுத்தல் நிறுவனங்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் ஒரு தையல் கடையாகவே இலங்கை விளங்குகின்றது என்று சில விமர்சகர்கள் இலங்கையின் ஆடைக் கைத்தொழில்களை விமர்சிப்பதுண்டு. வெளிநாட்டு ஆடைச் சந்தைப்படுத்துனர்கள் துணிகள் மற்றும் ஆடை உதிரிப்பாகங்கள் என்பவற்றினை யாரிடம் கொள்வனவு செய்தல் வேண்டும். என்பது தொடக்கம் ஆடையின் வடிவமைப்பு, நிறம், அளவு, பொதியிடல் என்பவையீறாக எல்லா விடயங்களையும் தாமே தீர்மானித்து இலங்கையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளிற்கு ஓர் ஊதியத்தினை வழங்குபவர்களாக இருக்கின்றன. இந்தவகையில் இந்த ஆடைத்தயாரிப்பினை இலங்கையிலும் பார்க்க குறைந்த செலவில் வேறுநாடுகளில் மேற்கொள்ள முடியுமெனில் அந்த நாடுகளிலிருந்து தமது ஆடைத் தேவையினை பூர்த்தி செய்வதற்கு எந்த நேரத்திலும் பின்னிற்பதில்லை.



ஆடை ஏற்றுமதியானது கோட்டா முறை ஒன்றினடிப் படையில் 2004 இறுதி வரைக்கும் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி வருடாந்தம் குறிப்பிட்டளவு தொகை ஆடைகள் இலங்கையிலிருந்து கொள்வனவு செய்யப்படல் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தக் கோட்டா முறை கைவிடப்பட்டமையால் இலங்கையிலும் பார்க்க மலிவான ஊழியச் செலவு மற்றும் வினைத்திறனினைக் கொண்ட சீனா போன்ற நாடுகளிலிருந்து தமது ஆடை கொள்வனவை மேற்கொள்வதில் வெளிநாட்டு ஆடைச் சந்தைபடுத்துனர்கள் முனைப்பாக உள்ளனர்.

இதனால் இலங்கையின் ஆடைத்தயாரிப்புத் துறையில் உள்ள பல நிறுவனங்கள் குறிப்பாக மத்தியதர மற்றும் சிறிய நகரங்கள் பாரிய பிரச்சனைகளினை எதிர்நோக்கத் தொடங்கியுள்ளனர். அத்துடன் 2004 ஆம் ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக நாட்டிற்கு கிடைத்த பாரிய வெளிநாட்டு உதவிகள் காரணமாக இலங்கை நாணயத்தின் பெறுமதி குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிப்பிற்குள்ளாகியிருக்கின்றது. இதனால் ஆடை ஏற்றுமதி நிறுவனங்களின் இலங்கை ரூபாவிலான வருமானம் குறை வடைந்துள்ளது. அதாவது முன்னர் தமது ஆடை ஏற்றுமதி மூலம் பெற்ற அமெரிக்க டொலர் ஒன்றிற்கு 105 ரூபாவினை பெற்றவர்கள் தற்போது 100 ரூபாவினைப் பெறும் நிலையே காணப்படுகின்றது. இந்த ரூபாய் பெறுமதி அதிகரிப்பும் ஆடை ஏற்றுமதி நிறுவனங்கள் பலவற்றிற்கு நெருக்கடியினை தோற்றுவிப்பதாக உள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் புலம்பெயர்ந்த நம்மவர்கள் இலங்கையின் தைத்த ஆடையினை தமது சொந்த வியாபாரப் பெயருடன் வெளிநாடுகளில் சந்தைப்படுத்தக்கூடியதாக இருக்கு மாயின் அது நிட்சயமற்ற எதிர்காலத்தினை எதிர்நோக்கும் ஆடைத் தொழிலுக்கு உதவுவதாக அமைவதுடன் அவற்றினை சந்தைப் படுத்தும் புலம்பெயர்ந்தவர்கள் நல்லதொரு வருமானத்தை பெறக்கூடியதாக இருக்கும்.

வெளிநாடுகளில் தேயிலை மற்றும் தைத்த ஆடைகள் என்பவற்றினை பாரிய நிதிப்பலமும் செயற்பாட்டுப் பலமும் கொண்ட பல்தேசிய நிறுவனங்களே சந்தைப்படுத்தி வருகின்றன. இந்த வகையில் அவற்றிடம் போட்டி போட்டுக் கொண்டு சந்தையினைக் கைப்பற்றுவதென்பது இலகுவானதொரு காரியமல்ல. இந்த வகையில் தனித்துவ விருப்புக்கள் கொண்ட சிறிய சந்தைகளை (*Niche Markets*) இலக்கு வைத்து கொண்டு வெளிநாட்டுச் சந்தைக்குள் உட்புக முயற்சி எடுக்கலாம். வெளிநாடுகள் பலவற்றில் புலம்பெயர்ந்த

நம்மவர்கள் ஏற்கனவே கணிசமானதொரு சந்தைப்பிரிவாகக் காணப்படுவதனால் இப்பொருட்களை தமது சொந்த வியாபாரப் பெயருடன் அறிமுகப்படுத்தும் நம்மவர்கள் தமக்கு ஏற்கனவே பரீட்சயமான இந்த சந்தைப்பிரிவினை நோக்கி தமது சந்தைப் படுத்தலினை மேற்கொண்டு பின்னர் படிப்படியாக வெளிநாட்டவர் களையும் இலக்கு வைத்து தமது சந்தைப் படுத்தலினை மேற் கொள்ளலாம்.

இலங்கை நிறுவனமொன்று நேரடியாக வெளிநாட்டு சந்தைகளில் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தல் என்பது மிகவும் கடினமாகதொரு காரியமாகும். ஆனால் புலம் பெயர்ந்தவர்கள் அந்த நாடுகளில் வசித்து வருபவர்கள் என்ற வகையிலும் ஏற்கனவே அங்கு வியாபார நிறுவனங்களை உருவாக்கி வெற்றிகரமாக நடாத்தி வருகின்றவர்கள் என்ற வகையிலும் ஒப்பீட்டு ரீதியில் இலங்கையில் இருந்துகொண்டு வெளிநாடுகளில் தமது பொருட்களை சந்தைப்படுத்த முயற்சிக்கும் நிறுவனங்களிலும் பார்க்க இலகுவாக இந்த சந்தைப்படுத்தலினை மேற்கொள்ள முடியும். எவ்வாறாயினும் அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய மிகப் பெரிய சவால் ஏற்கனவே அந்நாட்டுச் சந்தைகளில் கோலோச்சிக் கொண்டிருக்கும் மிகப்பிரபல்யமான வெளிநாட்டு நிறுவனங்களின் போட்டியினை சமாளிப்பதாகும். இந்த வகையில் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று நேரடிப் போட்டியினை தவிர்த்துக் கொண்டு செயற்படலாம். அத்துடன் சிறிய நிறுவனங்கள் சில இந்த வெளிநாட்டு நிறுவனங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு வெற்றிகரமாக தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தி வருவதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. இதற்கு உதாரணமாக வெளிநாடுகள் பலவற்றில் வெற்றிகரமாக தமது தேயிலை ரகங்களை தமது சொந்த வியாபார பெயரில் சந்தைப்படுத்தி வரும் டில்மா *(Dilmah)* மெல்ஸ்னா *(Melsna)* போன்ற இலங்கை நிறுவனங்களை குறிப்பிடலாம். இதுதவிர குறைந்த விலையில் தரமான பொருட்களை வேண்டிநிற்கும், வியாபார பெயர் விசுவாசத்திற்கு *(Brand loyalty)* பெரும்ளவு முக்கியத்துவம் கொடுக்காத வாடிக்கையாளர்களை இலக்காக கொண்டு பல ஆடை மற்றும் ஏனைய பொருட்களினை சந்தைப்படுத்தும் சிறிய நிறுவனங்கள் பல வெளிநாடுகளில் இன்று வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.

இந்த வகையில் புலம்பெயர்ந்த நம்மவர்கள் தேயிலை மற்றும் தைத்த ஆடைகளை வெளிநாடுகளில் சந்தைப்படுத்தி வெற்றியடை வதன் மூலம் நலிவுற்றிருக்கும் இத்துறைகளிற்கு உதவுபவர்களாக



இருப்பதுடன் தாமும் கணிசமான வருமானத்தினை உழைத்து கொள்ளலாம். இவ்வாறு புலம் பெயர்ந்தவர்களின் கைகளில் ஏற்படும் மூலதன திரட்சியானது மேலும் பல்வேறு வகைகளில் தாயகப் பொருளாதாரத்திற்கு பயனுள்ளதாக அமையும்.

# தாயக மக்களின் தேவையறிந்து முதலிடல்

புலம்பெயர்ந்தவர்கள் தாயகப் பொருளாதாரம் தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய இன்னுமொரு பங்களிப்பு சமூக முதலீடுகளில் முதலீட்டினை மேற்கொள்வதாகும். இங்கு சமூக முதலீடுகள் எனும்போது தனியே முதலீட்டாளர்களின் நோக்கங்களை அடைந்து கொள்ளக்கூடிய முதலீடுகளாகவன்றி சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய முதலீடுகளைக் குறித்து நிற்கின்றது. பொதுவாக இவ்வாறான முதலீடுகள் அரசாங்கத்தினாலேயே மேற்கொள்ளப்படுவ தொன்று என்றபோதும் உரியளவு அரச முதலீடுகள் இல்லாததொரு நிலையில் சிதைந்து போயுள்ள வடக்கு கிழக்கு பொருளாதாரத்தினை மீள்கட்டியெழுப்ப புலம் பெயர்ந்தவர்களின் சமூக முதலீடுகள் அவசியமாகின்றன.

நாட்டில் போர் நிறுத்தம் ஒன்று ஏற்பட்டவுடன் பல நிறுவனங்களும் முதலீட்டாளர்களும் தமது வியாபார செயற்பாடு களை வடக்கு கிழக்கிற்கு விரிவுபடுத்தவும் புதிய முதலீடுகளை மேற்கொள்ளவுமென வடக்கு கிழக்கிற்கு படையெடுத்திருந்தனர். இவ்வாறு படையெடுத்து சென்றவர்கள் எல்லோரும் உரியளவு முதலீடுகள் மற்றும் வியாபார விரிவாக்கத்தினை வடக்கு கிழக்கிற்குச் செய்யவில்லை. சிலர் அவ்வாறான செயற்பாடுகளில் இறங்கியிந்தாலும் கூட அவர்களது நடவடிக்கைகள் பெருமளவிற்கு தமது பொருட் களை வடக்குகிழக்கு மக்களிற்கு விற்று வருமானத்தினை பெறுபவைகளாக இருக்கின்றனவேயன்றி வடக்கு கிழக்கு மக்கள் வருமானத்தினைப் பெறுவதனை வசதிப்படுத்தும் செயற்பாடுகளாக இருக்கவில்லை. பல முதலீட்டாளர்கள் வடக்கு கிழக்கில் வியாபார நிறுவனங்களைத் திறந்து அவற்றில் வெளிநாடுகளில் இருந்தும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் கொண்டுவரப்பட்ட பொருட்களை வடக்கு கிழக்கு மக்களிற்கு விற்கும் செயற்பாடுகளி லேயே ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். இவற்றிற்கு உதாரணமாக



நகைக்கடைகள், புடவைக்கடைகள், பல்பொருள் அங்காடிகள், வீட்டுப் பாவனைப் பொருள் விற்பனை நிலையங்கள், கணினி சேவை நிலையங்கள் போன்றவற்றினைக் குறிப்பிடலாம். ஒரு காலத்தில் பொருளாதாரத் தடையினால் அவதிப்பட்ட மக்களிற்கு இவ்வாறான வியாபார நிறுவனங்களின் சேவை பெருமளவிற்கு தேவைப் படுமொன்றாகவே இருக்கின்றது. எவ்வாறாயினும் இவற்றின் தோற்றம் அம்மக்களின் செலவுகளை அதிகரிப்பதாக இருக்கின்றன வேயன்றி அவர்களின் வருமானத்தினை அதிகரிக்க உதவுபவையாக இருக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் இரு தசாப்பதகால யுத்தத்தினால் தமது வருமான மூலகங்களை இழந்து நிற்கும் வடக்கு கிழக்கு மக்களிற்கு அவர்களது வருமான மூலகங்களை மீண்டும் பெற்றுத் தரக்கூடிய புதிய வருமான மார்க்கங்களை அறிமுகப்படுத்து கின்ற மற்றும் அவர்களது வருமானத்தினை அதிகரிக்கக் கூடிய முதலீடுகளை மேற்கொள்வது அவசியமானதொன்றாகும்.

உற்பத்தி நிறுவனங்கள் குறிப்பாக மக்களின் வெளியீடுகளை உள்ளீடாகப் பயன்படுத்தக்கூடிய உற்பத்தி நிறுவனங்கள், உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்து நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள், துணைசேவை நிறுவனங்கள் என்பன மக்களின் வருமானத்தினை அதிகரிக்க உதவக்கூடிய நிறுவனங்களாகும். இவற்றிற்கு உதாரணமாக பழரசம் மற்றும் ஜாம் உற்பத்தி, வைன் உற்பத்தி பனஞ்சாராய உற்பத்தி, சீனி உற்பத்தி, பால் சேகரிப்பு மற்றும் பால் பொருள் உற்பத்தி, பொதியிடற்பொருள் உற்பத்தி, கொள்வனவு சந்தைப்படுத்தல் வசதிகள், ஏற்றுமதி செயற்பாடுகள், கடலுணவு பதனிடல் செயற்பாடுகள், குளிரூட்டி வசதிகள், மின்சார உற்பத்தி, மீன்பிடி உபகரண உற்பத்தி, கல்வி சேவைகள், தரவு சேவைகள், ஆலோசனை சேவைகள் போன்றவற்றினை உதாரணமாகச் சொல்லாம்.

இவ்வாறான மக்களின் வருமாத்தினை உயர்த்தும் அதேவேளை நாட்டின் பொருளாதாரத்திற்கு அடித்தளமிடும் முதலீடுகளிலும் புலம் பெயர்ந்தவர்கள் ஈடுபடல் வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் சமூகத்திற்கு மிகவும் பிரயோசனமாக இருப்பதுடன் அவற்றில் முதலீட்டினை மேற்கொண்ட முதலீட்டாளர்கள்களிற்கும் உரிய வருமானத்தினைப் பெற்று தருபவையாக அமையும்.

உதாரணமாக தரவு சேவைகள் என்பதனை எடுத்துக் கொண்டால் இன்றைய நவீன வியாபார உலகிலேயே வளர்ச்சி யடைந்த மேற்கு நாடுகளில் உள்ள பல நிறுவனங்கள் தமது நிறுவன

செயற்பாடுகளில் பலவற்றை வளர்முக நாடுகளில் மேற்கொள்கின்றன. இது வியாபார செய்முறையினை வெளியில் இருந்து பெற்றுக் கொள்ளல் (*Business Process Outsourcing*) என்று பிரபல்யம் அடைந்து வருகின்றது. இந்த முறையில் புலம் பெயர்ந்த நம்மவர்கள் வாழும் நாடுகளில் உள்ள நிறுவனங்கள் தமது பல்வேறுபட்ட பின் அலுவலக (*Back Office*) செயற்பாடுகளை வளர்முக நாடுகளில் உள்ள ஊழியர்களைக் கொண்டு மேற்கொண்டு வருகின்றன. இதற்கு உதாரணமாக தொலைபேசி விசாரணைகளுக்கு பதிலளித்தல், குரல் மொழி மூலம் உள்ளவற்றை எழுத்து வடிவிற்கு மாற்றுதல், கணக்குகளைத் தயாரித்தல், வருமான வரி படிவங்களைப் பூர்த்தி செய்தல், மருத்துவ செயற்பாடுகள் தொடர்பில் குறிப்புகளை எடுத்தல், சட்ட செயற்பாடுகள், தரவு நிரற்படுத்தல், நிர்வாக செயற்பாடுகள் போன்றவற்றைக் கூறலாம். உலகலாவிய ரீதியில் மென்பொருள் தயாரித்தல் வேலைகளில் 49 வீதத்தினையும், தகவல் தொழில் நுட்ப வேலைகளில் 44 வீதத்தினையும், வங்கி சார் வேலைகளில் 25 வீதத்தினையும், காப்புறுதி தொடர்பாபான வேலைகளில் 19 வீதத்தினையும், மருந்து உற்பத்தி வேலைகளில் 13 வீதத்தினையும் கோட்பாட்டு ரீதியாக சம்பளம் குறைந்த இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் உள்ள ஊழியர்களைக் கொண்டு மேற்கொள்ள முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வகையில் பல இலட்சம் வேலைகள் ஊழியர் செலவு குறைந்த நாடுகளை நோக்கி எதிர் காலத்திலும் நகரும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் ஊழியர் செலவு அதிகம் என்ற வகையில் இவ்வாறான செயற்பாடுகளை ஊழிய செலவு குறைந்த வளர்முகநாடுகளில் உள்ள ஊழியர்களைக் கொண்டு இந் நிறுவனங்கள் மேற்கொள்கின்றன. உதாரணமாக இங்கிலாந்தில் கணக்காளர் ஒருவரின் சம்பளம் மாதமொன்றிற்கு ஏறக்குறைய நான்கு இலட்சம் ரூபாவாகும். ஆனால் அதே கணக்காளர் செய்யும் வேலையினை இலங்கையில் 50,000ரூபா சம்பளத்தில் கணக்காளர் ஒருவரைக் கொண்டு மேற்கொள்ளலாம்.

இன்று தகவல் தொழில்நுட்பம் மிகவும் வளர்ச்சியடைந்துள்ள நிலையில் மேற்கு நாடுகளில் உள்ள நிறுவனங்கள் தமது இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பான தரவுகளை இணையம் மற்றும் மின் அஞ்சலின் உதவியுடன் வளர்முக நாடுகளிற்கு அனுப்பி வளர்முக நாடுகளில் உள்ள மலிவான ஊழியர்களைக் கொண்டு தமது தேவைகளிற்கேற்றவாறு அவற்றினை தயாரித்துக் கொள்கின்றன. உதாரணமாக அமெரிக்காவில் உள்ள வங்கியொன்றிற்கு அதன் வாடிக்கையாளர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தனது



வங்கிக் கணக்கு தொடர்பில் விசாரிக்கும்போது அந்த தொலைபேசி அழைப்பு வளர்முக நாடொன்றில் உள்ள தரவு சேவை நிறுவனத்திற்கு தன்னியக்க முறையில் மாற்றப்படுகின்றது. வளர்முக நாட்டில் உள்ள அந்த ஊழியர் தனக்கு முன்னால் உள்ள கணினியில் வாடிக்கையாளரின் கணக்கு விபரம், வங்கி விதிமுறைகள், வசதிகள் என்பனவற்றைப் பார்த்து வாடிக்கையாளரின் விசாரணையினைப் பூர்த்தி செய்கின்றார்.

இவ்வாறான செயற்பாடுகளில் இன்று இந்தியா போன்ற நாடுகளில் பல இலட்சம் ஊழியர்கள் வேலைக்கு அமர்த்தப் பட்டுள்ளனர். இதனால் வளர்முக நாடுகளில் உள்ள பல ஊழியர்கள் தொழில் வாய்ப்பைப் பெறுவதுடன் உயர் வருமானத்தினையும் பெறுகின்றனர்.

புலம் பெயர்ந்தவர்கள் வாழும் நாடுகளில் உள்ள நிறவனங்கள் மற்றும் அவர்கள் வேலை செய்யும் பல நிறுவனங்கள் இவ்வாறு தமது செயற்பாடுகளை வளர்முகநாடுகளில் செய்விக்கின்றன. இந்த வகையில் புலம் பெயர்ந்தவர்கள் தமக்கிருக்கும் தொடர்புகளைப் பயன்படுத்தி இவ்வாறான வேலைகளைச் செய்து தருவதற்கான ஒப்பந்தங்களைப் பெற்று தயாகத்திலுள்ள ஊழியர்களைப் பயன்படுத்தி அத்தேவைகளைப் பூர்த்தி செய்யலாம். இவ்வாறான தரவு சேவைகளை மேற்கொள்வதற்கு பாரிய முதலீடு தேவைப்படாது. சில கணினிகளும், தொலைபேசி வசதியும், இணையத்தொடர்பும் ஏதாவதொரு இடத்தில் ஒரு அலுவலகமுமே இதற்கு தேவைப்படுவதாக இருக்கும். அத்துடன் நாட்டில் படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களை வேலைக்கமர்த்தி சிறியதொரு காலப்பயிற்சியுடன் இதனை செய்ய முடியும். இதன் மூலம் வேலையற்றிருக்கும் பலரிற்கு வேலை வாய்ப்பினைக் கொடுத்து அவர்களிற்கு வருமானம் ஒன்றினைப் பெற்றுத்தருவதென்பதுடன் இத்தொழில் ஈடுபடுவோரும் ஏனையோரும் நல்லதொரு இலாபத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த வகையில் முதலீடு ஒன்றினைப் பற்றிச் சிந்திக்கும்போது அதிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய இலாபம் என்பதனைக் கருத்திற்கொள்வதுடன் அதனால் சமுதாயத்திற்கு கிடைக்கக்கூடிய பயன், தற்போதைய உலகியல் மாற்றங்கள், வியாபார போக்குகள், எதிர்நோக்கும் போட்டி போன்ற பல்வேறு காரணிகள் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். இன்று நம்மவர்கள் பலரினால் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் ஒருவரைப் பார்த்து இன்னொருவர் மேற்கொள்ளும் வியாபார முயற்சிகளாக இருக்கின்றனவேயொழிய

அதன் தேவை அறியப்பட்டு, கணிப்பிடப்பட்டு மேற்கொள்ளப்படு பவையாகத் தெரியவில்லை. இதற்கு உதாரணமாக நகைக்கடைகள், உணவுச் சாலைகள், புடவைக்கடைகள் தொடர்பாடல் நிலையங்கள் வாடகை வான், தொடர்மாடிகளை வாங்கி வாடகைக்கு விடுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான வியாபார முயற்சிகளில் தேவைக்கதிகமானவர்கள் ஈடுபடுவதனால் எவருமே உரிய இலாபம் அடைய முடியாத நிலை தோன்றுகின்றது.

இந்த வகையில் வியாபார முயற்சிகள் நுகர்வோரின் தேவை கருதியதாக இருக்க வேண்டும். அத்துடன் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய முதலீடுகள் கூடிய பயனினை முதலீட்டாளர் களுக்கும் அவர் சார்ந்த சமூகத்திற்கும் கூடுதல் பயனினைப் பெற்றுத் தருவதாக இருக்கும். எனவே சமுதாயத்தின் தேவைகளை ஆய்ந்தறிந்து தமக்கும் சமூதாயத்திற்கும் பயன்தரக்கூடிய முதலீகளை தாயகத்தில் மேற்கொள்ள புலம்பெயர்ந்தவர்கள் முன்வரவேண்டும். அவ்வாறான முதலீடுகள் விரைவாக மாற்றமடைந்துவரும் இன்றைய உலகின் போக்குடன் ஒத்துப்போபவையாகவும் புத்தாண்மைத் தன்மை *(Innovation)* பொருந்தியவையாகவும் இருத்தல் அவசியம். அப்போதுதான் அவை நீண்டு நிலைத்திருந்து அனைவரிற்கும் பயன்தருவதாக அமையும்.

# தாயக அபிவிருத்தியில் பங்கு கொள்ளல்

புலம்பெயர்ந்தவர்கள் தாயகப் பொருளாதாரம் தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய இன்னுமொரு பங்களிப்பு சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளில் பங்குகொள்வதாகும். இதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல் என்பதிலிருந்து ஒருபடி மேலே சென்று அபிவிருத்தியில் பங்குபற்றுதல் என்றதொரு நிலையினை புலம்பெயர்ந்தவர்கள் பெறுகின்றனர்.

தற்போது பல சமூக செயற்பாடுகளில் புலம்பெயர்ந்தவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். கோயில் திருப்பணிகளிற்கு உதவுதல், பாடசாலைப் பழைய மாணவர் சங்கங்களை புலம்பெயர்ந்த நாடுகளில் உருவாக்கி தாம் கல்வி பாடசாலைகளிற்கு உதவி வழங்குதல். மற்றும் தாம் பிறந்த ஊர்களில் மேற்கொள்ளப்படும் சமூகப் பணிகளிற்கு உதவுதல், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு உதவுதல் போன்றவற்றினைக் குறிப்பிடலாம். இவற்றைத் தவிர அண்மைய சுனாமி பேரழிவில் தாயகத்தில் உள்ள தமது உடன் பிறப்புகள் பேரழிவினைச் சந்தித்தபோது புலம் பெயர்ந்தவர்கள் மேற்கொண்ட பேரளவான உதவிகள் புலம் பெயர்ந்தவர்களின் சமூகப் பங்களிப்பிற்கு நல்லதொரு உதாரணமாகும்.

வெளிநாடுகளிலுள்ள தனிப்பட்டவர்களும் பொது அமைப்பு களும் புலம் பெயர்ந்தவர்களிடம் பணத்தினையும் பொருட்களையும் பெற்று இவ்வாறான சமூக செயற்பாடுகளிற்கு இங்கு அனுப்பி வருகின்றனர். இவற்றிற்கு மேலதிகமாக புலம்பெயர்ந்தவர்கள் நாட்டிற்கு வந்து செல்லும் போதும் பலதரப்பட்ட சமூக செயற்பாடுகளிற்கு உதவுகின்றனர். சமூக செயற்பாடுகளிற்கான புலம் பெயர்ந்தவர்களின் இந்த பங்களிப்புகள் மேலும் அதிகரிக்க வேண்டும் என்பதுடன் அவை சமுதாயத்தின் தேவையறிந்து ஒழுங்குபடுத்தப் பட்ட முறையில் செயற்படல் அவசியமாகும்.

புலம் பெயர்ந்தவர்களின் இத்தகைய சமூக செயற்பாட்டு பங்களிப்பில் முக்கியத்துவம் பெறுவது கோயில் திருப்பணிகளுக்கு அவர்களது பேரளவான உதவிகளாகும். யுத்தத்தில் சேதமடைந்தும்,

இடம்பெயர்வின் போது பராமரிப்பின்றியும் இருந்த கோயில்கள் பல இன்று அவை முன்னர் இருந்ததிலும் பார்க்க சிறந்ததொரு நிலைக்கு மீள் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றன. வடக்கு கிழக்கிற்குச் சென்று வருபவர்கள் குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்கு அங்கு எல்லா இடங்களிலும் ஏற்பட்டுள்ள மாற்றம் இந்த கோயில்களின் புணருத்தாரண மற்றும் கட்டிட பணிகளாகும். இதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது புலம் பெயர்ந்தவர்கள் வழங்கும் பாரிய உதவிகளாகும்.

இவ்வாறு ஒரு புறத்தில் கோயில்களின் புணருத்தாரணம் மற்றும் வளர்ச்சிகளுக்கு புலம் பெயர்ந்தவர்கள் அடிப்படைக் காரணமாக இருக்க மறுபுறத்தில் புலம் பெயர்ந்தவர்கள் தமது தாயகத்தினூடான உறவினைப் பலப்படுத்த உதவுபவையாக கோயில்கள் விளங்குகின்றன.

கோயில் திருவிழாக்கள், கும்பாபிஷேகங்கள், விழாக்கள் என்பவற்றிற்கு புலம் பெயர்ந்தவர்கள் வந்து செல்கின்றனர். கோயில்களிற்கு நேர்த்திக் கடன்கள் வைப்பதும் அவற்றினை நிறைவேற்றுவதற்கு வந்து போவதும் புலம் பெயர்ந்தவர்களிடையே வழக்கமாக உள்ளது. கோயில் திருவிழாக்களில் காவடி எடுப்பவர்கள், கற்பூரச்சட்டி எரிப்பவர்கள் அங்கப் பிரதட்ஷணம் செய்பவர்கள் என்போரை எடுத்துப் பார்த்தால் அவர்களில் கணிசமானவர்கள் புலம் பெயர்ந்தவர்களே. இந்த வகையில் புலம் பெயர்ந்தவர்களை இணைக்கும் ஓர் உறவுப்பாலமாக கோயில்கள் விளங்குகின்றன.

என்றாலும் கூட இன்று வடக்கு கிழக்கு பகுதிகளில் கோயில்கள் வளர்ச்சியடைந்தளவிற்கு சமுதாயத்தின் ஏனைய அடிப்படைத் தேவைகள் வளர்ச்சியடைந்ததாகத் தெரியவில்லை. இந்த வகையில் கோயில் திருப்பணிகளுக்கு உதவி செய்யும் அதே உத்வேகத்துடன் புலம் பெயர்ந்தவர்கள் ஏனைய சமூக செயற் திட்டங்களுக்கு உதவ முன்வரவேண்டும்.

அதே நேரத்தில் கோயில்களும் தமது பாரம்பரிய செயற்பாடு களுடன் நின்றுவிடாது சமுதாயப் பணிக்ளினைப் பொறுப்பேற்று செய்ய முன்வரவேண்டும். சமய போதனைகளை மேற்கொள்ளல், பாடசாலை அபிவிருத்திக்கு உதவுதல், வாசகசாலை, சனசமூக நிலையங்களை நடாத்துதல், சிறுவர் நல்வாழ்வு நிலையங்களை நடாத்துதல், கிராம அபிவிருத்திப் பணிகளுக்கு உதவுதல் போன்ற சமுதாயப் பணிகளை கோயில்கள் பொறுப்பேற்று செய்தல் வேண்டும். இந்த வகையில் கோயில்களது வருமானத்தில் குறிப்பிட்டாதாரு வீதாசாரம் இவ்வாறான சமூகப் பணிகளுக்கென ஒதுக்கப்படல் வேண்டும். இந்தியாவில் உள்ள பல கோயில்கள்



மற்றும் சமய நிறவனங்களின் நிர்வாகத்தின் கீழ் வைத்தியசாலைகள், பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், சமய போதனை நிறுனங்கள் போன்ற பல்வேறு சமயபணி நிறுவனங்கள் இயங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவிலின் நிர்வாகத்தின் கீழ் சிறுவர் நல்வாழ்வு நிலையம் இயங்கி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. கோயில்களுக்கு நிதியுதவி வழங்குவதிலும் அவற்றின் செயற்பாடுகளிலும் புலம் பெயர்ந்தவர்கள் கணிசமான பங்கினை வகிப்பதனால் அவர்கள் இவ்விடயங்கள் தொடர்பில் கோயில் நிர்வாகத்தினைத் தூண்ட முடியும்.

அத்துடன் புலம்பெயர்ந்த நாடுகளில் இருக்கும் கோயில்களும் தாயகத்தில் இவ்வாறான சமூகப் பணிகளை மேற்கொள்ள முன்வர வேண்டும். புலம்பெயர் நாடுகளில் உள்ள சில கோயில்கள் தாயகத்தில் சில சமூகப்பணிகளை ஏற்கனவே செய்து வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அண்மையில் சுனாமி பேரழிவில் தாயகத்திலுள்ள மக்கள் பேரழிவிற்குள்ளான போது புலம்பெயர் நாடுகளில் உள்ள கோயில்கள் சுனாமி மீள் நிர்மாணப் பணிகளுக்கு பாரிய அளவில் உதவியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

புலம் பெயர்ந்தவர்கள் மேற்கொள்ளும் இன்னுமொரு சமுதாயப் பணி தாம் வாழும் நாடுகளில் தாம் கல்வி பயின்ற பாடசாலைகளுக்கு பழைய மாணவர் சங்கங்களை அமைத்து பாடசாலை அபிவிருத்திப் பணிகளுக்கு உதவிவருவதாகும். யுத்தத்தினால் மிகவும் பாதிப்படைந்த பாடசாலைகள் பல இன்று கட்டியெழுப்பப்பட்டு பல்வேறு வசதிகளுடன் இயங்கிவருவது தொடர்பில் இந்த பழைய மாணவர் சங்கங்களின் பங்கு முக்கியமான தாகும். சில பாடசாலைகளைப் பொறுத்தவரை அவற்றிற்கு அரசினால் வழங்கப்பட்ட வசதிகள், உதவிகள் என்பவற்றிலும் பார்க்க அதிகமான வசதிகள் இந்தப் பழைய மாணவர் சங்கங்களினாலேயே ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் இவ்வாறு புலம்பெயர்ந்த நாடுகளில் பழைய மாணவர் சங்கங்களைக் கொண்ட அவர்களிடம் இருந்து பல்வேறு உதவிகளைப் பெறும் பாடசாலைகள் நாட்டில் உள்ள மொத்த பாடசாலைகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது மிகச் சிலவாகும். பிரபல்யமான பாடசாலைகள் சிலவற்றிற்கே இவ்வாறு பழைய மாணவர் சங்கங்களின் உதவிகள் கிடைக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் இந்தப் பிரபல பாடசாலைகளின் தேவைகளுக் கதிகமான உதவிகள் புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து வந்து சேர்கின்றன. இதனால் நிதியும், கணினிகள் போன்ற உபகரணங்களும்

இந்த பாடசாலை நிர்வாகங்களிடம் தேவைக்கதிகமாகக் காணப் படுகின்றன.

ஆனால் மறுபுறத்தில் ஆயிரக்கணக்கான நடுத்தர மற்றும் சிறிய பாடசாலைகள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி மிகவும் கஷ்டத்தின் மத்தியில் இயங்கி வருகின்றன. இப்பாடசாலைகளுக்கு பழைய மாணவர் சங்கங்களும் இல்லை, உதவுவாருமில்லை. பல பாடசாலைகள் கட்டிட வசதியே இல்லாது மரங்களுக்குக் கீழே நடாத்தப்படுவது நாமெல்லோரும் அறிந்ததொன்றே. பல பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் கணினியினைக் கண்ணால் கண்டது கூடக் கிடையாது. கிராமங்களில் இயங்கும் சிறிய பாடசாலைகள் குறிப்பாக ஆரம்பக் கல்வியினை வழங்கும் பாடசாலைகள் இவ்வாறு படுமோசமான நிலையில் உள்ளன.

மறுபுறத்தில் யுத்தத்தில் வாழ்வாதாரங்களை இழந்து நிற்கும் இந்த கிராமங்களில் வசிக்கும் பெற்றோர் தமது சொந்த வாழ்க்கைப் பிரச்சனையினையே தீர்க்க முடியாத நிலையில் பாடசாலையினைப் பற்றியோ தமது பிள்ளைகளின் கல்வியினைப் பற்றியோ உரிய கவனமெடுக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். இவ்வாறான ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்கு புலம் பெயர்ந்தவர்கள் முன் வரவேண்டும். பழைய மாணவர் சங்கங்களை தனியே தமது கல்லூரிகளுக்கு மட்டும் உதவுவதாகவின்றி இவ்வாறு வசதிகள் அற்ற உதவிகள் உண்மையாகத் தேவைப்படுகின்ற பாடசாலைகளுக்கும் அங்கு கல்வி பயிலும் மாணவர்கட்கும் உதவுவதற்கு முன்வர வேண்டும். புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள ஒவ்வொரு பழைய மாணவர் சங்கங்களும் தமது நிர்வாகத்தின் கீழ் இவ்வாறு உதவி வேண்டி நிற்கும் பாடசாலைகள் சிலவற்றினை தெரிவு செய்து தமது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவேண்டும். அவற்றிற்கு தனியே நிதியுதவி, பொருளுதவி என்பவற்றினை மட்டும் வழங்குவதுடன் நின்றுவிடாது ஆலோசனை உதவி, நிர்வாக உதவி, ஆசிரியர் உதவி போன்ற உதவிகளை செய்ய முன்வரவேண்டும்.

ஏற்கனவே பழைய மாணவர் சங்கங்கள் இல்லாத பாடசாலை களிற்கு பழைய மாணவர் சங்கங்கள் புலம்பெயர் நாடுகளில் உருவாக்கப்படல் வேண்டும். பிரபல்யமான பாடசாலைகளில் படித்த பலர் அதற்கு முன்னர் தமது ஆரம்பக் கல்வியினை கிராமங்களிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர பாடசாலைகளிலேயே பயின்றவர்கள் என்பதும் மாணவர் ஒருவரின் கல்வி வளர்ச்சியில் ஆரம்பக் கல்வி மிக முக்கிய பங்கு வகிக்கின்றது என்பதும் இங்கு ஞாபகத்தில் கொள்ளத்தக்கது.

சமூக அபிவிருத்தித் தேவைகளிற்கு புலம்பெயர்ந்தவர்களின் இந்தப் பங்களிப்பு மேலும் அதிகரிக்கப்படல் வேண்டும் என்பதுடன்



அவை தேவையறிந்து மேற்கொள்ளப்படுபவையாகவும் பல் வேறுபட்ட சமுதாயத் தேவைகளுக்கிடையே நியாயமான முறையில் பகிரப்படுபவையாகவும் எல்லாப் பிரதேசங்களிற்கும், சமூகத்தின் எல்லா மட்டத்தினருக்கும் பயன்படுக்கூடியதாகவும் அமைதல் வேண்டும்.

# தாயக உறவுகளுக்கு நிரந்தர வருமானத்தின் அவசியம்

தாயகத்தில் வாழும் கணிசமானதொரு தொகை மக்கள் இன்று புலம் பெயர்ந்தவர்கள் அனுப்பும் பணத்தினை நம்பித்தான் வாழ்கின்றனர். இந்த மக்களின் ஒரு பகுதியினருக்கு வேறு எந்தவித வருமானமுமே இல்லை. இந்த வகையில் வெளிநாட்டுப் பணம் என்பது இந்த மக்களின் வாழ்க்கைக்கு மிக அவசியமாகிறது. இந்த வகையில் புலம் பெயர்ந்தவர்களும் தாயத்தில் வாழும் எமது உறவுகளை நினைத்து அவர்களுக்கு பணம் அனுப்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு அனுப்பப்படும் பணத்தினைக் கொண்டு தாயகத்தில் உள்ளவர்கள் தமது நாளாந்த வாழ்க்கையினைக் கொண்டு செல்பவர்களாக இருக்கின்றார்கள். இன்னொரு வகையில் கூறுவதாயின் இவ்வாறு வெளிநாடுகளில் இருந்து வரும் பணம் உடனடியாக செலவு செய்யப்பட்டு விடுகின்றது. பின்னர் எதிர்கால தேவைகட்கு மீண்டும் புலம்பெயர்ந்தவர்களின் பணத்தினை எதிர்பார்க்கும் நிலைமை தான் காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் புலம்பெயர்ந்தவர்கள் எவ்வளவு காலத்திற்கு இவ்வாறு பணத்தினை அனுப்பிக் கொண்டிருப்பார்கள் என்பதும் அவ்வாறு புணம் வெளிநாடுகளில் இருந்து வராவிட்டால் அதனை நம்பியிருக்கும் இங்குள்ளவர்களின் நிலை என்னவாகும் என்பதும் சிந்திக்க வேண்டியதொன்றாகும்.

இவ்வாறானதொரு நிலையில் தாயகத்தில் உள்ளவர்கள் நிரந்தர வருமான மொன்றை பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை களினை எடுக்க வேண்டிய தேவையொன்று உள்ளது. இந்த நிரந்தர வருமானத்தினை ஏற்படுத்துதல் என்பது தாயகத்தில் உள்ளவர்களும் புலம்பெயர்ந்தவர்களும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய செயற்பாடாகும்.



நிரந்தர வருமானத்தினை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பது தொடர்பில் சிந்திக்கும்போது நம்மவர்கள் பலருக்கு உடனடியாக ஞாபகத்திற்கு வருவது வங்கி அல்லது நிதி நிறுவனமொன்றில் குறிப்பிட்டதொரு தொகையினை வைப்பில் இட்டு விட்டால் அதில் இருந்து கிடைக்கும் வட்டி வருமானத்தினை கொண்டு வாழ்க்கை யினை கொண்டு செல்லலாம் என்பதாகும். ஆனால் தற்போது நாட்டில் வைப்புகளிற்கான வட்டிவீதம் பெருமளவுக்கு குறைந்து விட்டது. ஒரு காலத்தில் 24% வரை காணப்பட்ட நிலையான வைப்புகளிற்கான வட்டிவீதமானது தற்போது 10மூ மாகக் காணப்படுகின்றது. மறுபுறத்தில் பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்து செல்வதாக (பணவீக்கம்) காணப்படுகின்றது. வட்டிவீதம் 10%மாக இருக்க பணவீக்கம் 13% மளவிற்கு உயர்வாக காணப்படு கின்றது. இந்த வகையில் வங்கியில் பணத்தினை வைப்பிலிடுவதன் மூலம் வருமானம் ஒன்று கிடைப்பதிலும் பார்க்க வருமான இழப்பு ஒன்று ஏற்படும் நிலையே காணப்படுகின்றது. அதாவது நூறு ரூபாவினை 10% வைப்பிலிட்டு ஆண்டு முடிவில் 110 ரூபாவினை வட்டியும் முதலுமாக மீளப்பெறும்போது வைப்பிலிட்டபோது 100 ரூபாவிற்கு விற்ற பொருள் அந்த வருட முடிவில் 113 ரூபா வரை அதிகரித்திருக்கும் நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில் வட்டியினையும் முதலினையும் பயன்படுத்தி குறிப்பிட்ட பொருளை வாங்க முடியாத நிலை தோன்றுகின்றது. இந்த வகையில் வட்டி வருமானத்தினை மட்டும் நம்பி வாழ்வதென்பது தற்போதைய சூழ்நிலையில் கடினமானதாகும்.

நிரந்தர வருமானத்தினைப் பெற்றுத் தருவது தொடர்பில் நம்மவர்கள் பலர் சிந்திக்கும் இன்னுமொரு மார்க்கம் தாம் பண உதவி செய்ய வேண்டியுள்ள குடும்பத்தில் ஒருவரை வெளிநாட்டுக்கு கூப்பிட்டு விடுவது என்பதாகும். இவ்வாறு உதவி செய்து தமது உறவினர், நண்பர்கள் வெளிநாடுகளிற்கு செல்ல பல புலம்பெயர்ந் தவர்கள் உதவியிருந்தார்கள் என்றபோதும் தற்போது வெளிநாட்டிற்கு கூப்பிடுவதென்பது மிகவும் கடினமாகதொரு விடயமாக உள்ளது. அவ்வாறு உறவினர் ஒருவரைக் கூப்பிட்டு விட்டால் கூட அந்த உறவினரில் தாயகத்தில் உள்ள வேறு சிலர் தங்கியிருக்கின்ற நிலை தொடர்வதாகவே இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக தாயகத்தில் உள்ளவர்கள் எல்லோரும் வெளிநாடுகளிற்குப் போய் விட முடியாது.

இந்த வகையில் தாயகத்தில் உள்ளவர்கள் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதன்மூலம் தமக்கென வருமான மீட்டலில் ஈடுபடுவதே இப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாக இருக்கும். தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்படுவதனூடே இந்த வருமான மீட்டல் மேற்கொள்ளப்படலாம். உள்ளூர் உற்பத்தியினை

அதிகரிக்கும் செயற்பாடுகள், உள்ளூர் உற்பத்தி பொருட்களிற்கு புதிய சந்தைகளைப் பெற்றுக் கொடுக்கும் செயற்பாடுகள், புதிய உற்பத்திப்பொருட்களை அறிமுகப்படுத்தி உற்பத்தி செய்யும் செயற்பாடுகள், துணைச்சேவைகளை வழங்கும் செயற்பாடுகள் போன்றவற்றின் மூலம் இந்த வருமான மீட்டல் என்பது மேற் கொள்ளக்கூடியதாக இருக்கும். இந்த வகையில் புலம்பெயர்ந்தவர் களின் பண உதவிகள் மற்றும் தொழில்சார் விடய அறிவு உதவிகள் என்பவற்றினைப் பெற்றுக்கொண்டு தாயகத்தில் உள்ளவர்கள் இந்தப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடல்வேண்டும்.

இப்பொருளாதார நடவடிக்கைகளில் தாமாக தனித்து ஈடுபடக்கூடிய பணபலம் மற்றும் தொழில்சார் அறிவினை எல்லோரும் கொண்டிருப்பர் என்று சொல்வதற்கில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களில், தாயகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சமூக, பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு தம்மாலான பங்கினை மேற்கொள்வதன் மூலம் தாயகத்தின் பொருளாதார கட்டியெழுப்பலில் பங்குபற்றி அதனூடே தாயகத்தில் வாழ்கின்ற வர்கள் நீண்ட காலத்தில் பொருளாதார சுதந்திரத்தினைப் பெற்றுக் கொள்ள உதவ முடியும்.

# நிலைத்து நிற்குமா இந்த உறவுகள்?

புலம்பெயர்ந்தவர்கள் ஒரு காலத்தில் தமது உழைப்பின் பெரும்பகுதியினை தாயகத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தனர். பின்னர் அவர்கள் திருமணம் செய்து குடும்பம், பிள்ளைகள், சமூகத்தேவைகள் என அவர்களது தேவைகள் புலம்பெயர்ந்த நாடுகளில் அதிகரிக்கத் தொடங்கியபோது அவர்களால் தாயகத்திற்கு அனுப்பக்கூடியதாக இருந்த பணம் குறைவடைந்து வருவதாக உள்ளது.

புலம்பெயர்ந்தவர்கள் வெளிநாடுகளுக்கு ஒரு காலத்தில் புகலிடம் தேடிச் சென்றவர்களாக இருந்தாலும் அவர்கள் இன்று தாம் வாழும் நாடுகளை தமது வாழ்விடமாக மாற்றிக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர். இந்த வகையில் அவர்ககள் அந்நாடுகளில் தமக்கென பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கின்றது. இந்த நிலையில் அவர்களால் தாயகத்தில் உள்ள உறவினர்களிற்கு மேற்கொள்ளக்கூடிய உதவிகள் கொஞ்சம் கொஞ்சமாக குறைவடைவதாக உள்ளது.

புலம் பெயர்ந்து வாழும் தற்போதைய சந்ததியினர் இளைப் பாறுகின்றபோது அடுத்த சந்ததியினர் தாயகத்திற்கான பொருளா தாரப் பங்களிப்புகளை தமது பெற்றோர்கள் மேற்கொண்டது போல் செய்பவர்களாக என்பது கேள்விக்குறியே (இது தொடர்பான மேலதிக விபரங்களிற்கு ஆறாவது கட்டுரையை பார்க்கவும்.)

இந்தச் சந்தர்ப்பத்தில் புலம்பெயர்ந்தவர்களின் தாயகத்திற்கான பங்களிப்புகள் குறைந்து வருவதனால் ஏற்படக்கூடிய பிரச்சனைகளை எவ்வாறு தீர்க்கலாம் என்பது பற்றி சிந்திப்பது அவசியமாகின்றது. இந்தத் தீர்வு என்பது இரண்டு வகைப்பட்டதாக இருக்கும். ஒன்று புலம்பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புகளில் தங்கியிருக்காது வாழ தாயகத்தில் உள்ளர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்வது. இரண்டாவது புலம் பெயர்ந்தவர்களின் தாயகத்திற்கான பொருளாதாரப் பங்களிப்புகள் நின்றுவிடாது பார்த்துக் கொள் வதாகும். இந்த இரு நடவடிக்கைகளுமே தனியே ஒரு சாராரால்

மேற்கொள்ளப்படுவதாகவன்றி தாயகத்தில் வாழ்பவர்களாலும் புலம் பெயர்ந்தவர்களாலும் மேற்கொள்ள வேண்டியவையாகும்.

இரு தசாப்பத யுத்தத்தினாலும் அண்மையில் ஏற்பட்ட சுனாமியினாலும் அழிந்து போயுள்ள பொருளாதாரத்தினை மீள் கட்டியெழுப்புவதன் மூலம் பொருளாதார வளர்ச்சி பெற வழிசெய்து அதனூடே மக்களின் வாழ்வாதாரங்களை மீட்டெடுத்து உரிய வருமானத்தினைப் பெறச் செய்வது மக்கள் தமது சொந்தக் காலில் நிற்பதற்கு அவசியமாகும். இந்தப் பொருளாதாரக் கட்டியெழுப்பல் என்பது ஒரு பாரிய செயற்பாடாகும். இந்த நூலானது புலம்பெயர்ந் தவர்களை மையமாகக் கொண்டது என்ற வகையில் இந்த உள்நாட்டு பொருளாதார கட்டியெழுப்பல் எவ்வாறு இடம்பெறவேண்டு மென்பது இங்கு ஆராயப்படவில்லை. எவ்வாறாயினும் இந்தப் பொருளாதார கட்டியெழுப்பலில் புலம் பெயர்ந்தவர்களும் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றனர் என்பது இங்கு ஞாபகத்தில் கொள்ளத்தக்கதாகும். இந்த வகையில் உள்ளூர் பொருளாதார கட்டியெழுப்பலில் புலம் பெயர்ந்தவர்களது பங்களிப்புக்களானவை எவ்வாறு அமைகின்றன. அவை மேலும் எந்த வகையில் விரிவு படுத்தப்படல் வேண்டும் என்பவை தொடர்பான விபரங்கள் முன்னைய கட்டுரைகளில் ஆராயப்பட்டுள்ளன.

இந்த வகையில் புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புகள் குறைவடைந்து வருவதனை எவ்வாறு தணித்துக் கொள்ளலாம் என்பது தொடர்பில் சிந்திப்பது அவசியமாகின்றது.

புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புகள் குறைவதனைத் தணிக்க முதலில் செய்ய வேண்டியது, இந்த விடயம் தொடர்பில் உரிய அக்கறை கொள்வதாகும். புலம் பெயர்ந்தவர்கள் என்பவர்கள் இன்று தாயகத்தில் உள்ளவர்களில் இருந்து பெரிதாகப் பிரித்துப் பார்க்க முடியாதவர்கள். அவர்கள் இடம் பெயர்ந்து வேறுநாடுகளில் புகலிடம் தேடி வாழ்பவர்களாகவும் அவர்களில் பெரும்பாலானவர்கள் அந்த நாடுகளை தமது வாழ்விடமாக மாற்றிக் கொண்டு வாழ்ந்து வருபவர்களாக இருந்தும் கூட அவர்களிற்கு தாயகத்தில் உள்ளவர்களிற்கும் இடையிலான உறவு என்பது மிகவும் இறுக்கமானது. புலம் பெயர்ந்தவர்கள் என்பவர்கள் வேறுயாருமல்ல அவர்கள் தாயகத்திலுள்ளவர்களின் அண்ணன், அக்கா, அம்மா, அப்பா, மகன், மகள், மருமகன், மருமகள், தம்பி, தங்கை, மாமா, மாமி, சித்தப்பா, பெரியப்பா, பெரியம்மா, சின்னம்மா அல்லது நண்பர் என்று உறவால் மிக நெருங்கியவர்கள். வாழும் இடம், செய்யும் தொழில் வாழ்க்கைமுறை போன்றவை வேறுபட்டாலும்



கூட பெரும்பாலான ஏனைய விடயங்களில் புலம் பெயர்ந்தவர்களும் தாயகத்தில் உள்ளவர்களும் ஒன்றுபட்டவர்கள்.

இவ்வாறானதொரு பின்னணியில் புலம்பெயர்ந்தவர்களிற்கும் தாயத்திலுள்ளவர்களிற்கும் இடையில் உள்ள இறுக்கம் குறைந்து விடுமென்றோ, புலம்பெயர்ந்தவர்கள் தாயகத்தில் உள்ளவர்களிற்கு செய்துவரும் பொருளாதார உதவிகள் குறைந்து விடலாமென்றோ நாம் சிந்திக்க முற்படுவதில்லை. இவ்வாறு புலம்பெயர்ந்தவர்களையும் தாயகத்தில் உள்ளவர்களையும் பெருமளவிற்கு வேறுபடுத்தி பார்க்காத நிலையில் அவர்கள் தாயகத்தில் உள்ளவர்களிற்கு செய்யும் பொருளாதார உதவிகளை ஒரு பொருளாதாரக் கண்ணோட்டத்தில் பார்க்கத் தவறிவிடும் நிலை காணப்படுகின்றது. பல சந்தர்ப்பங்களில் புலம் பெயர்ந்தவர்கள் வேறுநாட்டு பிரஜைகள் என்பதனையோ அவர்கள் தாயகத்திற்கு விசா எடுத்துத்தான் வருகின்றார்கள் என்பதனையோ கூட பலர் நினைத்துப் பார்ப்பதில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் புலம்பெயர்ந்தவர்களின் பிள்ளை களிற்கும் தாயகத்தில் உள்ளவர்களிற்கும் இடையிலான உறவு எத்தகையது அல்லது இவ்விரு இளைய சமுதாயத்தினர்களிற்கும் இடையிலான உறவு எத்தகையது என்பதனைச் சற்று சிந்தித்து பார்ப்பது அவசியமாகும். வெளிநாடுகளில் உள்ள பிள்ளைகளுடன் தாயகத்தில் உள்ளவர்களால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கதைக்க முடிவதில்லை. அவர்கள் பேசும் மொழி தாயகத்தில் உள்ளவர்களிற்கு புரிவதில்லை அல்லது தமிழ் மொழி அவர்களிற்கு புரிவதில்லை. அவர்களது வாழ்க்கைமுறை, சிந்தனை செயற்பாடு, உணவுப்பழக்கம் போன்றவை கணிசமானஅளவிற்கு தாயகத்தில் உள்ளவர்களுடன் ஒப்பிடும் போது வேறுபட்டுக் காணப்படுகின்றன. தாயக உறவுகளின் வீட்டு தண்ணீர், சாப்பாடு போன்றவை அவர்களிற்கு பெருமளவிற்கு ஒத்துவருவதில்லை. தாயகத்தில் உள்ள வீட்டுக்கழிவறைகூட அவர்களிற்கு ஒத்துவருவதில்லை. புலம் பெயர்ந்தவர்களின் பிள்ளைகள் பலர் தாயகத்தில் உள்ள இடங்கள் அசுத்தமாக இருக்கின்றன என்கின்றனர். அவர்கள் தாயகத்தில் உள்ள பிள்ளைகளுடன் பேசிப்பழகி விளையாடுவதிலும் பார்க்க கணினியுடனும், தொலைக்காட்சியுடனும் கையடக்கத் தொலைபேசி யுடனும், புத்தகங்களுடனும் கூடுதலான நேரத்தினை செலவிட விரும்புகின்றனர். சில சந்தர்ப்பங்களில் அவர்கள் உடை உடுத்தும் பாணி கூட மிகவும் வித்தியாசமாக இருக்கின்றது.

இவ்வாறானதொரு பிற்புலத்தில் புலம் பெயர்ந்தவர்களிற்கும் தாயகத்திற்கும் இருக்கும் அந்த இறுக்கமான உறவு அடுத்த தலைமுறையினர்களிற்கிடையிலும் தொடருமா என்பது சற்று

சிந்தித்துப்பார்க்க வேண்டியதொன்றாகும். இந்த வகையில் இந்த உறவில் ஏற்படும் தளர்வு தாயகத்திற்கு கிடைக்கும் பொருளாதார உதவிகளிலும் ஏற்படும் என்பது நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

இந்த சந்தர்ப்பத்தில் சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் வாழும் நம்நாட்டு தமிழர்களிற்கும் தாயகத்தில் உள்ளவர்களிற்கும் இடையிலான உறவு தற்போது எவ்வாறு உள்ளது என்று சிந்தித்து பார்ப்பது பொருத்தமாகும். அவர்களும் சில தசாப்தங்களிற்கு முன்னர் இலங்கையிலிருந்து தொழிலின் நிமிர்த்தம் அந்நாடுகளிற்கு சென்று குடியேறியவர்கள். அவர்கள் அந்த நாடுகளில் தமிழ் மொழியினைப் பேசிக்கொண்டு, பெருமளவிற்கு எமது கலாச்சார அடையாளங் களுடன் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் அங்கு வாழும் நம்நாட்டுத் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் இங்குள்ளவர்களுடன் கிட்டிய இரத்த உறவு கொண்டவர்கள். ஆனால் அவர்களிற்கும் தாயத்திற்கு மிடையிலான உறவு மிகவும் வரையறுக்கப்பட்டதொரு நிலையி லேயே இருக்கின்றது. அவர்களிற்கும் தாயகத்தில் உள்வர்களிற்கும் இடையில் குறிப்பிடத்தக்களவு பொருளாதார உறவு எதுவுமே இல்லை என்றால் மிகையாகாது. மலேசியாவில் உள்ள உலகிலேயே மிக உயரமான கட்டிடமான பெற்றொனாஸ் கோபுரத்தின் (*Petronas Towers*) உரிமை நிறுவனத்தில் முக்கியதொரு பங்குதாரரான ஆனந்த கிருஷ்ணன் என்பவர் நம்நாட்டு வழிவந்த தமிழராவர். அவர் இன்று உலகளாவிய ரீதியில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தொழிலதிபராக விளங்குகின்றார். ஆனால் அவருக்கும் நம்நாட்டிற்குமிடையே எந்தவிதமான பொருளாதாரத் தொடர்புகளும் இருப்பதாகத் தெரியவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் மலேசியா மற்றும் சிங்கப்பூரில் வாழும் நம்நாட்டுத் தமிழர்களைப்போல் புலம் பெயர்ந்தவர்களும் எதிர்காலத்தில் எம்மில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக அந்நியப்பட்டு விடுவார்களா? என்றதொரு அச்சம் மனதில் தோன்றுகின்றது. இத்தகையதொரு பின்னணியில் புலம் பெயர்ந்தவர்களது பொருளாதாரப் பங்களிப்புகளின் முக்கியத்துவம் என்ன? அவர்களது பொருளாதாரப் பங்களிப்பு இல்லாவிட்டால் எத்தகைய விளைவுகள் ஏற்படும்? அவ்வாறானதொரு சூழ்நிலைக்கு தாயகத்தில் உள்ளவர்கள் தம்மை தயார்படுத்திக் கொள்கின்றனரா? இந்தப் பொருளாதாரப் பங்களிப்புகள் குறையாமல் இருக்க என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்? புலம் பெயர்ந்தவர்களிற்கும் தாயகத்திற்கும் குறிப்பாக இளைய தலைமுறையினர்களுக்கிடை யிலான உறவு நெருக்கத்தினைப் பலப்படுத்த என்ன செய்ய வேண்டும்? என்பவை பற்றி சிந்திப்பது அவசியமாகின்றது.



எனவே புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப் புகள் என்பதனை உரிய முறையில் விளங்கி அக்கறை கொள்வது என்பது இந்தப் பொருளாதாரப் பங்களிப்புகள் குறைவதனைத் தணிக்க மிக அவசியமாகும்.

# தாயகத்திற்கு வந்து செல்லல்

புலம்பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புகள் குறையாமல் இருப்பதற்கு அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை புலம் பெயர்ந்தவர்களிற்கும் தாயகத்திற்கும் இடையிலான உறவினைப் பலப்படுத்திக் கொள்வதாகும். குறிப்பாக இளைய தலைமுறையினர்களுடன் உறவினை இறுக்கமாகப் பேணுவதாகும்.

உறவு எனும்போது இரத்த ரீதியான உறவு என்பதற்கு மேலாக இனரீதியான உறவு, மொழி ரீதியான உறவு, சமய ரீதியான உறவு, தாய்நாட்டு உணர்வு அடிப்படையிலான உறவு, கலாச்சார உறவு, வரலாற்று ரீதியான உறவு, அரசியல் உறவு, நட்பு ரீதியான உறவு, பொருளாதார உறவு எனப் பலதரப்பட்டவையாக இருக்கும். இந்நூலானது புலம் பெயர்ந்தவர்களிற்கும் தாயகத்திற்கும் இடையிலான பொருளாதார ரீதியான உறவினைப் பற்றியதாகவும் அதனை எவ்வாறு பலப்படுத்திக் கொள்ளலாம் என்பது தொடர்பிலும் இருக்கின்றபோதும் இங்கு குறிப்பிட்ட ஏனைய உறவுகள் எல்லாமே இந்த பொருளாதார உறவினைப் பலப்படுத்த அவசியமான வையாகும்.

இந்த உறவுகள் தொடர்வதற்கும், வளர்வதற்கும், அடிப் படையில் புலம்பெயர்ந்தவர்களிற்கும் தாயகத்திற்கும் இடையிலான தொடர்பாடல் அவசியமாகும். தொடர்பாடலானது பல்வேறு வழிகளில் மேற்கொள்ளப்பட முடியும். அவற்றில் முக்கியமானது புலம் பெயர்ந்தவர்களிற்கும் தாயத்தில் உள்ளவர்களுக்கிடையிலுமான நேரடியான சந்திப்புக்களாகும். குறிப்பாக புலம் பெயர்ந்து வாழும் இளைய தலைமுறையினர்கட்கும் தாயகத்தில் உள்ள இளைய தலைமுறையினர்கட்கும் இடையிலான நேரடிச் சந்திப்புக்களாகும்.

தாயகத்தில் உள்ளவர்கள் புலம்பெயர்ந்த நாடுகளிற்கு சென்று புலம் பெயர்ந்தவர்களை சந்திப்பதென்பது கடினமானது. அத்துடன் அதனால் கிடைக்கக்கூடிய நன்மைகளும் வரையறுக்கப்பட்ட



வையாகும். இந்த வகையில் புலம் பெயர்ந்தவர்கள் தாயகத்திற்கு அடிக்கடி வந்து செல்வது என்பது ஊக்கிவிக்கப்படுதல் வேண்டும். புலம் பெயர்ந்தவர் ஒருவர் தாயகத்திற்கு வந்து போவதன் மூலம் சுற்றுலாப்பயணி ஒருவர் இலங்கைக்கு வந்து செல்வதிலும் பார்க்க கூடுதலான பொருளாதார நன்மைகள் நாட்டிற்கு கிடைக்கின்றன என்பதனை ஏற்கனவே பார்த்தோம். (இது தொடர்பான மேலதிக விபரங்களிற்கு இந்நூலில் உள்ள நான்காவது கட்டுரையினை பார்க்கவும்.) இந்தப் பொருளாதார நன்மைகளுக்கு மேலதிகமாக புலம் பெயர்ந்தவர்கள் தாயகத்திற்கு வந்து செல்வதென்பது மேலே குறிப்பிடப்பட்ட அத்தனை வகை உறவுகளும் வளர்வதற்கு உதவுவதாக இருக்கும். குறிப்பாக வெளிநாடுகளில் பிறந்த பிள்ளைகள் தாயகத்திற்கு வந்து பார்த்து, பழகி, உறவாடி, அனுபவித்து செல்வதென்பது உறவினைப் பலப்படுத்த பலவழிகளிலும் உதவுவதாக இருக்கும்.

தமது மொழி மற்றும் கலாச்சார அடையாளத்துடன் தமது பிள்ளைகளை வளர்க்க வேண்டும் என விரும்பும் வெளிநாடுகளில் வாழும் பெற்றோர் சிலர் ஒவ்வொரு வருடமும் பாடசாலை கோடை விடுமுறையின்போது தமது பிள்ளைகளை தாய்நாட்டிற்கு கூட்டிவந்து தமது சொந்த ஊர்களில் இருக்க விடுகின்றனர். இதனால் அப்பிள்ளைகள் ஊரில் உள்ள உறவினர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளுடன் சேர்ந்து சிறிது காலம் வாழ்வதனூடே இறுக்கமான பந்தமொன்று ஏற்படுகின்றது. குறிப்பாக பிள்ளைகள் ஓரளவு சிறுவர்களாக இருக்கும்போது தாயகத்திற்கு வந்து விடுமுறையினைக் கழிக்கக் கூடியதாக இருக்குமாயின் அவர்கள் தாயகத்தில் உள்ளவர்களுடன் கூடுதலான ஈடுபாட்டுடன் சேர்ந்து போகக்கூடிய வர்களாக இருக்கின்றனர். வெளிநாடுகளில் சிறிய வீடுகளுக்குள்ளேயும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலும் முடங்கிக் கிடந்தவர்கள் தாயகத்திற்கு வந்து குளிராடைகள் ஏதுமின்றி சுதந்திரமாக விளையாடி மகிழக்கூடியவர்களாக இருக்கின்றனர். இந்த வகையில் அவர்கள் புலம்பெயர்ந்த நாடுகளிற்கு திரும்பிய பின்னர்கூட தாயகத்தில் அவர்கள் செலவு செய்த அந்த விடுமுறை நாட்கள் ஓர் இனிமையான மறக்க முடியாத அனுபவமாக அவர்கள் மனதில் பதிவதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு. இதனால் அவர்கள் மீண்டும் மீண்டும் தாய் நாட்டிற்கு வருவதற்கு ஆர்வம் காட்டுபவர்களாக இருப்பர்.

ஆனால் ஓரளவிற்கு வளர்ந்த பிள்ளைகளைப் பொறுத்தவரை அவர்கள் புலம் பெயர் நாடுகளில் உள்ள வாழ்க்கை முறைக்கு தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டவர்கள் என்ற வகையில் தாயகச் சூழல் மற்றும் வசதிகள் அவர்களிற்கு பெருமளவிற்கு ஒத்துப் போகாதவையாக இருக்கின்றன. இதனால் முதன் முதலில்

தாய்நாட்டிற்கு வளர்ந்த பிள்ளைகள் வரும்போது தாய்நாட்டு விடுமுறை இவர்களைப் பொறுத்தவரை பெருமளவிற்கு கவர்ச்சி கரமாக இருப்பதில்லை. எனவே பிள்ளைகள் சிறுபிள்ளைகளாக இருக்கும் காலம் தொடக்கம் விடுமுறை காலங்களில் தாய்நாட்டிற்கு பிள்ளைகளுடன் வருவதனை வழக்கமாக கொண்டால் பின்னர் அவர்களே விரும்பி தாயகத்திற்கு வருபவர்களாக இருப்பர்.

வேலை செய்யும் இடத்தில் லீவு கிடைக்காமை, வந்து போவது தொடர்பிலான செலவு என்பவற்றிற்கு அடுத்ததாக புலம் பெயர்ந்தவர்கள் தாயகத்திற்கு வந்து போவது தொடர்பில் தடையாக உள்ள காரணி பயமாகும். தாயகத்திற்கு வந்து செல்வது பாதுகாப் பில்லை, பல்வேறு பிரச்சனைகள் மற்றும் ஆபத்துக்கள் தமக்கு வரலாம் என்று புலம் பெயர்ந்தவர்கள் மத்தியில் குறிப்பாக இளைய தலைமுறையினர்களுக்குள்ள பயமாகும். இலங்கையில் நடக்கும் நிகழ்வுகள், கெடுபிடிகள் என்பவை பற்றி புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள ஊடகங்கள் மூலம் அவர்கள் அறிந்துள்ளனர். அத்துடன் தாயத்தினை விட்டு புலம் பெயர்ந்த நாடுகளிற்கு செல்லும் காலத்தில் ஊரிலும், வழியிலும், கொழும்பிலும் புலம்பெயர்ந்தவர்கள் பல்வேறு துன்பங்களைச் சந்தித்திருந்தனர். இதனால் நாட்டு நிலவரம் பற்றி உளரீதியான பயம் ஒன்று அவர்கள் மத்தியில் உள்ளது. இந்த வகையில் இந்தப் பயத்தினைப் போக்க நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

புலம்பெயர்ந்தவர்கள் வருவதனால் சுற்றுலாப் பயணிகளிலும் பார்க்க அதிகளவு பொருளாதார நன்மைகள் நாட்டிற்கு கிடைக் கின்றன என்பது உணரப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப் படுவது போன்ற ஊக்குவிப்புகள், இலகுவான நடைமுறைகள், வசதிகள் வரவேற்புகள் என்பன புலம் பெயர்ந்தவர்கட்கும் வழங்கப்பட வேண்டும். அத்துடன் அவர்களது பயத்தினைப் போக்க கூடிய வகையில் தகவல்கள், நிகழ்ச்சிகள் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் புலம்பெயர்ந்த நாடுகளில் மேற்கொள்ளப்படல் வேண்டும். நம்மவர்களால் நடாத்தப்படும் ஊடகங்கள், பொது அமைப்புகள் பிரயாண முகவர் நிலையங்கள், ஏற்கனவே தாயகத் திற்கு வந்து போனவர்கள் போன்றோர் இதனை மேற்கொள்ளலாம். குறிப்பாக தாயகத்தில் உள்ளோர் வெளிநாடுகளில் உள்ள தமது உறவினர் நண்பர்களை தாயகத்திற்கு வந்து செல்வது தொடர்பில் அவர்களிற்கு உள்ள பயத்தினைப் போக்கி அவர்களை தாயகத்திற்கு வந்து செல்லும்படி தூண்டுதல் வேண்டும்.

அடுத்ததாக புலம்பெயர் நாடுகளில் புலம்பெயர்ந்த நம்மவர் களை இலக்காக வைத்து தாயத்திற்கான சுற்றுலா தொடர்பில்



உல்லாசப் பிரயாணிகளை கவர்வது போன்று கண்காட்சிகள், ஊக்குவிப்பு நடவடிக்கைகள், பிரயாணப் பொதிகள் (*Package tours*) மூலமான பிரயாண ஒழுங்குகள் போன்றவை மேற்கொள்ளப்பட வேண்டும். தாயகத்திலும் வெளிநாடுகளிலும் உள்ள பொது அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சுற்றுலா நடத்துனர்கள் என்பவர்கள் இவ் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

தாயகத்திற்கு வந்து செல்பவர்கள் பெருமளவிற்கு தமது உறவினர்களைப் பார்ப்பதற்கும், தாம் வாழ்ந்த வீடுகளைப் பார்ப்பதற்கும், கோயில்களுக்குச் சென்று நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதற்கும், உறவினர்களின் வீட்டு வைபவங்களில் கலந்து கொள்வதற்குமாகவே வருகின்றனர். இவற்றுடன் நாட்டின் ஏனைய பிரதேசங்களிற்கு சுற்றுலா செல்லுதல், வரலாற்று சின்னங்களை பார்வையிடல், கலாச்சாரப்பாரம்பரிய நிகழ்வுகளில் பங்குபற்றுதல், யுத்தத்தினாலும் சுனாமியினாலும் அழிவடைந்த பிரதேசங்களைப் பார்வையிடல், சிறுவர் நல்வாழ்வு நிலையங்களுக்கு செல்லுதல், போன்றவற்றினையும் தமது பிரயாணத் திட்டத்தில் புலம்பெயர்ந் தவர்கள் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறு அமையும் போது தாயகப் பிரயாணமென்பது சந்தோசமானதாகவும், பல அனுபவங் களைப் பெற்றுத்தருவதாகவும், தாயத்துடனான உறவுகளை பலப்படுத்துவதாகவும் அமையும். இந்தவகையில் தாயகத்தில் புலம்பெயர்ந்தவர்கள் பார்க்க வேண்டிய விடயங்கள், பங்குபற்ற வேண்டிய நிகழ்வுகள் தொடர்பில் பிரச்சாரங்கள் செய்யப்பட வேண்டும். அத்துடன் இவ்வாறான இடங்களை இவர்களிற்கு கூட்டிச் சென்று காட்டக்கூடிய பிரயாண வழிகாட்டிகளுடான பிரயாண ஒழுங்கு வசதிகள் உள்நாட்டில் உருவாக்கப்பட வேண்டும். உரியமுறையில் பயிற்றப்பட்ட பிரயான வழிகாட்டிகள் இடங்களின் முக்கியத்துவத்தினையும் வரலாற்றினையும் புலம்பெயர்ந்தவர்களிற்கு குறிப்பாக இளைய தலைமுறையினர்களிற்கு விளக்கிக்கூற பெரிதும் உதவுபவர்களாக இருப்பர்.

தாயகத்திற்கு வந்து போதல் தொடர்பிலான பிரயாணத்தினை திட்டமிடுவதில் இளைய தலைமுறையினரிற்கு உரிய சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். பெற்றோர்கள் தமது தேவைகள், விருப்பு வெறுப்புகளிற்கு ஏற்ப தாயகத்திலான பிரயாணத் திட்டங்களை வகுக்கும் போது அவை பெருமளவிற்கு பிள்ளைகளின் விருப்புக்கள், தேவைகள் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்காதவையாக அமையலாம்.

அத்துடன் புலம்பெயர்ந்தவர்களிற்கு கிடைக்கத்தக்க வகையில் சுற்றுலா வழிகாட்டிகள், வரைபடங்கள், இடங்களின் முக்கியத்துவத்

தினையும், வரலாற்றினையும் விளங்கும் துண்டுப் பிரசுரங்கள் போன்றவை அச்சிட்டு வழங்கப்படல் வேண்டும். இவை புலம் பெயர்ந்தவர்களில் இளைய தலைமுறையினரை இலக்காக வைத்து அவர்களால் வாசித்து விளங்கக் கூடியமுறையில் ஆங்கிலம், டொச்சு, பிரஞ்ச்சு போன்ற மொழிகளிலும் இருத்தல் விரும்பத்தக்கது.

புலம் பெயர்ந்த நாடுகளில் பெருமளவிற்கு ஓய்வின்றி உழைக்கும் புலம்பெயர்ந்தவர்கள் தாயகத்திற்கு வந்து போவதன் மூலம் தனியே தாம் ஒரு விடுமுறையினை அனுபவிக்கின்றனர் என்பதற்கு மேலாக புலம் பெயர்ந்தவர்களிற்கும் தாயகத்திலுள்ளவர் களுக்கும் இடையிலான இறுக்கமான உறவு தொடர்வது தொடர்பில் முக்கிய பணியினை ஆற்றுகின்றனர்.

இந்த வகையில் புலம் பெயர்ந்தவர்கள் அடிக்கடி தாயகத்திற்கு தமது பிள்ளைகளுடன் வந்து போவதனை வசதிப்படுத்த சம்மந்தப் பட்டவர்கள் எல்லோரும் தம்மாலான பங்கினைச் செய்ய வேண்டும். அதனூடே புலம்பெயர்ந்தவர்களுக்கும் தாயகத் திலுள்ளவர் களுக்குமான உறவினைப் பலப்படுத்த முடியும். இதன் மூலம் புலம் பெயர்ந்தவர்களின் தாயகத்திற்கான பொருளாதாரப் பங்களிப்புகள் எதிர்காலத்தில் குறைவடைவதனைத் தணித்துக் கொள்ள முடியும்.

# உறவினை உறுதிப்படுத்தும் தொடர்பாடல்

புலம்பெயர்ந்தவர்கள் அடிக்கடி தாயகத்திற்கு வந்து போவது தாயகத்துடனான அவர்களது உறவினைப்பலப்படுத்த பெரிதும் உதவுவதாக இருக்கும். எவ்வாறாயினும் புலம்பெயர்ந்தவர்கள் எல்லோராலும் தாயகத்திற்கு அடிக்கடி வந்து செல்வது என்பது சாத்தியமற்றதாயிருக்கும். இந்நிலையில் தாயகத்தில் உள்ளவர்களும் புலம்பெயர்ந்தவர்களும் ஏனைய வழிகளில் அடிக்கடி தொடர்பு கொள்வதன் மூலமும் இரு சாரார்களுக்கிடையிலுமான உறவு வலுவடையும். அவ்வாறான தொடர்பு ஒன்று இருக்கும்போது நாட்டிற்கு வரவேண்டும், வந்து தமது உறவினர் நண்பர்களைப் பார்க்கவேண்டும் என்ற ஆர்வமும் புலம் பெயர்ந்தவர்களிடையே தோன்றும்.

இவ்வாறான தொடர்புகளானவை பல்வேறு முறைகளில் மேற் கொள்ளப்பட முடியும். அதில் முக்கியமானது நாமெல்லோரும் நன்கறிந்த தொலைபேசி மூலமான தொடர்பாகும். புலம் பெயர்ந்த வர்கள் தமது வருமானத்தில் கணிசமானதொரு பகுதியினை தாயகத் திலுள்ள உறவினர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொள்வது தொடர்பில் செலவு செய்பவர்களாக இருக்கின்றனர். ஒரு காலத்தில் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு தொலைபேசி எடுப்பது என்பது மிகவும் செலவு கூடியதொரு விடயமாகும். இதனால் தாயகத்தில் இருப்பவர்கள் வெளிநாடுகளில் உள்ளவர்களுன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடுவது மிகவும் குறைவு. புலம் பெயர்ந்தவர்களே தொலைபேசித் தொடர்பினை ஏற்படுத்தி தாயகத்தில் உள்ளவர்களுடன் உரையாடுவதனை வழக்கமாக கொண்டுள்ளனர். ஆனால் தற்போது இணையத் தினூடான தொலைபேசி தொடர்பு முறைகள் அறிமுகமாகியுள்ள நிலையில் மிகச் சிறிய செலவுடன் இலங்கையிலிருந்து தொலைபேசித் தொடர்புகளை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது.

வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி எடுப்பதிலும் பார்க்க தாயகத்திலிருந்து தொடர்பு கொண்டு உரையாடுவது சிலவேளைகளில் சிக்கனமானதாக மாறியுள்ளது. ஆனாலும் கூட வழமையாக புலம் பெயர்ந்தவர்களே தொலைபேசித் தொடர்பினை ஏற்படுத்தி உரையாடுவது வழக்கம் என்ற வகையில் அவர்களே தொலைபேசித் தொடர்புகளை ஏற்படுத்தி கதைக்கவேண்டும் என்றதொரு எண்ணப்பாடு தாயகத்தில் உள்ளவர்களிற்கிடையே காணப்படு கின்றது. புலம்பெயர்ந்த உறவினர், நண்பர்கள் நீண்டகாலமாக தம்முடன் தொடர்பு கொள்ளவில்லை என்று தாயகத்தில் உள்ள பலர் பொதுவாகக் குறைபட்டுக் கொள்வதுண்டு. ஆனால் தாயகத்தில் உள்ளவர்கள் அவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி உரையாடு வதற்கு பெருமளவிற்கு முன்வருவதில்லை. தற்போது தொடர்பாடல் நிலையங்களில் தேசிய அளவிலான தொலைபேசி தொடர்புகளிற்கு அறவிடப்படும் கட்டணத்திலும் பார்க்க குறைந்த கட்டணத்தில் இணையத்தினூடான சர்வதேச அழைப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் தாயகத்தில் உள்ள பலர் வெளிநாடுகளில் உள்ளவர்கள் அளவிற்கு வேலைப்பளு உடையவர்கள் என்று சொல்வதற்குமில்லை.

புலம்பெயர்ந்தவர்களுடனான தொடர்புகள் என்பது நீண்ட காலத்திற்கு உறவுகள் தொடர வழிசெய்து அதனூடே பல்வேறு பொருளாதார நன்மைகளும் ஏனைய நன்மைகளும் தாயகத்திற்கு கிடைக்க வழி செய்யும் என்பதனை ஞாபகத்தில் கொள்ளல் வேண்டும். இந்த வகையில் புலம் பெயர்ந்தவர்களுடன் தாயகத்தில் உள்ளவர்கள் அடிக்கடி தொடர்பு கொண்டு சிறந்த உறவினைப் பேணுவதுடன் அவர்களும் தாயகத்தில் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளும் வகையில் புலம் பெயர்ந்தவர்களையும் ஊக்கப்படுத்த வேண்டும். தற்போது தொலைபேசித் தொடர்புகளானவை பெருமளவிற்கு வளர்ந்தவர்களுக்கிடையே மேற்கொள்ளப்படுவன வாகவே காணப்படுகின்றன. இளைய தலைமுறையினர்கள் இந்த தொலைபேசி தொடர்பில் ஈடுபடும் வகையில் ஊக்குவிக்கப்படல் வேண்டும். புலம் பெயர்ந்து வாழும் இளைய தலைமுறை யினர்கட்கும் இங்குள்ள இளைய தலைமுறையினர் கட்குமிடையே கிரமமான தொடர்பு அவசியமாகும்.

புலம் பெயர்ந்தவர்களையும் தாயகத்திலுள்ளவர்களையும் இணைக்கும் முக்கியதொரு மார்க்கமாக தபால் மூலமான தொடர்பு விளங்கி வந்தது. குறிப்பாக யுத்தம் நிலவிய காலங்களில் வடக்கு கிழக்கில் உள்ளவர்களுடன் தொலைபேசி தொடர்பு கொள்வ தென்பது இயலாததொன்றாக இருந்ததொரு நிலையில் கடிதங்கள்



முக்கியத்துவம் பெற்று விளங்கின. ஆனால் தற்போது கடிதங்களின் முக்கியத்துவம் பெருமளவிற்கு குறைவடைந்துவரும் நிலை காணப்படுகின்றது. குறிப்பாக புலம் பெயர்ந்தவர்களிடையே கடிதம் எழுதும் பழக்கம் வெகுவாகக் குறைவடைந்து வருகின்றது. அதற்கு முக்கிய காரணம் நேரமின்மையும், மின்னஞ்சல், இணையம், இணைய தொலைபேசி போன்றவற்றின் அறிமுகமுமாகும். எவ்வாறாயினும் கடிதங்களை முற்று முழுதாக புறக்கணித்து விடமுடியாது. தொலைபேசியில் உரையாடுவதிலும் பார்க்க பல்வேறு விடயங்களை கடிதங்களில் அழகாக எடுத்துக் கூற முடியும். இதனால்தான் பலரது கடிதங்கள் இலக்கியங்களாகவும் நூல்களா கவும் மாற்றப்பட்டு காலத்தால் நிலைத்து நிற்கின்றன. இந்த வகையில் கடிதத் தொடர்பு என்பது கைவிடப்படாமல் தொடரப்படல் வேண்டும். குறிப்பாக தாயத்திலுள்ளவர்கள் புலம்பெயர்ந்தவர்களிற்கு கடிதங்கள் எழுதுவதனை வழக்கமாகக் கொள்ளல் வேண்டும். அவற்றில் தனியே நலன் விசாரிப்புக்களையும், குடும்ப செய்தி களையும் மட்டும் எழுதாமல் தாயக நிகழ்வுகள், வரலாற்றுக் குறிப்புக்கள், கருத்துக்கள், சிந்தனைகள் போன்றவையெல்லாம் பகிரப்படல் வேண்டும். இந்தக் கடிதங்களிற்கு புலம்பெயர்ந் தவர்களிடமிருந்து கிரமமான பதில் கிடைக்குமென்று சொல்வதற் கில்லை. என்றாலும்கூட தாயகத்திலுள்ளவர்கள் கிரமமாக கடிதம் எழுதுவதனை வழக்கமாகக் கொள்ளல் வேண்டும். இவ்வாறு எழுதப்படும் கடிதங்கள் புலம்பெயர்ந்தவர்களால் நிட்சயமாக வாசிக்கப்படும் என்பதுடன் அவற்றிலுள்ள புது விடயங்கள் மற்றவர்களுடன் பகிரப்படவும் கூடும்.

வாழ்த்து மடல்களும் உறவினைப் பலப்படுத்த பெரிதும் உதவுபவையாகும். வாழ்த்துமடல்கள் பெருமளவு செய்திகளை தம்மகத்தே கொண்டிராதபோதும் அவை உணர்வுபூர்வமாக பெறபவரின் மனதினைத் தொடக்கூடிய சக்தி கொண்டவையாகும். வாழ்த்து மடல்கள், நன்றி மடல்கள், இரங்கல் மடல்கள் என்பவற்றினை அனுப்பும் வழக்கம் ஒப்பீட்டு ரீதியில் நம்மிடையே குறைவானதொன்றாகும். ஆனால் நம்மவர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் வாழும் மக்கள் இவற்றிற்கு மிக முக்கியத்துவம் கொடுக்கும் பழக்கம் கொண்டவர்கள். இந்த வகையில் அந்நாட்டுச் சூழலில் படிக்கும் புலம்பெயர்ந்த இளைய தலைமுறையினர்களும் இதற்கு பெருமளவிற்கு பழக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். எனவே வாழ்த்துமடல்கள், நன்றிமடல்கள் என்பன புலம்பெயர்ந்து வாழும் இளைய தலைமுறையினர்களுடனான நெருக்கத்தினை அதிகரிக்க உதவும். வாழ்த்து மடல்கள் அனுப்பும் வழக்கமானது தனியே பண்டிகைகள், பிறந்த நாட்கள் போன்றவற்றிற்கு

மட்டுமல்லாது திருமணங்கள், திருமண நாட்கள், குழந்தைப்பேறு, பரீட்சை வெற்றிகள் மற்றும் நன்றி தெரிவிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் போன்றவை தொடர்பிலும் பின்பற்றப்படலாம். இவை பெருமளவிற்கு ஓர் மேற்கத்தைய கலாச்சார பின்னணியினைக் கொண்டவையாக இருக்கின்றபோதும் அதனூடே புலம்பெயர்ந்த வர்களிற்கும் தாயகத்தில் உள்ளவர்களிற்கும் இடையிலான உறவு பலப்பட்டு அதன் மூலம் தாயக மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்ற வகையில் அவற்றினைக் கடைப்பிடிப்பதில் தவறொன்று மில்லை.

இன்று தொடர்பாடலில் மிகவும் முக்கியம் வகிப்பவை மின்னஞ்சல், இணைத்தொடர்புகள், மற்றும் கையடக்கத் தொலைபேசியினூடாக அனுப்பப்படும் குறுஞ்செய்திகள் *(SMS)* என்பவையாகும். தகவல் தொழிநுட்பத்தின் அபரித வளர்ச்சியின் அங்கங்களான இவை பரந்து பட்ட உலகத்தை பூகோளக் கிராமமாக ஆக்கியுள்ளன. பூகோளக்கிராமம் என்ற எண்ணக்கருவானது புவியியல் தூரத்தினால் தொடர்புகள் குறைந்து வேறுபட்டுக் கிடந்த மக்களை தகவல்த் தொழிநுட்பத்தினூடான தொடர்புகள் மூலமாக ஒருங்கிணைத்தல் என்பதன் அடிப்படையில் தோன்றியதாகும். இந்த வகையில் புவியியல் ரீதியாக அதிக தூரத்திலுள்ள நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்களையும் தாயத்திலுள்ளவர்களையும் இணைப்பதற்கு இந்தத் தகவல் தொழில் நுட்பம் பெரிதும் உதவுவதொன்றாகக் காணப்படுகின்றது.

எனவே புலம்பெயர்ந்தவர்களுடன் தொடர்புகளைப் பேணுவ தற்கு மின்னஞ்சல், இணையம், மற்றும் குறுஞ்செய்திகள் என்பவற்றினை உரிய முறையில் பயன்படுத்துவது அவசியமாகும். குறிப்பாக இளைய தலைமுறையினர்களிற்கிடையே தொடர்புகளைப் பேணுவதற்காக இந்த தகவல்தொழில்நுட்பம் பேருதவியாக இருக்கும். இன்று நமது இளைஞர்கள் தேவை இருக்கிறதோ இல்லையோ விதம்விதமான செல்லிடத் தொலைபேசிகளை வைத்திருப்பதனை அவசியமானதொன்று என்று கருதுகின்றனர். இவ்விளைஞர்கள் இக் செல்லிடத்தொலைபேசியிலுள்ள குறுஞ்செய்தி அனுப்பும் வசதியினை பயன்படுத்தி புலம்பெயர்ந்தவர்களுடன் சரியான தொடர்பாடல் ஒன்றினை மேற்கொள்ளல் வேண்டும். குறிப்பாக அங்குள்ள இளைய தலைமுறையினருடன் கிரமமான தொடர்புகளை ஏற்படுத்தி தமக்கிடையே இருக்கும் இரத்த ரீதியான உறவிற்கு மேலாக நட்பு ரீதியான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதுடன் இரு சாராரிற்கும் பயன்தரத்தக்க தகவல்களை பரிமாறிக்கொள்ளுதல் வேண்டும்.



இதேபோலத்தான் மின்னஞ்சல் மற்றும் இணைய மூலமான தொடர்புகளும் உறவினைப் பலப்படுத்த மிகவும் பயனுள்ள வையாகும். இன்று பலர் இணையத் தொடர்புடனான கணினிகளை வீடுகளில் வைத்துள்ளார்கள். அதனைத் தவிர சிறிய நகரங்கள் உட்பட பெரும்பாலான நகரங்களில் இணைய நிலையங்கள் உள்ளன. வீட்டில், பாடசாலைகளில் மற்றும் வேலைத்தளங்களில் கணினி மற்றும் இணையத் தொடர்பு வசதியில்லாதவர்கள் இந்த இணைய நிலையங்களைப் பயன்படுத்தி புலம்பெயர்ந்தவர்களுடன் கிரமமாகத் தொடர்பினைப் பேணல் வேண்டும்.

தகவல் தொழில்நுட்ப அறிவென்பது இன்று மிகவும் அவசியமாகும். சமூகம் ஒன்றின் வளர்ச்சி தொடர்பில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் வீதாசாரம் *(Literacy Rate)* என்பது முக்கியத்துவம் பெறுவதுபோல் தற்போது கணினியினை கையாளத் தெரிந்தோர் வீதம் *(Computeracy Rate)* என்பது முக்கியத்துவம் பெற்று வருகின்றது. இந்த வகையில் கிராமங்கள் தோறும் கிராம முன்னேற்றச் சங்கம் போன்ற சமூக நிறுவனங்களில் கணினி மற்றும் இணைய வசதிகள் ஏற்படுத்தப்படுவதுடன் கணினியினைப் பயன்படுத்துவது தொடர்பில் வயது வேறுபாடின்றி எல்லோரும் அறிந்திருத்தல் அவசியமாகும்.

பெருமளவிற்கு தமிழிலேயே தற்போது கணினியினைக் கையாளக்கூடிய வசதிகள் வந்துவிட்டன என்றவகையில் ஆங்கிலம் மூலம் மட்டுமல்லாது தமிழ் மொழியினூடே கையாளக்கூடிய வகையில் கணினி அமைப்புகள் கிராமங்கள்தோறும் உருவாக் கப்படல் வேண்டும். இந்த கணினி வசதிகள் மற்றும் கணினியினைப் பயன்படுத்துவது தொடர்பிலான கற்பித்தல் நடவடிக்கைகளிற்கு புலம்பெயர்ந்தவர்கள் உதவவேண்டும் இது புலம் பெயர்ந்தவர் களுடனான தொடர்புகளை பேணுவதற்கு மட்டுமன்றி மேலும் பல்வேறு வகைகளில் இன்றைய தகவல் யுகத்தில் கணினிகளை தாயக மக்கள் பயன்படுத்த உதவுபவையாக அமையும்.

இவ்வாறான சாத்தியமான ஒவ்வொரு தொடர்பாடல் முறையினையும் பயன்படுத்தி புலம்பெயர்ந்தவர்களும் தாயகத் திலுள்ளவர்களும் கிரமமான தொடர்புகளைப் பேணல் வேண்டும். அப்போதுதான் புலம் பெயர்ந்தவர்களுடனான தொடர்பு பல மடையும். அவ்வாறு தொடரும் உறவானது புலம்பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புகள் எதிர்காலத்தில் குறைவடைவதனைத் தணிக்க உதவும்.

# உறவினைப் பலப்படுத்தும் ஊடகங்கள்

புலம்பெயர்ந்தவர்களுக்கும் தாயகத்திற்குமிடையிலான பிணைப்பினை கட்டிக்காப்பதிலும் வளர்ப்பதிலும் ஊடகங்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். தாயத்தில் நடக்கும் நிகழ்வுகளை உடனுக்குடன் புலம்பெயர்ந்தவர்களுக்கு தருவதனூடாக ஊடகங்கள் இந்தப் பணியினை மேற்கொள்கின்றன.

இதனால் தாயகத்திற்கும் அவர்களுக்குமிடையிலான உறவுகள் பலமடைபவையாகக் காணப்படுகின்றன. அதனூடாக புலம் பெயர்ந்தவர்களுக்கும் தாயகத்திற்குமிடையிலான பொருளாதார உறவுகளும் வலுவடைபவையாக உள்ளன.

உதாரணமாக அண்மையில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவுகள் பற்றிய செய்திகளை புலம் பெயர்ந்தவர்களுக்கு எடுத்துச் செல்வதில் ஊடகங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. ஊடகங்கள் மூலம் தாயகத்தின் பல பாகங்களில் நடந்த பேரழிவினை நன்கறிந்து கொண்ட புலம்பெயர்ந்தவர்கள் பேரளவான பொருளாதார மற்றும் ஏனைய உதவிகளை சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்போதும் வழங்கி வருபவர்களாக உள்ளனர்.

இன்று புலம்பெயர்ந்த நம்மவர்கள் வாழும் நாடுகளில் புலம்பெயர்ந்தவர்களை இலக்காகக் கொண்டு பல்வேறு தமிழ் ஊடகங்கள் இயங்கிவருகின்றன. புலம்பெயர்ந்த நம்மவர்களால் நடாத் தப்படும் இந்த ஊடகங்களானவை பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலிகள், தொலைக்காட்சி நிலையங்கள், இணையச் செய்தித் தளங்கள், இணையச் சஞ்சிகைகள் என விரிந்து செல்கின்றன. புலம்பெயர்ந்த நம்மவர்கள் அதிகமாக வாழும் கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிகைகள், வானொலி நிலையங்கள், தொலைக்காட்சி நிலையங்கள் என்பன இயங்கி வருகின்றன. இதற்கு மேலதிகமாக சில ஊடகங்கள் தனியொரு நாட்டிற்கென்று இல்லாமல் புலம்பெயர்ந்தவர்கள் வாழும் பல நாடுகளினை இலக்காகக் கொண்டு வெளிவருகின்றன. இந்த



ஊடகங்கள் எல்லாமே தாயகச் செய்திகளுக்கும் புலம்பெயர் நாடுகளில் புலம் பெயர் வாழ்வு தொடர்பான செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பனவாக இருக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் தாயகச் செய்திகள் மற்றும் ஒளிப்படங்களை தாயகத்திலுள்ள வர்களிலும் பார்க்க விரைவாகவும், வரிவாகவும் இந்தச் செய்தி ஊடகங்கள் மூலம் புலம்பெயர்ந்தவர்கள் அறிந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றனர். செய்திகள் மட்டுமின்றி நம்மவர்கள் தொடர்பான நிகழ்வுகள், கலை, கலாச்சாரம், மொழி, பொருளாதாரம் மற்றும் அரசியல் போன்ற பல்வேறுபட்ட விடயங்களிற்கும் முக்கியத்துவம் கொடுத்து இவை தொடர்பில் புலம்பெயர்ந்தவர்களின் பங்களிப்பினை அதிகரிக்க உதவுபவையாக இந்த ஊடகங்கள் விளங்குகின்றன.

புலம்பெயர் நாடுகளில் உள்ள சில செய்திப் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் காசுக்கு விற்கப்படுபவையாகவன்றி இலவசமாக வழங்கப்படுபவையாக இருக்கின்றன. இந்தவகையில் புலம்பெயர்ந்தவர்கள் கட்டணம் ஏதும் செலுத்தாமல் தாயக மற்றும் புலம்பெயர் வாழ்வு தொடர்பான செய்திகளையறிந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றனர். இந்த இலவச பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் அவற்றில் பிரசுரிப்பதற்கு பெற்றுக்கொள்ளும் விளம்பரக் கட்டணத்தினை வருமான மார்க்கமாகக் கொண்டு செயற்படுகின்றன.

இவற்றினைத் தவிர பல தமிழ் இணைய செய்தி தளங்கள், இணைய சஞ்சிகைகள், இணைய வானொலிகள், நிறுவனம் சார் இணையத்தளங்கள் என்பன புலம்பெயர்ந்தவர்களையும் தாயகத் திலுள்ளவர்களையும் இலக்காகக் கொண்டு செயற்படுகின்றன. இவற்றில் நம்மவர்கள் அக்கறை கொள்ளக்கூடிய செய்திகள், நிகழ்வுகள், கட்டுரைகள், படத்தொகுப்புகள் எனப்பல்வேறுபட்ட விடயங்கள் வெளியிடப்படுகின்றன. இவ்வாறு நூற்றுக்கு மேற்பட்ட இணையத் தளங்கள் நம்மவர்களால் கொண்டு நடாத்தப்பட்டு வருகின்றன. இணைய வசதிகொண்ட உலகெங்கும் வாழும் நம்மவர்கள் இந்த இணையத்தளங்கள் மூலம் நமது மக்களுடன் தொடர்புடைய பல்தரப்பட்ட விடயங்களை அறிந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றனர். இந்த வகையில் உலகெங்கும் வாழும் நம்மவர்கள் ஒன்றுபட இந்த இணையத்தளங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஏனைய ஊடகங்களைப் போல் அன்றி இணைய மானது நம்மவர்கள் குவிந்து வாழும் இடங்களை மட்டுமன்றி உலகின் மூலை முடுக்குகளையெல்லாம் இணைத்துள்ளது என்ற வகையில் உலகத்தில் எப்பாகத்திலிருந்தும் இந்த இணையத் தளங்களை பார்த்துப் பயன்படுத்தக்கூடியதாக உள்ளது. இதனால்

உலகின் பல பாகங்களில் ஆங்காங்கே சிதறுண்டு வாழும் நமது மக்கள் கூட இவ்விணையத்தளங்களினைப் பார்த்து தாயகச் செய்திகளையும் ஏனைய விடயங்களையும் உடனுக்குடன் அறிந்து கொள்ளக்கூடியவர்ளாக இருக்கின்றனர்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், வானொலி நிகழ்ச்சிகள் என்பவற்றைப் பார்க்க, கேட்க நேரமில்லாதவர்களும், பத்திரிகைகள், சஞ்சிகைகளைப் பெற்று வாசிக்க நேரம் மற்றும் வசதியில்லாதவர்களும் கூட இந்த இணையத்தளங்கள் மூலம் பலதரப்பட்ட விடயங்களை அறிந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றனர். புலம்பெயர் நாடுகளில் வீட்டிலோ அல்லது வேலைத்தளங்களிலோ பல்வேறுபட்ட தேவைகளின் நிமிர்த்தம் நாளாந்தம் கணினியினைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு கணினியினைப் பயன் படுத்தும் போது இந்த இணையச் செய்தி தளங்களைப் பார்த்து செய்திகளை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

புலம்பெயர் நாடுகளில் இளைய தலைமுறையினர் கணினியினை அதிகமாகப் பயன்படுத்தும் வழக்கம் கொண்டவர்கள் என்ற வகையில் இவர்களும் இந்த இணையச் செய்தித் தளங்களைப் பார்த்து தாயக நிகழ்வுகளை அறிந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றனர். தமிழில் மட்டுமல்லாது ஆங்கிலத்திலும் இணையச் செய்தித்தளங்கள் காணப்படுகின்றன. இதனால் தமிழினை உரிய முறையில் வாசித்து, விளங்கிக் கொள்ள முடியாத புலம்பெயர் நாடுகளில் வாழும் இளைய தலைமுறையினரையும் கவரக்கூடிய விதத்தில் இந்த இணையத்தளங்கள் செயற்படுகின்றன. வெவ்வேறு மொழி பேசப்படும் நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்தவர்கள் அந்நாட்டு மொழிகளிலும் இணையத்தளங்களை நடத்திவருகின்றனர். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன், டச்சு, டெனிஸ் போன்ற மொழிகளில் நம்மவர்களால் நடத்தப்படும் இணையத்தளங்கள் உள்ளன. போதிய தமிழறிவு இல்லாத வெளிநாடுகளில் வாழும் நமது இளைய தலைமுறையினரும் வெளிநாட்டவர்களும் இவ் இணையத் தளங்களிற்கு விஜயம் செய்து நம்மவர்கள் தொடர்பான பல்வேறு பட்ட விடயங்களை அறிந்து கொள்ள இவை பேருதவியாக இருக்கின்றன.

புலம்பெயர் நாடுகளில் நம்மவர்களால் நடாத்தப்படும் ஊடகங்களிற்கு மேலதிகமாக இலங்கையில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்ற அச்சு ஊடகங்களும் வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் இணையத்தளங்கள் போன்ற இலத்திரனியல் ஊடகங்களும் புலம்பெயர் நாடுகளில் வாழும் நமது மக்களைச் சென்றடைகின்றன. தாயகத்தில் வெளிவரும் பெரும்பாலான பிரபல்ய



பத்திரிகைகளின் வார வெளியீடுகள் மற்றும் சஞ்சிகைகள் என்பன புலம்பெயர் நாடுகளிற்கு விமானம் மூலம் அனுப்பப்படுகின்றன. இந்தப் பத்திரிகைகளில் சில புலம்பெயர்ந்தவர்களிற்கென சர்வதேச பதிப்பு என்ற பெயரில் குறிப்பிட்ட வாரத்தில் இடம்பெற்ற முக்கிய செய்திகளை உள்ளடக்கிய வகையில் விசேட பக்கங்களைக் கொண்டிருக்கின்றன. இவற்றினைத் தவிர புலம்பெயர் வாழ்வு தொடர்பாக புலம்பெயர்ந்தவகளால் எழுதப்படும் கட்டுரைகள், செய்திக்குறிப்புகள் என்பவற்றிற்கென தனியாக பக்கங்களை ஒதுக்கும் பத்திரிகைகளும் உள்ளன. இலங்கையிலிருந்து ஒலிபரப்பாகும் வானொலி நிகழ்ச்சிகள் சிலவற்றினை இணையத்தினூடாக உலகெங்கும் கேட்கக்கூடியதாக இருக்கின்றது. இவற்றிலும் புலம்பெயர்ந்தவர்களை கவரும் வகையிலான நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன.

புலம்பெயர்ந்தவர்களை சென்றடையும் இந்த ஊடகங்கள் அவை உள்நாட்டிலிருந்து வெளிவருபவையாக இருந்தாலும் சரி புலம்பெயர் நாடுகளிலிருந்து வெளிவருபவையாக இருந்தாலும் சரி நமது மக்களின் அக்கறைக்குட்பட்ட செய்திகள், நிகழ்வுகள், கட்டுரைகள், விவரணங்கள் போன்ற பல விடயங்களைத் தாங்கி வருகின்றன. இதனால் இவற்றினை பார்த்து கேட்டு வாசித்து பயன்படுத்தும் நம்மக்கள் அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் தாயக உணர்வுடன் வாழ்பவர்களாக இருக்கின்றனர். இந்த வகையில் நம்மக்கள் இன்று வெவ்வேறுபட்ட நாடுகளில் வெவ்வேறுபட்ட மொழிகளில் பேசிக்கொண்டு வேறுபட்ட கலாச்சார பின்னணியினைக் கொண்ட மக்களிடையே வாழ்ந்து வந்தாலும் நமது மொழி, கலாச்சாரம், வாழ்க்கை முறை, வரலாறு, தாயகம், இனம், சமயம் போன்றவற்றினை மறக்காமல் வாழ இந்த ஊடகங்கள் பெரும் பங்காற்றுகின்றன. இவ்வாறான இந்த உணர்வுடனும் அடையாளத்துடனுமான வாழ்வு என்பது புலம்பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புகள் குறையாமல் இருப்பதற்கு அவசியமானதாகும்.

எவ்வாறாயினும் புலம்பெயர்ந்தவர்களை இலக்காகக் கொண்ட பெரும்பாலான இந்த ஊடகங்கள் பெருமளவிற்கு புலம்பெயர்ந்து வாழும் தற்போதைய தலைமுறையினை இலக்காகக் கொண்டே செயற்படுகின்றன. இன்னொரு வகையில் கூறுவதானால் புலம்பெயர் நாடுகளில் வாழும் நமது இளைய தலைமுறையினர் இந்த ஊடகங்கள் மீது தமது கவனத்தினை பெரிதும் திருப்பாதகவர்களாக இருக்கின்றனர். இந்தவகையில் இந்த இளைய தலைமுறையினரைக் கவரும் விதத்தில் அவர்களையும் இலக்காகக் கொண்டு இந்த ஊடகங்கள் செயற்படுவது அவசியமாகின்றது. ஏனெனில் இந்த இளைய

தலைமுறையினர் தாய்நாடு தொடர்பிலும் நமது கலை கலாச்சாரம், மொழி பண்பாடு போன்றவற்றிலும் அக்கறை கொள்வதென்பது எதிர்காலத்திலும் புலம்பெயர்ந்தவர்களிற்கும் தாயகத்திற்கு மிடையிலான உறவுகள் தொடர்வதற்கு குறிப்பாக பொருளாதார உறவுகள் தொடர்வதற்கு அவசியமானதாகும்.

இந்த வகையில் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் நமது இளைய தலைமுறையினரையும் இலக்காகக் கொண்டு இந்த ஊடகங்கள் செயற்படுவது அவசியமாகும். அத்துடன் வெளிநாடுகளில் வாழும் நமது இளைய தலைமுறையினரை இலக்காகக் கொண்ட புதிய ஊடகங்கள் உருவாக்கப்பட வேண்டி ஏற்படலாம். அவற்றினை நிர்வகிப்பதிலும் பங்களிப்புக்கள் வழங்குவதிலும் இளைய தலைமுறையினருக்கு முக்கிய பங்கு வழங்க வேண்டும். குறிப்பாக அந்த நாடுகளில் பிறந்து வளர்ந்த அந்நாட்டு இளம் சந்ததியினரின் விருப்பு வெறுப்புகள், மனப்பாங்குகள் போன்றவற்றினை நன்கறிந்த அதே நேரத்தில் நமது கலை கலாச்சார மொழி மற்றும் வரலாற்று அறிவினைக் கொண்ட இளம் தலைமுறையினர் அடையாளம் காணப்பட்டு அப்பதவிகளுக்கு நியமிக்கப்படல் வேண்டும். தேவையுள்ள இடங்களில் தமிழில் மட்டுமல்லாது புலம்பெயர்ந்து வாழும் நமது இளைய தலைமுறையினர்களுக்கு நன்கு பழக்கப்பட்ட மொழிகளிலும் இந்த ஊடகங்கள் வெளிவர வேண்டும். தமிழ் அச்சு ஊடகங்கள் இம்மொழிகளிற்கு சில பக்கங்களை ஒதுக்கலாம். அதேபோல் வானொலிகள் மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள் இம்மொழியிலான நிகழ்ச்சிகளிற்கு குறிப்பிட்ட நேரத்தினை ஒதுக்கலாம்.

இவ்வாறு புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் நமது இளைய தலைமுறையினரை இலக்காகக் கொண்டு நம்மவர்களது ஊடகங்கள் செயற்படல் என்பது தாயகத்திற்கான அவர்களது எதிர்கால பொருளாதார பங்களிப்புக்கள் குறைவதனை தவிர்த்துக் கொள்வதற்கு அவசியமானது என்பது மட்டுமன்றி இந்த ஊடகங்கள் தமது எதிர்கால இருப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் அவசிய மாகும்.

# உறவினைக் கட்டிக்காக்கும் சமூக நிறுவனங்களும் நிகழ்வுகளும்

புலம் பெயர்ந்தவர்களிற்கும் தாயகத்திற்குமிடையிலான உறவினைக் கட்டிக்காப்பதில் புலம்பெயர்ந்த நாடுகளில் நம்மவர் களால் நடாத்தப்படும் சமூக நிறுவனங்களும், சமூக நிகழ்வுகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை நமது கலை கலாச்சார, சமய மொழி மற்றும் தாயக உணர்வினைக் கட்டிக்காப் பதினூடே இந்தப் பங்களிப்பினைச் செய்கின்றன. இவ்வாறான செயற்பாடுகள் புலம்பெயர்ந்தவர்கள் தமது வரலாற்றுப் பின்னணி யினை மறக்காமல் வாழ உதவுகின்றது. இதனால் புலம்பெயர் நாடுகளில் நம்மவர்கள் ஓர் தனித்துவ அடையாளத்துடன் வாழ முற்படுவதுடன் தாயகத்து டனான இறுக்கமான உறவினை பேணக் கூடியவர்களாக உள்ளனர். இதன் மூலம் புலம்பெயர்ந்தவர்களின் தாயகத்தினுடனான பொருளாதார உறவுகளும் பலமடைவனவாகவுள்ளன.

புலம்பெயர்ந்த நாடுகளில் விரைவு வாழ்க்கையொன்றிற்கு தம்மைப் பழக்கப்படுத்திவிட்ட புலம்பெயர்ந்தவர்களை இந்த சமூக நிறுவனங்களும், சமூக நிகழ்வுகளும் ஒரு பகுதி நேரத்தினை தமது கலை கலாச்சார, சமய மொழி மற்றும் தாயக செயற்பாடுகள் தொடர்பில் செலவிட வழிசெய்கின்றன.

திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள் போன்ற தனிப்பட்டவர்களால் நடாத்தப்படும் நிகழ்வுகள் தொடக்கம் புத்தக வெளியீட்டு விழாக்கள், கலை, கலாச்சார நிகழ்வுகள், அரசியல் கூட்டங்கள் மற்றும் ஊாவலங்கள், பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல்கள், இலக்கிய விழாக்கள், ஆண்டு விழாக்கள், கோயில்த் திருவிழாக்கள், ஊர் ஒன்றுகூடல்கள், விளையாட்டுப்போட்டிகள், வாணிப விழாக்கள் போன்ற பல்வேறு நிகழ்வுகள் புலம்பெயர்ந்த நாடுகளில் நம்மவர்களால் நடாத்தப்படுகின்றன.

கோயில்கள், அரசியல் அமைப்புக்கள், இலக்கிய மன்றங்கள், உதவு நிறுவனங்கள், தமிழ்ப்பாடசாலைகள், நாடக மன்றங்கள்,

சினிமா தயாரிப்பு நிறுவனங்கள், நாட்டியக் கல்லூரிகள், பழைய மாணவர் சங்கங்கள், கிராம முன்னேற்ற சங்கங்கள், வணிக மன்றங்கள், விளையாட்டுக் கழகங்கள் போன்ற பல்தரப்பட்ட பொது அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களும் நம்மவர்களால் புலம்பெயர்ந்த நாடுகளில் கொண்டு நடாத்தப்படுகின்றன.

புலம்பெயர்ந்த நம்மவர்கள் ஆரம்ப காலங்களில் இந்த நாடுகளிற்கு புகலிடம் தேடிச் சென்றபோது பெருமளவிற்கு தமது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டு வாழ்பவர்களாக இருந்தனர். பின்னர் காலம் செல்லச் செல்ல புலம்பெயர்ந்த நம்மவர்களின் எண்ணிக்கை இந்த நாடுகளில் அதிகரித்துச் சென்றபோது அவர்களது சமூகத்தேவைகளும் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கின. குறிப்பாக புலம்பெயர்ந்தவர்கள் அந்த நாடுகளை தமது வாழ்விடமாகக் கொண்டு வாழத்தொடங்கிய போது பல சமூக நிறுவனங்களை தோற்றுவித்து நடாத்தத் தொடங்கினர். அத்துடன் பல சமூக நிகழ்வுகளையும் நடாத்த முற்பட்டனர். புலம்பெயர்ந்தவர்கள் அதிகமாகவும், செறிவாகவும் வாழும் ரொறண்டோ, லண்டன், பரீஸ், சிட்னி, மெல்போன் போன்ற இடங்களில் நம்மவர்களால் நடாத்தப்படும் சமூக நிறுவனங்களும் சமூக நிகழ்வுகளும் அதிகமாகக் காணப்படுகின்றன.

இந்த சமூக நிறுவனங்கள் மற்றும் நிகழ்வுகள் என்பவற்றின் நோக்கங்கள் தனியே புலம்பெயர்ந்தவர்களிற்கு பயன்படுவது மாத்திரமன்றி தாயகத்தில் உள்ளவர்களது நலன்களையும் அடிப்படையாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. புலம்பெயர் நாடுகளில் நம்மவர்களால் நடாத்தப்படும் பழைய மாணவர் சங்கங்கள், உதவு நிறுவனங்கள் போன்றவை முழுக்க முழுக்க தாயகத்தில் உள்ளவர்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் நிறுவனங்களாகும். இவற்றில் பல நேரடியாக தாயகப்பொருளாதாரத்திற்கு உதவி வழங்கும் அமைப்புக்களாகக் காணப்படுகின்றன. உதாரணத்திற்கு புலம்பெயர்ந்த நாடுகளில் நம்மவர்களால் நடாத்தப்படும் பழைய மாணவர் சங்கங்களை எடுத்துக்கொண்டாலும் அவை தாயகத்தில் இருக்கும் பாடசாலை களிற்கு பொருளாதார மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதனை பிரதான நோக்கமாக கொண்டு இயங்குகின்றன.

இவ்வாறு புலம்பெயர்ந்த நாடுகளில் நம்மவர்களால் நடாத்தப்படும் சில நிறுவனங்கள் நேரடியாக தாயகப் பொருளா தாரத்திற்கு உதவுபவையாக இருக்க ஏனைய அமைப்புக்கள் மறைமுகமானதொரு பொருளாதாரப் பங்களிப்பினை தாயத்திற்கு பெற்றுத் தருவனவாக உள்ளன. இந்த சமூக அமைப்புக்கள்



விரும்பியோ, விரும்பாமலோ மேற்கு நாட்டு வாழ்க்கை முறைமை யொன்றிற்குள் ஆட்பட்டுக்கொண்டிருக்கும் புலம்பெயர்ந்த நம்மவர்களை நமது அக்கறைக்குட்பட்ட விடயங்கள் தொடர்பில் சிந்திப்பதற்கும் செயற்படுவதற்கும் உதவுகின்றன. இதனால் புலம்பெயர்ந்த நம்மவர்கள் இந்த மேற்குலக வாழ்க்கைக்குள் முற்று முழுதாக தன்னிணைந்து ஒன்றுபட்டு விடாமல் தமது சொந்த அடையாளத்துடன் வாழக்கூடிய நிலையொன்று இந்நாடுகளில் காணப்படுகின்றது. இந்த வகையில் நமது கலை, கலாச்சாரம், மொழி, தாயக உணர்வு போன்றவற்றினையும் புலம்பெயர்ந்து வாழும் இந்நாடுகளில் நம்மவர்கள் ஓரளவிற்கு கட்டிக்காக்கக் கூடியதாக உள்ளது. இந்த வகையில் புலம்பெயர்ந்தவர்களிற்கும் தாயகத்திற்கும் இடையிலான உறவுகள் உடைந்து விடாமல் இருப்பதனை இந்த சமூக அமைப்புக்கள் மற்றும் சமூக நிகழ்வுகள் வசதிப்படுத்துகின்றன. இதனால் புலம்பெயர்ந்தவர்களிற்கும், தாயகத்திற்குமிடையிலான பொருளாதார உறவுகள் தொடர்வதற்கும் இவை நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவுபவையாக உள்ளன.

அண்மையில் சுனாமிப் பேரழிவில் மக்கள் பாதிக்கப்பட்ட போது புலம்பெயர்ந்த நாடுகளில் நம்மவர்களால் நடாத்தப்படும் ஒவ்வொரு சமூக அமைப்புக்களும் முன்வந்து பெருமளவு பொருளாதார உதவிகளை பாதிக்கப்பட்ட மக்களிற்கு வழங்கியமை இங்கு ஞாபகத்தில் கொள்ளத்தக்கது.

நம்மவர்களால் நடாத்தப்படும் சமூக நிகழ்வுகள் எல்லாமே நமது கலை, கலாச்சாரம், பண்பாடு, மொழி, சமயம் மற்றும் தாயக உணர்வு சம்மந்தப்பட்டவையாகும். இந்நிகழ்வுகளை நடாத்துவதற்கு தாயத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் பெருமளவிற்கு பயன்படுத்தப்படுகின்றன. அதேபோல் இந் நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கும், பங்குபற்றுவதற்கும் தாயகத்தில் இருந்து கலைஞர்கள், அறிஞர்கள் போன்றோர் அழைக்கப்படுகின்றனர். இந்த வகையில் இந்நிகழ்வுகளினூடாக நேரடியாகவும் மறைமுகமாகவும் பொருளாதார நன்மைகள் தாயகத்தில் உள்ளவர்களை சென்ற டைகின்றன.

இந்த சமூக நிகழ்வுகளில் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் நமது இளம் தலைமுறையினர் கலந்து கொள்வதனூடே நமது கலை, கலாச்சாரம், வரலாறு போன்றவற்றினை அறிந்து தெரிந்து விளங்கிக்கொள்ளக்கூடியவர்களாக இருக்கின்றனர். மேற்கு நாட்டு பின்புலத்தில் பிறந்து வளர்ந்த இச்சந்ததியினர் நமது பண்பாட்டு விடையங்களை விளங்கிக்கொள்ள இந்த சமூக நிகழ்வுகள் பெரிதும் உதவுகின்றன.

இந்த சமூக அமைப்புக்களிலும் நிகழ்வுகளிலும் புலம்பெயர்ந்த இளம் தலைமுறையினர் தனியே பார்வையாளர்களாக அன்றி பங்கு பற்றுபவர்களாகவும் இருத்தல் வேண்டும். பங்குபற்றுதல் எனும் பொழுது வெறுமனே கலை நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதுடன் நின்றுவிடாது இந்த சமூக அமைப்புக்களினை தோற்றுவித்தல் நிர்வகித்தல் என்பவற்றிலும் சமூக நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துதல், கொண்டு நடாத்துதல் போன்றவற்றிலும் புலம்பெயர்ந்த இளம் தலைமுறையினர் முக்கிய பங்கு வகிப்பதற்கு ஆவன செய்யப்படல் வேண்டும். அப்பொழுதுதான் இந்த சமூக அமைப்புக்களும் நிகழ்வுகளும் எந்தவித தங்குதடையுமின்றி எதிர்காலத்திலும் புலம்பெயர் நாடுகளில் கொண்டு நடாத்தப்படுபவையாக இருக்கும். அதனூடே புலம்பெயர்ந்தவர்களிற்கும் தாயகத்திற்குமிடையிலான உறவுகள் எதிர்காலத்திலும் சிறப்பான முறையில் நிலவுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறான பலமடைந்த உறவென்பது புலம்பெயர்ந்தவர்களின் தாயகத்திற்கான பொரு ளாதாரப் பங்களிப்புக்கள் எதிர் காலத்தில் குறைவதனை தணிக்கக்கூடியவையாக இருக்கும்.

நம்மவர்களால் நடத்தப்படும் ஒருசில பொது அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் அவற்றினை நடாத்துபவர்களின் தனிப்பட்ட நலன்களை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றன என்றதொரு குற்றச்சாட்டு நிலவுகின்றது. இவ்வமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் புலம் பெயந்த நம்மவர்களினை ஒன்றுபடுத்துவதனை விடுத்து நம்மக்களிடையே போட்டிகளும் பிரிவினைகளும் தோன்றுவதற்கு காரணமாகியுள்ள சந்தர்ப்பங்களும் உண்டு. இந்நாடுகளில் இயங்கும் ஒருசில கோயில்களை எடுத்துக் கொண்டால் அவை புலம் பெயர்ந்த நம்மவர்களின் சமயத் தேவைகளை பூர்த்தி செய்கின்றன என்பதற்கு மேலாக பணம் உழைப்பதனை நோக்காகக் கொண்டு செயற்படு வதைப்போல் தோன்றுகின்றது. இவை அதிக வருமானம் ஈட்டும் நோக்கில் நமது சமயப் பண்பாட்டு வழக்கத்தில் இல்லாத சில விடயங்களைக் கூட புலம்பெயர்ந்த நாடுகளில் அறிமுகப்படுத்தி வருகின்றன. இவ்வாறான தவறான செயற்பாடுகள் நமது பண்பாட்டு அம்சங்கள் தொடர்பில் மக்கள் குறிப்பாக புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள இளம் தலைமுறையினர் வெறுப்படைவதற்கு காரண மாகலாம்.

இந்தவகையில் புலம்பெயர்ந்த நாடுகளில் நம்மவர்களால் நடாத்தப்படும் சமூக அமைப்புக்கள் மற்றும் நிகழ்வுகள் குறுகிய நோக்கங்கள் எதுவுமின்றி நமது கலை கலாச்சார, மொழி, சமயம் மற்றும் தாயக உணர்வினை உரிய முறையில் கட்டிக்காப்பதற்கும்



வளர்ப்பதற்கும் பாடுபடவேண்டும். அப்போதுதான் இவை தொடர்பில் புலம்பெயர்ந்த இளைய தலைமுறையினரும் உரிய முறையில் கவரப்பட்டு புலம்பெயர்ந்தவர்களுக்கும் தாயகத்துக்கு மிடையிலான உறவு நீண்டு நிலைத்திருக்கக் கூடியதாக அமையும்.

# தலைமுறை இடைவெளியினைக் குறைத்தல்

தாயகத்திற்கான புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புகள் எதிர்காலத்தில் குறையாமல் இருப்பதென்பது புலம்பெயர்ந்த இளம் தலைமுறையினரின் கைகளிலேயே பெருமளவிற்கு தங்கியுள்ளது. இந்த வகையில் புலம்பெயர்ந்தவர் களிடையே காணப்படும் தலைமுறை இடைவெளியினைக் குறைப்பது அவசியமாகும்.

தற்காலத்தில் தலைமுறை இடைவெளி என்பது அதிகரித்துக் கொண்டு செல்வதொன்றாக இருக்கின்றது. மனித வரலாற்றின் ஆரம்ப காலங்களில் சிறியதொரு மாற்றம் ஏற்படுவதற்கு பல மில்லியன் ஆண்டுகள் சென்றன. ஆனால் காலம் செல்லச் செல்ல மாற்றம் அல்லது வளர்ச்சி என்பது விரைவாக ஏற்பட்டு வருகின்றது. இதனால் முன்னைய காலங்களில் போலன்றி தற்போது தலைமுறை இடைவெளி என்பதும் அதிகரித்துக் கொண்டு வருவதாக இருக்கின்றது. அதுவும் குறிப்பாக புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் நம்மவர்களினடையேயான தலைமுறை இடைவெளி என்பது மேலும் அதிகரித்ததொன்றாகக் காணப்படுகின்றது.

புலம் பெயர்ந்த நாடுகள் பெருமளவிற்கு பொருளாதார ரீதியாக முன்னேறிய நாடுகள் என்ற வகையிலும் அவை நமது கலை, கலாச்சார, பண்பாட்டு அம்சங்களில் இருந்து வேறுபட்டன என்ற வகையிலும் இங்கிருந்து புலம் பெயர்ந்து சென்ற சந்ததியினர்களிற்கும் அவர்களது வாரிசுகளான இளம் சந்ததியினர்களிற்கும் இடையில் தலைமுறை இடைவெளி என்பது அதிகரித்ததொன்றாக காணப் படுகின்றது.

தலைமுறை இடைவெளி என்பது ஒருவகையில் நோக்கும் போது வளர்ச்சியின் வெளிப்பாடாகும். இந்தவகையில் பார்க்கும் போது அதிகரித்த தலைமுறை இடைவெளி என்பது முன்னேற்றத்தின்



அறிகுறியாகும். நம்மில் பலர் நாம் சிறுவர்களாக இருந்தபோது தெரிந்திராத பல விடயங்களை இன்றைய சிறுவர்கள் தெரிந்திருப் பதனையும் அதற்கேற்ப செயற்படுவதனையும் பெருமையானதொரு விடயமாகவே கொள்கின்றோம். தற்காலப் பிள்ளைகள் மூளை சாலிகள் என்பது பலர் பொதுவாகச் சொல்லும் ஒரு கூற்றாகும். குறிப்பாக அறிவு வளர்ச்சி, புதியவற்றினைத் தெரிந்து கொள்ளல், தன்னம்பிக்கை, உலகியல் மாற்றங்களை தெரிந்து புரிந்து கொண்டு அதற்கேற்ப செயற்படல் போன்றவையெல்லாம் தனிப்பட்டவர் களிற்கும் சமூகத்திற்கும் பயன்படக்கூடியவையாகும். ஏனவே இவ்வாறான விடயங்கள் தொடர்பில் நம்மவர்களிற்கும் இளைய தலைமுறையினர்களிற்குமிடையில் அதிகரித்த தலைமுறை இடைவெளி ஒன்று காணப்படும்போது அது அநுகூலமானதொன்றாக அமைகின்றது.

ஆனால் தற்காலத்தில் இந்த தலைமுறை இடைவெளி என்பது மேற்சொன்ன விடயங்களில் மாத்திரமன்றி நமது கலாச்சாரப் பண்பாட்டு விடயங்களிலும் அதிகரித்துக் காணப்படுகின்து. அதாவது இளம் சந்ததியினர் நமது கலாச்சாரப் பண்பாட்டு அம்சங்களிலிருந்து விடுபட்டு மேற்கத்தேய கலாச்சாரத்திற்கு மாறுபடும் போக்கு ஒன்று காணப்படுகின்றது. இதனால் நமது பண்பாட்டில் உள்ள பல நல்ல அம்சங்கள் மறக்கப்பட்டு போகின்றன இன்றைய உலகமயமாக்கல் என்பதும் பெருமளவிற்கு மேற்கு நாட்டு பண்பாட்டு அம்சங்களை நம்மவர்களிடையே புகுத்துவதனை வசதிப்படுத்துவதாகவே உள்ளது. இதனால் நமது இளம் சந்ததியினர் பெருமளவிற்கு மேலைநாட்டு வாழ்க்கை முறைக்கு பழக்கப்பட்டு மேலைநாட்டு பொருட்களை பெருமளவிற்கு நுகர்பவர்களாகவும் நமது பாரம்பரிய வாழ்க்கை முறையினையும், நுகர்வுப் பழக்கத்தினையும் கொஞ்சம் கொஞ்சமாக கைவிட்டு வருபவர்களாக இருக்கின்றனர். இன்று மேலை நாடுகள் தமது பொருட்கள் சேவைகளை மாத்திரமன்றி தமது சிந்தனை கலாச்சாரம், பண்பாடு, வாழ்க்கை முறை போன்றவற்றினையும் ஏனையவர்களிற்கிடையே புகுத்துவதில் ஆர்வமாக உள்ளனர். இவ்வாறான ஒரு பிற்புலத்தில் நமது பண்பாட்டு அம்சங்கள் தொடர்பில் இன்றைய இளம் சந்ததியினரின் அறிவும். ஆர்வமும் மெல்ல மெல்ல குறைந்து வருவதொன்றாக உள்ளது. இவ்வாறு பண்பாட்டு விடயங்களில் தலைமுறையிடைவெளி அதிகரித்து வருவதொன்றாக உள்ளது.

புலம்பெயர்ந்த நாடுகளில் இந்த தலைமுறை இடைவெளி மேலும் அதிகரித்துக் காணப்படுகின்றது. முற்றிலும் வேறுபட்ட கலாச்சாரப் பின்னணியில் பிள்ளைகள் வளர்க்கப்படுவது இதற்கு

முக்கிய காரணமாகும். புலம் பெயர்ந்த நம்மவர்கள் முழுக்க முழுக்க நமது நாட்டு கலாச்சார அடித்தளத்திலேயே வளர்த்தெடுக்கப் பட்டவர்கள். இதனால் முற்றிலும் மாறுபட்ட கலாச்சாரப் பின்னணியினைக் கொண்ட நாடுகளிற்கு புலம் பெயர்ந்து சென்றபோதும் கூட அவர்கள் பெருமளவிற்கு தமது பிறந்த நாட்டு கலாச்சாரப் பண்புகளைக் கொண்டவர்களாகவே உள்ளனர். ஆனால் அங்கு பிறந்து பெருமளவிற்கு புலம் பெயர் நாட்டு சூழலில் வளர்க்கப்பட்ட இளைய தலைமுறையினர் அந்நாட்டு கலாச் சாரத்தின் பாதிப்புகளை பெருமளவிற்கு கொண்டவர்களாக உள்ளனர்.

யுத்தத்தின் பாதிப்புக்குள்ளான தாயத்திலுள்ள தமது உறவினர்களிற்கு பணம் அனுப்புதல், புலம் பெயர் நாடுகளில் தமக்கென வாழ்க்கையொன்றை அமைத்துக் கொள்ளல் போன்ற பல்வேறு தேவைகளின் நிமித்தம் புலம்பெயர்ந்தவர்கள் கடுமையாக உழைக்க வேண்டியவர்களாக உள்ளனர். பெருமளவிற்கு கணவன் மனைவி இருவருமே வேலைக்கு போகவேண்டிய தேவை அங்கு காணப்படுகின்றது. அவ்வாறு வேலைக்குப் போகும்போது பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு நமது நாட்டிலுள்ளது போல் பேரன் பேத்திகளோ அல்லது உறவினர்களோ அந்நாடுகளில் இல்லை. இவ்வாறானதொரு நிலையில் பிள்ளைகள் மிக சிறுவர்களாக இருக்கும்பொழுதே பராமரிப்பு நிலையங்களிற்கு அனுப்பப் படுகிறார்கள். இந்த பராமரிப்பு நிலையங்களில் பிள்ளைகள் வெளிநாட்டுப் பிள்ளைகளுடன் வெளிநாட்டு சூழ்நிலையில் வாழ்பவர்களாகவே உள்ளனர். பெற்றோர்கள் வீட்டுக்கு வந்தவுடன் கூட பிள்ளைகளுடன் சேர்ந்திருந்து செலவிடும் நேரம் குறை வானதாகும்.

அது மாத்திரமன்றி வெளிநாடுகளில் பெற்றோர்களிற்கும், பிள்ளைகளிற்கும் இடையிலான உறவு என்பது நம்நாட்டில் உள்ள உறவு நிலையுடன் ஒப்பிடும்போது மாறுபட்டதாகும். அந்நாடுகளில் பிள்ளைகள் இங்குபோல் பெற்றோரில்' பெருமளவிற்கு தங்கி யிருப்பதில்லை. பெற்றோர்கள் பிள்ளைகளை கண்டித்து வளர்ப்பது கூடக் கடினமானது. பிள்ளைகளிற்கு அடிப்பது சட்டவிரோதமானது. அடிப்பதோ அல்லது வேறு முறையிலோ துன்புறுத்தப்படுவது தெரியவந்தால் பொலிஸார் வந்து பெற்றோர்களிற்கெதிராக நடவடிக்கை எடுப்பர். தேவையேற்படும்போது பொலிஸாரை எவ்வாறு கூப்பிடலாம் என்பது போன்ற விடயங்கள் சிறுவயதிலேயே பிள்ளைகளிற்கு பாடசாலைகளில் சொல்லிக் கொடுக்கப்படுகின்றது.



பிள்ளைகள் தமிழில் அன்றி வேறு மொழிகளிலேயே கல்வி கற்கின்றனர். அவர்களது பாடவிதானங்கள் பெருமளவிற்கு பெற்றோர்கள் தாய்நாட்டில் கல்வி கற்றபோது இருந்த பாட விதானங்களில் நின்றும் பெரிதும் வேறுபட்டவை. இதனால் பிள்ளைகளிற்கு பாடம் சொல்லிக் கொடுக்கவோ, அல்லது சரியான முறையில் வழிகாட்டவோ முடியாதவர்களாக பெருமளவு பெற்றோர்கள் காணப்படுகின்றனர். பாடசாலைகளிற்கு சென்று தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் தொடர்பில் கதைப்பதற்கும் மொழி ஒரு பிரச்சனையாக உள்ளது.

புலம்பெயர்ந்த நாடுகளில் இளம் சந்ததியினர் பெருமளவிற்கு அங்கு காணப்படும் விதம்விதமான விளையாட்டு சாதனங்கள், தொலைக்காட்சி, கணினி, செல்லிடத் தொலைபேசி போன்ற வற்றுடனும் தமது வயதினை ஒத்த சகோதரர்களுடனும், நண்பர் களுடனும் பெருமளவு நேரத்தினை செலவு செய்வதில் அக்கறை காட்டுகின்றனர். ஏதாவது தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் மட்டுமே தாய் தந்தையருடன் உரையாடும் வழக்கத்தினைக் கொண்டுள்ளனர்.

இவ்வாறானதொரு பிற்புறத்தில் தலைமுறை இடைவெளி யென்பது புலம்பெயர் நாடுகளில் மிக அதிகமாக உள்ளது. எனவே இந்த தலைமுறை இடைவெளியைக் குறைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகும். இதற்கு முக்கியமாக செய்ய வேண்டியது புலம்பெயர்ந்த பெற்றோர்கள் தமது பிள்ளைகளுடன் இயன்றவரை நெருங்கிய உறவினைப் பேணுவதாகும். அதற்கு முதலில் அவர்கள் தமது பிள்ளைகளுடன் செலவிடும் நேரத்தினை அதிகரித்துக் கொள்ளல் வேண்டும். அதற்காக வேண்டி அவர்கள் தாம் வேலை செய்யும் நேரத்தினை ஓரளவு குறைத்துக் கொள்ளவேண்டி ஏற்படலாம். அவ்வாறு குறைத்துக்கொள்ளல் என்பது அவர்கள் தாயகத்திலுள்ளவர்களிற்கு வழங்கும் பொருளாதார உதவிகளை மட்டுப்படுத்தும் என்றாலும் கூட இந்த பொருளாதாரப் பங்களிப்புகள் எதிர்காலத்திலும் தொடர்வதற்கு பண்பாட்டு அம்சங்களில் புலம்பெயர்ந்தவர்களிற்கும் அவர்களது பிள்ளைகளிற்கும் இடையில் உள்ள தலைமுறை இடைவெளியினைக் குறைப்பது அவசியமாகும்.

தாய் நாட்டில் உள்ளதைப்போல் கட்டுப்படுத்தும் தன்மை கொண்ட உறவினை பிள்ளைகளுடன் புலம்பெயர்ந்த நாடுகளில் கடைப்பிடிக்க முடியாது. அங்கு பிள்ளைகளுடன் நட்பு ரீதியான ஓர் உறவினை பெற்றோர்கள் பேணப் பழகிக் கொள்ள வேண்டும். அதனூடேதான் பெற்றோர் பிள்ளைகளுடன் நெருங்கி வரக்கூடியதாக இருக்கும். அவ்வாறு நெருங்கி வரும்போது நமது பண்பாட்டு அம்சங்களை அவர்களிற்கு பழக்கப்படுத்துவது இலகுவாக இருக்கும்.

புலம்பெயர் நாடுகளில் இளம் சந்ததியினர்களிற்கு உள்ள தெரிவுகள் அதிகமானவை என்பதுடன் வித்தியாசமானவையுமாகும் என்பதனை அங்குள்ள பெற்றோர் ஏற்றுக் கொள்ளப்பழக வேண்டும். இந்த நிலையில் தமது பண்பாட்டு விடயங்களை பகுத்தறிவு அடிப்படையில் அவர்களிற்கு விளக்குவதன் மூலம் ஏற்றுக்கொள்ளச் செய்யலாம். அந்நாடுகளில் கட்டளைகள் இடுவதன் மூலம் இளம் சந்ததியினரைக் கட்டுப்படுத்துவது கடினமானதொன்று. பிள்ளைகள் தமது பிரச்சனைகள், விருப்பு வெறுப்புக்கள் போன்றவற்றை பெற்றோர்களுடன் கலந்துரையாடி ஆலோசனைகளைப் பெறக் கூடிய வகையில் உறவானது நட்பு ரீதியில் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

புலம்பெயர்ந்த இளம் தலைமுறையினர்களுக்கிடையே நமது கலை, கலாச்சாரம், மொழி, சமயம் மற்றும் தாயக உணர்வு போன்றவற்றினை எடுத்துச் செல்வதில் அங்கு நம்மவர்களால் நடாத்தப்படும் பெரும்பாலான சமூக அமைப்புக்களும், சமூக நிகழ்வுகளும் பெரும்பங்காற்றுகின்றன. இந்தவகையில் இவ் வமைப்புக்கள் மற்றும் நிகழ்வுகளில் தமது பிள்ளைகள் முக்கிய பங்காற்ற அங்குள்ள பெற்றோர் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

இவ்வாறு எல்லா வழிகளிலும் நமது பண்பாட்டு அம்சங்கள் தொடர்பில் தலைமுறை இடைவெளியினைக் குறைக்க முயற்சித்தல் வேண்டும். அப்பொழுதுதான் புலம்பெயர்ந்த நாடுகளில் நமது அடுத்த சந்ததியினரும் நமது கலாச்சார அடையாளத்துடன் வாழ்பவர் களாகவும் தாயகத்துடன் உறவினைப் பேணுபவர்களாகவும் இருப்பர். அதனூடே புலம்பெயர்ந்தவர்களிற்கும், தயாகத்திற்குமிடையிலான பொருளாதார உறவுகள் எதிர்காலத்திலும் தொடர்வதாக இருக்கும்.

# உறவின் அடிப்படை தமிழ்

புலம் பெயர்ந்தவர்களின் தாயகத்திற்கான பொருளாதாரப் பங்களிப்புக்கள் புலம் பெயர்ந்தவர்களிற்கும் தாயகத்திற்கு மிடையிலான உறவின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப் படுகின்றன. இந்த உறவிற்கு அடிப்படையாக அமைவது நமது மொழி மற்றும் அதனுடன் இணைந்த பண்பாட்டு அம்சங்களாகும். அந்த வகையில் புலம்பெயர்ந்தவர்களிற்கும் தாயகத்திற்குமிடையிலான பொருளாதார உறவுகள் எதிர்காலத்திலும் தொடர்வது தொடர்பில் புலம்பெயர்ந்த இளைய தலைமுறையினரின் தமிழ் அறிவு என்பது முக்கியமானதாகும்.

இன்று நம்மவர்கள் ஆங்கிலம் மட்டுமல்லாமல் பிரென்சு, டொச்சு, டச்சு, டெனிஸ் பொன்ற வெவ்வேறு மொழி பேசும் நாடுகள் பலவற்றில் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். இந்த நாடுகளில் இவர்கள் தமது கல்வி, தொழில் மற்றும் அரச தொடர்பு உட்பட பெரும்பாலான நாளாந்த செயற்பாடுகளை அந்நாட்டு மொழியிலேயே மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர். இவர்கள் தமிழில் உரையாடுவ தென்பது பெருமளவிற்கு அவர்களது வீட்டிற்குள்ளும் எம்மவர்களால் நடாத்தப்படும் சமூக நிறுவனங்கள் மற்றும் நிகழ்வுகளிற்குள்ளும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கின்றது.

நம்மவர்கள் சிலரது வீடுகளில் வீட்டு மொழியாக தமிழன்றி அந்நாட்டு மொழியே பயன்படுத்தப்படுகின்றது. நம்மவர்கள் வேறு சிலரது வீடுகளில் பெற்றோர் தமிழில் பிள்ளைகளுடன் உரையாட பிள்ளைகள் அந்நாட்டு மொழியில் பெற்றோருடன் உரையாடு கின்றனர். பெற்றோர் பேசும் தமிழினை பிள்ளைகள் புரிந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றனர். ஆனால், அவர்களால் தமிழில் உரையாட முடிவதில்லை. இதனால் பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்குமிடையில் இரு மொழி உரையாடல்கள் இடம்பெறுகின்றன. வேறு பல வீடுகளில் பிள்ளைகள் நன்றாக தமிழில் உரையாடக்கூடியவர்களாக இருக்கின்றனர். ஆனால்,

அவர்கள் தமிழை வாசிக்கவோ, எழுதவோ முடியாதவர்களாக இருக்கின்றனர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் இந்த இளம் தலை முறையினர் சரியான முறையில் தாயகத்திலுள்ள உறவினர்களுடன் உரையாடவும் உறவாடவும் முடியாதவர்களாக இருக்கின்றனர். இன்று நம்மவர்கள் வெவ்வேறு மொழி பேசும் நாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்கின்றனர். இதனால், சில சந்தர்ப்பங்களில் வெவ்வேறு நாடுகளில் வாழும் இளம் சந்ததியினர் தமக்குள்ளே தொடர்பாடல் களை மேற்கொள்ள முடியாதவாறு வெவ்வேறு மொழிகளைப் பேசுபவர்களாக உள்ளனர். சில குடும்பங்களை எடுத்துப்பார்த்தால் அண்ணனின் பிள்ளைகள் ஆங்கிலம் பேசுகின்றார்கள். தங்கையின் பிள்ளைகள் டொச்சு பேசுகின்றார்கள். பெரும்பாலான சந்தர்ப்பங் களில் இவர்களுக்கு தமிழோ அல்லது மற்றவர் பேசும் மொழியோ தெரியாமல் இருக்கின்றது. இதனால் உறவினர்கள் எல்லோரும் சந்திக்கும் சந்தர்ப்பங்களில்கூட அந்நியர்கள் போல வெறுமனே பார்த்து சிரித்து கைகுலுக்குவதுடன் இவர்களுக்கிடையேயான உறவானது மட்டுப்படுத்தப்படும் நிலை காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு பிற்புலத்தில் புலம்பெயர்ந்து வாழும் இளைய சந்ததியினரும் அவர்களுக்கு பின்னைய சந்ததியினரும் உரிய தமிழ் அறிவனைப் பெற்றுக் கொள்வதினை உறுதிப்படுத்திக் கொள்வது என்பது சவால்மிக்கதொன்றாகும். எனினும், அந்த சவாலினை எதிர்நோக்கி அவர்களுக்கு தமிழறிவினைப் புகட்டுதல் என்பது அத்தியாவசியமானதொன்றாகும். காலனித்துவ ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் இருந்து பெருந்தொகையான தமிழர்கள் புலம்பெயர்ந்திருந்தனர். இவர்கள் இன்று உலகின் பல நாடுகளில் வாழ்கின்றனர். இவர்களில் இலங்கை, மலேசியா மற்றும் சிங்கப்பூரில் வாழும் தமிழர்களைத் தவிர ஏனைய நாடுகளில் வாழும் பெரும் பாலான தமிழர்களுக்கு தமிழ் தெரியாத நிலை காணப்படுகின்றது. அவர்களுக்கும் தமிழ் நாட்டிற்குமிடையில் குறிப்பிடத்தக்க தொடர்புகள் ஏதும் இல்லாத நிலையே காணப்படுகின்றது. இந்தத் தொடர்பின்மை என்பதற்கு மொழி தெரியாமை என்பது மிக முக்கிய காரணமாக விளங்கியுள்ளது. மறுபுறத்தில் தொடர்பின்மை என்பதும் தமிழ் அறிவு அற்றுப் போவதற்கு முக்கிய காரணமாகி விட்டது.

அக்காலத்தில் தமிழ்நாட்டு தமிழர்களின் புலம்பெயர்விற்கும் நம்மவர்களின் அண்மைக்கால புலம்பெயர்விற்குமிடையில் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவற்றில் புலம்பெயர்ந்த காலப்பகுதி, புலம்பெயர்ந்த நாடுகளில் காணப்பட்ட சமூக மற்றும் அரசியல் நிலைமைகள், புலம் பெயர்ந்தவர்களின் தன்மை போன்றவை முக்கியமானவையாகும்.



நம்மவர்கள் புவியியல் ரீதியாக தூரத்தில் உள்ள நாடுகளிற்கு புலம்பெயர்ந்து சென்றாலும் இன்றைய வளர்ச்சியடைந்த தொழி நுட்பம் வளர்ச்சியடைந்த வான்வழிப் போக்குவரத்து வசதிகள் போன்றவற்றின் காரணமாக இந்தப் புவியியல் தூரமென்பது பெருமளவிற்கு உணரப்படாததொன்றாக மாறியுள்ளது. நம்மவர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகள் பெருமளவிற்கு பல்லினத் தன்மையினை ஊக்குவிக்கும் கொள்கையினைக் கொண்டவையாக காணப்படுகின்றன. இதனால் இந்நாடுகள் நம்மவர்களின் மொழி மற்றும் பண்பாட்டினைப் பேணும் முயற்சிகளிற்கு முட்டுக்கட் டையாக இருப்பதில்லை. பல சந்தர்ப்பங்களில் அவற்றினை வசதிப்படுத்துபவையாகவே அந்நாட்டு அரசுகள் உள்ளன. அத்துடன் புலம்பெயர்ந்த நம்மவர்களும் புலம்பெயர் நாடுகளில் கல்வி, தொழில் மற்றும் பொருளாதார ரீதியாக முன்னேற்றமடைந்த ஒரு நிலையில் இருக்கின்றனர் என்ற வகையில் தமது தனித்துவ அடையாளத்தினைப் பேணக்கூடியவர்களாக இருக்கின்றனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக தாயகத்தில் நிலவும் அரசியல் சூழ்நிலை புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்களை இணைப்பது தொடர்பில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது.

புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழினைக் கட்டிக் காப்பதிலும் இளம் சந்ததியினருக்கு தமிழ் அறிவனை வளர்ப்பதற்கும் தமிழ் வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் அரசாங்கப் பாடசாலைகளிலேயே தமிழ் மொழியினைக் கற்றுக்கொள்வதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இதனைத் தவிர நம்மவர்களால் நடாத்தப்படும் தமிழ் வகுப்புகள் புலம்பெயர்ந்த நாடுகளில் பல்வேறு இடங்களில் காணப்படுகின்றன. இவற்றினைத் தவிர நம்மவர்களால் நடாத்தப்படும் தமிழ் ஊடகங்கள், சமூக அமைப்புக்கள் மற்றும் சமூக நிகழ்வுகள் போன்றவை தமிழ் மொழியினை அந்நாடுகளில் வளர்ப்பதில் பெரும்பணி ஆற்று கின்றன. இவற்றினைத் தவிர கணினியின் உதவியுடன் தமிழினை கற்றுக்கொள்ளக்கூடிய வகையில் விசேட கணினி மென்பொருள்கள் உருவாக்கப்பட்டு கிடைக்கக்கூடியதாக உள்ளன.

இந்த வகையில் புலம்பெயர் நாடுகளில் நமது இளம் சந்ததியினரிடையே தமிழறிவினை வளர்ப்பதென்பது ஒருபக்கத்தில் சவாலானதொன்றாக இருந்தாலும் அதற்கான வசதி வாய்ப்புகள் இந்நாடுகளில் கணிசமான அளவிற்கு உள்ளன என்பதும் மறுக்க முடியாததாகும். எனவே தமிழினைக் கற்றல் என்பதும் அதனைக்

கட்டிக் காப்பது என்பதும் தனிப்பட்டவர்களதும் புலம்பெயர் சமூகத்தினதும் கையிலேதான் பெருமளவிற்கு தங்கியிருக்கின்றது. தாயத்தில் போல் தமிழிலே கல்விகற்று தமிழிலே பெருமளவு செயற்பாடுகளை மேற்கொள்ளும் நிலமை புலம்பெயர் நாடுகளில் இல்லை. அங்கு தமிழினைக் கற்பதற்கும் பயன்படுத்துவதற்குமென மேலதிக முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகின்றது. மிகுந்த விரைவு வாழ்க்கை ஒன்றை நடைமுறையில் கொண்ட புலம்பெயர் நாடுகளில் தமிழ் மொழி கற்றல் தொடர்பில் மேலதிக முயற்சி ஒன்றினை எடுப்பதென்பது ஓரளவிற்கு கடினமானது என்பதனையும் இந்த நேரத்தில் ஞாபகத்தில் கொள்ளல் வேண்டும். எனவே தமிழ் மொழி கற்றல் மற்றும் பயன்படுத்தல் என்பது தனிப்பட்டவர்களிற்குள்ள ஆர்வத்திலும் அர்ப்பணிப்பிலுமேயே தங்கியுள்ளது.

இந்த ஆர்வமும் அர்ப்பணிப்பும் இளம் தலைமுறையினர்களுக்கு உரிய முறையில் ஊட்டப்பட வேண்டும். இதில் பெற்றோர்களது பங்களிப்பு மிகவும் முக்கியமானதொன்றாகும். புலம்பெயர்ந்த நம்மவர்கள் அந்நாடுகளிற்கு சென்றபோது அந்நாட்டு மொழி தெரியாமை அவர்களிற்கு பெரியதொரு சவாலாக இருந்தது. அந்த வகையில் பின்னர் அவர்களது பிள்ளைகள் அந்நாட்டு மொழியில் தேர்ச்சி பெற்று வருதல் என்பது அவர்களைப் பொறுத்தவரை தேவையானதொன்றாகவும் பெருமையானதொன்றாகவும் இருந்தது. சில பெற்றோர்கள் படிவங்கள் நிரப்புதல், வங்கி போன்ற நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளல் போன்றவற்றிற்கு அந்நாட்டு மொழி நன்கு தெரிந்த தமது பிள்ளைகளின் உதவியைப் பெறுவதுண்டு. இவ்வாறானதொரு சூழ்நிலையில் தமது பிள்ளைகள் வீட்டில் தமிழை அன்றி அந்நாட்டு மொழியினை சரளமாகக் கதைக்கும்போது அதனைப்பார்த்து பல பெற்றோர் மகிழும் நிலை அந்நாடுகளில் காணப்பட்டது. இதனால் அந்நாட்டு மொழியளவிற்கு இல்லாவிட்டாலும் ஓரளவிற்காவது தமிழறிவு தமது பிள்ளைகளுக்கு இல்லையே என்பதனை பல பெற்றோர் உரிய காலத்தில் உணரத்தவறியவர்களாகவே இருந்தனர். இந்த நிலையில் பிள்ளைகளிற்கு தமிழ் கற்பிக்க வேண்டும் என பின்னர் பல பெற்றோர்கள் விரும்பியபோதும் கூட அவர்களின் பிள்ளைகள் தமிழ் கற்பதில் அதிக ஆர்வம் காட்டாத நிலை பல புலம்பெயர் குடும்பங்களில் காணப்படுகின்றது. அதேநேரத்தில் சில பெற்றோர் தமது பிள்ளைகளை தாயகத்தில் உயர் தொழில்கள் எனக்கருதப்படுகின்ற டாக்டர் மற்றும் பொறியியலாளர் ஆக்குவதிலேயே அதிக கவனம் செலுத்துபவர்களாக இருக்கின்றனர். இந்த வகையில் பிள்ளைகளிற்கு



அந்நாட்டு மொழித் தேர்ச்சி என்பது தானாக வரும் என்பதும் ஆனால் தமிழ் அறிவு என்பது அர்ப்பணிப்புடன் கூடிய மேலதிக முயற்சி ஒன்றினுடாகவே பெறப்படல் வேண்டும் என்பதனையும் புலம் பெயர்ந்து வாழும் பெற்றோர்கள் உணர வேண்டும். தமிழினைக் கற்பதன் மூலம் பிள்ளைகள் மேலதிகமாக ஒரு மொழியினை தெரிந்து கொள்கின்றனர் என்பதற்கு மேலாக நமது பண்பாட்டினை மறக்காமல் வாழ்வதற்கும் நமது தாய்மொழி அவசியமானதொன்று என்பதனை ஞாபகத்தில் கொள்ளல் வேண்டும்.

பிள்ளைகளிற்கு தமிழ் ஊட்டல் என்பது பிள்ளை பிறந்தவுடனேயே பிள்ளைக்கு தமிழ்ப்பெயர் வைப்பதுடன் ஆரம்பமாகின்றது. வீட்டில் சிறுவயதில் நன்றாக தமிழ் கதைத்த பிள்ளை பாடசாலை சென்றவுடன் கொஞ்சம் கொஞ்சமாக தமிழைக் கைவிட்டு அந்நாட்டு மொழியினை பயன்படுத்தத்தொடங்கி விடும். இதனைக் கருத்திற்கொண்டு தமிழ் கற்பித்தல் மற்றும் பயன்படுத்தல் என்பவற்றினை தொடர்ச்சியாக மேற்கொள்ளல் வேண்டும். தமது பிள்ளைகள் ஆங்கிலத்தில் பேசுவதனை பெருமையாகக் கொள்ளும் வழக்கம் நம்மவர்களிடையே பொதுவாகக் காணப்படுவதொன்றாகும். அதேபோல் புலம்பெயர்ந்த பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தமிழில் பேசுவதனையும் சிறந்த தமிழ் அறிவு கொண்டுள்ளமையினையும் பெருமையாகக் கொள்ள பழகவேண்டும்.

பிள்ளைகளை நம்மவர்களால் நடாத்தப்படும் சமூக அமைப்புக்கள் மற்றும் சமூக நிகழ்வுகளில் பங்குபற்றச் செய்தல், தாயகத்திற்கு அடிக்கடி பிள்ளைகளுடன் வந்துபோதல், தாயத்திலுள்ள உறவினர்களுடன் பிள்ளைகள் தமிழில் கிரமமாக தொடர்பாடல் மேற்கொள்வதனை ஊக்குவித்தல், தமிழ் மொழி போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றச் செய்தல் போன்ற செயற்பாடுகள் இளம் சந்ததியினரின் தமிழ் கற்கும் ஆர்வத்தினை தூண்ட உதவும்.

இவ்வாறு புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள நமது இளம் சந்ததியினரும் அவர்களிற்கு பின்னைய சந்ததியினரும் தமிழினைக் கற்றுக் கொள்வது தொடர்பிலும் சாத்தியமான எல்லா சந்தர்ப்பங்களிலும் தமிழினைப் பயன்படுத்துவது தொடர்பிலும் உரிய எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும் அப்போதுதான் புலம்பெயர்ந்தவர்களுக்கும் தாயகத்திற்குமிடையே நெருக்கமான உறவு தொடர்ந்து அதனூடே அவர்களது பொருளாதாரப் பங்களிப்புகள் எதிர்காலத்தில் குறைவது தணிக்கப்படும். எமது உறவின் அடித்தளம் நமது மொழி என்பதனை எப்போதும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

# உசாவியவை


1. அப்துல்லா, இளைய, **தலைமுறை இடை..வெளி**, ஞாயிறு தினக்குரல், ஆகஸ்ட் 29, 2004, கொழும்பு.

2. அப்துல்லா, இளைய, **புலம் பெயர் வாழ்வில் சுவாரஸ்யங்கள்**, ஞாயிறு தினக்குரல், பல இதழ்கள், கொழும்பு.

3. இராசரத்தினம், சு, **வரலாறு வழிகாட்டுகிறது**, கனடாவில் தமிழ் மொழி வாரம், தமிழ் நாதம் - *tamilnatham.com*, 2005.

4. சந்திரசேகரம், சோ, **பொருளாதார வளர்ச்சியை தீர்மானிக் கும் காரணியாக அறிவு வளம்**, தினக்குரல், ஆகஸ்ட் 19, 2003, கொழும்பு.

5. சண்முகலிங்கம், க, **இலங்கைத் தமிழர் புலம் பெயர் சமூகப் பண்பாட்டு விளைவுகள**, அறிவோர் ஒன்று கூடல் நிகழ்வில் ஆற்றிய உரை, கொழும்பு தமிழ்ச் சங்கம், டிசம்பர் 06, 2004, கொழும்பு.

6. சிறிரஞ்சன், என், **பொருளாதார மேம்பாட்டுச் சிந்தனைகள**, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2004.

7. சிறீரங்கன், ச, **சொந்த சகோதரர்கள் சாதல் கண்டு**, வீரகேசரி வாரமலர், 30, ஜனவரி 2005, கொழும்பு.

8. சோமகாந்தன், என், **கனடாவில் 16 வாரங்கள**, தொடர் கட்டுரை வீரகேசரி வாரவெளியீடு - பல இதழ்கள், 2004, 2005.

9. வவுனியன், சாந்தி ரமேஸ், **விரும்பி படிக்க வேண்டிய தமிழ் வில்லங்கப் படிப்பாக**. ஞாயிறு தினக்குரல், ஜூலை 03, 2005, கொழும்பு.

10. நித்தியானந்தம், வி, **இலங்கைப்பொருளாதார வரலாறு - வடக்கு கிழக்குப் பரிமாணம**, உயர்கல்விச் சேவை நிலையம், யாழ்ப்பாணம், 2003

11. நித்தியானந்தம், வி, **ஈழத்தமிழரும் மருத்துவக்கல்வியும்: அதன் சமூகப் பொருளாதாரப் பரிமாணம்**, சமூக அறிவு, யூலை 2004, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, பக்கம் 45.





12. **Central Bank Reports** – Various issues, Central Bank of Sri Lanka, Colombo.

13. **A world of exiles**, The Economist, January 2, 2003

14. Colvin, Geoffrey, **America isn't Ready**, Fortune, Vol. 152, No. 3, August 8, 2005, USA, P28 - P37.

15. Dias, J.N.S, **Sri Lanka's Forgotten Power in International Trade**, Sunday Times – September 5, 2004, Colombo, Page 13.

16. Drucker, Peter F, **Post Capitalist Society**, Butterworth Heinemann Ltd, London, 1993.

17. Firat, A.Fuat, **Consumer Culture or Culture Consumed?**, Marketing in a Multicultural world, Sage Publication, 1995, India.

18. Mahendra, Ravi, **BPO Opportunities and Shareholder Value**, Sunday Times – February 06, 2005, Colombo.

19. Majumder, Sanjoy, **Tamil diaspora surfs for news**, BBC Online News, May 25, 2000

20. Perera, Quintus, **Lankan Entrepreneur Successful with US-Sri Lanka Tea Project**, Sunday Times – Financial Times, January 30, 2005, Colombo, Page 4.

21. Porter, Michael E, **The Competitive Advantage of Nations**, The Free Press, New York, 1998.

22. Sarvananthan, Muthukrishna, **An Introduction to the Conflict Time Economy of the North & East Province of Sri Lanka**, Working Paper –International Centre for Ethnic Studies, Colombo 2003.

23. Siriranjan, N & Joseph, J.J.R, **Improving the Competetitiveness of Sri Lankan Tea Industry**, Unpublished MBA Research Submitted to Postgraduate Institute of Management, University of Sri Jayawardenapura, Colombo, 2002.

24. Sivasupramaniam, V, **Tamil Diaspora**, sangam.org, Ilankai Tamil Sangam, USA, Inc. - The Association of Tamils of Sri Lanka in the USA, 2004.

25. Soysa, Mangala de, **The New World Economic Order**, Daily News, November 18, 2004, Colombo.

26. **Sri Lankan Ambul Banana in Japaneese Super Markets**, Daily Mirror – Financial Times, December, 07 2004, Colombo, Page 4.

27. Summers, Chris, **Tamils preying on Tamils,** BBC Online News, May 25, 2000.

28. **The Charm of Little Jaffna,** parisfranceguide.com, 2004.

29. **The Economic Significance of Diaspora,** World Economic Forum, 2004.

30. **Urgent Need to Bolster Support for NE Microfinance Sector**, Sunday Times – Financial Times, November 28, 2004, Colombo, Page 2.

31. Vidanage, Harinda Ranura, **Cyber Cafes in Sri Lanka : Tamil Virtual Communities,** The Lanka Academic, Vol. 6, No.74, May 31, 2005, USA.

32. **WTO recognition for Ceylon tea**, Daily News, October 11, 2003, Colombo.

# புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கள்

என். சிறிரஞ்சன்

இந்நூல் புலம் பெயர்ந்தவர்களிற்க்கும் தயாகத்திற்கும் இடையிலான பொருளாதார உறவுகள் பற்றியது. பொருளாதாரப் பங்களிப்புகள் எதிர்காலத்தில் குறைவடைந்து செல்வதாக இருக்கும் என்பதனை சுட்டிக் காட்டுவதனை நோக்கமாக கொண்ட இந்நூலில் அவ்வாறான நிலையினை எவ்வாறு எதிர்கொள்வது, தாயகத்திற்கான புலம் பெயர்ந்தவர்களின் பல்தரப்பட்ட பொருளாதாரப் பங்களிப்புக்கள் எத்தகயவை, அவற்றின் முக்கியத்துவம் யாவை, அவை மேலும் எவ்வாறு அதிகரிக்கப்படலாம் என்பது உட்பட்ட விடயங்களை கொண்டுள்ளது. சாதாரண வாசர்களை இலக்காக கொண்ட இந்நூலில் அடங்கியுள்ள இருபத்தைந்து கட்டுரைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன என்ற போதும் தனியே ஒரு கட்டுரையினை வாசிக்கும் வாசகருக்குக் கூட பயனுள்ள செய்தி ஒன்றினை வழங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.



**என். சிறிரஞ்சன்:** யாழ்ப்பாண மற்றும் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகங்களில் பயின்று முறையே வணிகமாணி, வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டங்களைப் பெற்ற இவர் இலங்கைச் சுங்கத் திணைக்களத்தில் பணியாற்றி வருவதுடன் கொழும்புப் பல்கலைக்கழத்தின் முகாமைத்துவ நிதிப் பீடத்தின் வருகை விரிவுரையாருமாவர். சாதாரண வாசகனும் அறிவூட்டப்பட வேண்டும் எனும் கருத்தியியலில் இயங்கிவரும் இவர் "பொருளாதார மேம்பாட்டுச் சிந்தனைகள்" எனும் நூலின் ஆசிரியருமாவார்.

ISBN 955-9429-74-4

9789559429746

குமரன் புத்தக இல்லம்

விடயம்: பொருளாதாரம், சமூகவியல்